Registered as a News Paper

பக்கம் - 26

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 15 | வெள்ளி - 25 | 20 - 26 - ஓகஸ்ட் - 2004



# திருமுக அறிமுகம்



தனிநாயகம் அடிகளார் கரம்பன் என்னும் கிராமத்தில் 1913 ஆம் ஆண்டு ஆவணி 2ஆம் திகதி பிறந்தார். சேவியர் என்ற இயற் பெயரைக்கொண்ட தனிநாயகம் அடிகளார் தனது ஆரம்பக்கல வியை பத்திரிசிரியார் கல்லூரி யிலும் கொழும்பு பொ்ணாந்து குருத்துவக்கல்லூரியில் கற்று தமது 21 வயதில் 1934 ஆம் ஆண்டு ரோமாபுரி உர்பன் பல்க லைக்கழகத்தில் கல்வியைத் தொடர்ந்தார்.

கலாநிதிப்பட்டம் பெற்ற பின்னர்

## தனிநாயகம் அடிகளார்

இவர் இந்தியாவுக்கு வந்து நெல்லைமாவட்டத்திலுள்ள வடக்கன் குளப்பிரதேசத்தில் ஆசிரியராகப்பணிபுரியத்தொடங்கினார். அங்கு பண்டிதர் குருசாமி சுப்பிரமணிய ஐயரிடம் நான்கு வருடங்கள் தமிழ் கற்றார். அப்பொழுது தான் ஒரு தமிழ்ப்பெயரைச்சூட்டிக்கொள்வது நல்லது என்று " ரோஜ் ஆண்டகை" கேட்டுக்கொண்டதற்கிணங்க தனிநாயகம் முதலி பரம்பரையில் தான் தோன்றியவர் என்பதை அறிந்து தனக்குச்சேவியர் ஸ்தனிஸ்லாஸ் தனிநாயகம் என்ற பெயரைச்சூட்டிக்கொண்டார். 1945 ஆம் ஆண்டு அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் தமிழ் முதுநிலை மாணவனாகச்சேர்ந்தார். தமிழ்த்துறைத்தலைவராக தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் பணியாற்றிய பொழுது அவரிடம் தமிழ் கற்கும் வாய்ப்பு இவருக்குக்கிட்டியது. அடிகளார் தமிழ் பண்பாட்டுக்கழகம் உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம் ஆகிய அமைப்புக்களை நிறுவி முதன்மை ஆசிரியராக இருந்து Tamil Culture என்ற ஆங்கில முத்திங்கள் ஏட்டினை நடாத்தி வந்தார். உலகளாவிய ரீதியில் பல ஆய்வுகளைச்செய்தார். 17 ஆங்கிலப்புலமையாளர்களுக்கும் 20 தமிழ்ப்புலமையாளர்களுக்கும் முன்னுரிமை கொடுத்து ஆய்வுக்கட்டுரைகள் எழுதியுள்ளார். சென்னை பல்கலைக்கழக அகராதி ஆக்கக்குழு உறுப்பினராயும் யாழ்ப்பாணத்தில் நடந்த நாலாவது உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டின் சிறப்பு மலர் வெளியீட்டின் செயலாளராகவும் பதவிவகித்தார்.

அடிகளார் ஒரு கிறிஸ்தவ பாதிரியாராக இருந்தபோதிலும் 1947 ஆம் ஆண்டு தமிழ் ஆராய்ச்சித்துறையில் முதுகலைமாணி(MA) பட்டத்தைப்பெற்றார். தொடர்ந்து 1949 ஆம்ஆண்டு தமிழ் இலக்கிய முதுகலைமாணி(MLIT) பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். இவர் திறனாய்வு செய்த பழந்தமிழ் இலக்கியத்தினை பார்வையிட்ட பேராசிரியர் 'கபில்சுவலபில்'பழந்தமிழ் இலக்கியங்களைப்பற்றி இதுவரை எழுதப்பட்ட அனைத்திலும் இந்நூல் சிறந்து விளங்குகிறது என்று போற்றியுள்ளார். இவர் வீரமாமுனிவர்பால் ஆரா அன்பு கொண்டவர். அவரது நூல்களைத் தேடி வாசிப்பதில் ஆர்வம் காட்டினார். பல்வேறு நாடுகளுக்குச்செல்லும் பொழுதெல்லாம் இலக்கியச்சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். 'தேம்பாவணி ஆராய்ச்சி", "திருக்காவலூர் கோயில்", "யேசுநாதர்", "பத்துப்பாட்டு", "ஆங்கில மொழிபெயர்ப்பு", திராவிடர் வரலாறு எனப்பல நூற்பதிவுகளை தூத்துக்குடியில் தாம் தோற்றுவித்த "தமிழ் இலக்கியக்கழகம்" ஊடாக வெளியிட்டார்.

தமிழின் சிறப்பை தனித்துவத்தை உலகறியச்செய்யவேண்டுமென்று அடிகளார் ஆசைப்பட்டார். அதற்காக அவர் சென்ற நாடுகள் ஏராளம். மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, இந்தோனேசியா, கம்போடியா, தாய்லாந்து, வியட்நாம், கனடா, ஜேர்மன், அமெரிக்கா, இத்தாலி, ரஷ்யா, ஸ்கண்டினேவியா என்று எல்லா நாடுகளுக்கும் சென்று தமிழ் விரிவுரைகளை ஆற்றித்தமிழுக்கு பெரும் தொண்டாற்றினார். அடிகளார் ஆய்வு செய்த தமிழ்த்தூது திறனாய்வுக்கட்டுரைகள் 1951 ஆம்ஆண்டு வெளியிடப்பட்டது.

1955 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 2ஆம் திகதி கொழும்புத்தமிழ் பண்பாட்டுச்சங்கம் ஏற்பாடுசெய்த கூட்டத்தில் "இலங்கையும் தமிழ்ப்பண்பாடும்", "நேற்றும் இன்றும் நாளையும் எனும் தலைப்பில் உரை நிகழ்த்திய அடிகளார் 'பழங்காலத்தில் தமிழரும் சிங்களவரும் இனமத மொழிவேறுபாடின்றி ஒற்றுமையாக வாழ்ந்தார்கள். இன்று இனவாதம் தலைதூக்கி ஆடுகின்றது. இந்த இனவாதத்தினை ஒழிக்கத் தமிழ், சிங்களம் ஆகிய் இரு மொழிகளும் ஆட்சி மொழிகளாக விளங்க வேண்டும் என்று கூறினார். 1956 ஆம் ஆண்டு ஆனி மாதம் 15 ஆம் திகதி சிங்களம் மட்டும் ஆட்சி மொழியானதை அறிந்து கொண்ட அடிகளார் மொழி உரிமைகளை மறுப்பது தீய விளைவுகளுக்கு வழி கோலும் என்று "இலங்கையில் மொழி உரிமைகள்" என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இந்தக்கட்டுரை 1956 ஆம் ஆண்டு ஆடி மாதம் 10 ஆம் திகதி வெளியிட்ட தமிழ் கலாசாரச்சஞ்சிகையில் வந்துள்ளது.

அடிகளார் 1955 ஆம் ஆண்டு இலண்டன் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து 2 ஆண்டுகள் கல்வி கற்று கலாநிதிப்பட்டம் பெற்றார். 1957 ஆம் ஆண்டு கலாநிதிப்பட்டம் பெற்று இலங்கைக்குவந்தார். இவரது தமிழ்ப்பற்றினை அறிந்த இலங்கையரசு இவரை கைது செய்யும்படி ஆணை பிறப்பித்தது. இதனால் மனம் உடைந்த அடிகளார் மலாய் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து "தமிழ் எங்கள் உயிர்" என்ற இயக்கத்தினை ஆரம்பித்தார். மேலும் சென்னை பல்கலைக்கழக அகராதிஆக்கக் குழுவில் உறுப்பினராகவும் விளங்கினார். நாலாவது உலகத்தமிழராய்ச்சி சிறப்பு மலர் வெளியீட்டின் செயலாளராக இருந்து ஆக்கபூர்வமான பல ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டார். தன் இறுதி மூச்சு வரை தமிழுக்கு தொண்டாற்றிய அடிகளார் 1980 ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார்.

# காரசாரம்

## விண் நோக்கி நடக்கப் போகிறோமா? நிலம் நோக்கி நடக்கப் போகிறோமா?

பெண்களைச் சீரழிக்கும், அல்லது பெண்களை இழிவுபடுத்தும், காட்சிகளுக்கு மட்டும், காட்சிகளுக் காக மட்டுமே திரைப் படங்களைத் தணிக்கை செய்கிறோம் எனில், அண்மைக் காலங்களில் வெளியிடப் பட்டுவரும் சினிமாக்களில் பெண்கள் ஆடையணிதலையும் ஆடுவதையும் மட்டுமே குறைத்துள்ளனர். அநேக மான படங்களில் பெண்கள் அரை யடி உடலை மட்டுமே மறைத்து நிற்க, ஆண்கள் முகத்தையும், கை களையும், (அதுவும் சில வேளை கையுறைகளால் மூடியிருக்கும்) மட் டுமே தெரியும்படி ஆடையணிகின்ற னர். அப்படியென்றால் பெண் அவ் வளவுக்கு அலட்சியப்படுத்தப் படுகி றாள். அல்லது அவமானப்படுத் தப்ப டுகிறாள். இவை தவிர ஒரு பெண் ணை: கதாநாயகன் துரத்தித் துரத்தி துன்புறுத்திக் (காதில் பூ) காதலிப்புச் செய்வான். பெண் பணக்காரியாகவும் இருக்கலாம் படித்தவளாகவும் இரு க்கலாம், கதாநாயகன் அடிதடியில் வல்லவன் ஆகவே அந்தப் பெண் ணை விரட்டிச் செல்வது நியாயப்ப டுத்தப்பட்டு அவளும் கடைசியில் அவனிடம் அடைக்கலம். ஒன்றா இரண்டா அநேக படங்கள் இதுதான். விளைவு- கல்லூரி, கல்வி நிலை யங்கள் முன் சபைக்குதவாத கும் பல்கள், தங்களைத் தாங்களே கதா நாயகர்களாக எண்ணிக் கொண்டு, பெண்களைத் துரத்துதல். இவை எல்லாவற்றையும் விழுங்கிச் சில படங்கள், விரும்பிய பெண்ணுக்குத் திடீர்த்தாலிகட்டி வீட்டுக்குக் கொண் டுவந்து பணியவைப்பது. தென்னிந் தியஆரியத்தின் கடைகெட்ட நம்பிக் கை தாலி. தாலிகட்டிவிட்டால் அவன் எப்படிப்பட்டவனானாலும், தான் எவ ரை விரும்பியிருந்தாலும், எல்லா வற்றையும் மறந்து, பெண் தாலி கட்டிவனுக்காக தன்னை மாற்றிக் கொள்ளவேண்டுமாம் தமிழ்ப்பண் பாடு. மனதில் ஒருவன் மறக்க முடி யாத நினைவாக நிற்க, தாலிகட்டிய வன், கண்கண்ட தெய்வமாகிவிடு வான், பெண்களுக்கென்றே எழுதப் படும் வசனங்கள் "என்னங்க; நான் பாவி.... என்னை மன்னிச்சுடுங்க" யார்; மனைவியைப் பாடாய்ப்படுத்தும் கணவன் திருந்திவரும்போது மனைவி பேசும் வசனம், கல்கியின் தியாக பூமியிலிருந்து. இன்றைய மூவேந்தர் திருமலை, கில்லி, சுள்ளான்வரை இதுதான் கதை. பெண் என்றால் ஆண்களின் வீம்புக்கு அடிமை, அவனைக் காதலிக்க அலைபவள், இதே படங்களில் ஒரு பகுதியாக கணவனை வணங்கிப் பணிந்து கிடந்து பத்தினியாகுபவள்.

மேலாக, பெண்களும் இப் போது தம்மை மாற்றிக் கொண்டு, சினிமா நடிகைகள் போன்று ஆடை அணிந்து செல்வதையும்,தன்னைச் சுற்றி எப்போதும் இளைஞர்கள் சுற்றித்திரிவதை விரும்புபவர்களா கவும் மாறிவருகின்றனர். இறுக்கமாக தொடையசைவுகளை வெளிக்காட் டும் பாவாடை அரையடி உயர்த்திய மிதியடி புட்டுக் குழல் போன்ற கால் சட்டை அதற்கு மேல் நடன மாதர் பாணியில் வயிறுதெரிய ஒரு மேற் சட்டை கொண்டை என குதிக்கால் களை உயர்த்தி நுனிக்கால்களினால் நடந்து செல்லும் போது (நாய் கலைத்தால்) ஆபத்து வராதோ, இவர் கள் வீதியைக் கடக்க வெகு நேர மாகும். இதைவிட்டால் இன்று சைக் கிளோடும் பெண்களுக்கு நான்கு கை கள் தேவை. ஒன்று குடைபிடிக்க ஒன்று சேலை அல்லது பாவாடை ஒதுக்க, மற்றது சைக்கிள் கைபிடி க்க. என "ஆடிக்காத்தில அம்மிக் குழவியே எழும்பிப் பறக்கும். ஆடைகள் எம்மாத்திரம். இவை தவிர சினிமா எங்கள் அன்றாட வாழ்க்கையில் ஏராளமான மாற்றங் களைக் கொண்டு வந்துவிட்டது. அன்றாடம் கூலி வேலை செய்யும் குடும்பங்கள்கூட தங்கள் வாழ்க் கையில் ஒரு கதாநாயகனாக, அல்லது கதாநாயகியாக தம்மைக் கற்பனை செய்து ஏங்குவது சதாரணமாக நடக்கிறது. என்றால் மாணவர்கள் தனியாகப் பார்க்கப்பட வேண்டியவர்கள். மாண வர்கள் என்றால் உயர்வகுப்பு மாணவர் களை மட்டும் கருத வேண்டாம். மூன்றாம், நான்காம், ஐந்தாம் ஆண்டு மாணவர்களைச் சொல் கிறேன். மாணவர்கள் பாடசாலை யில் குழுச்சேர்த்து அடிபடுகிறார்கள். ஏன் என்று கேட்டால்.... அவர் விஜய், இவர் அஜத் என்கிறார்கள். எனக்கு முற்காலத்தில் சிவாஜி, எம்ஜிஆர், சண்டைபிடித்த ஞாபகம் வந்தது. பரவாயில்லை எனக்கருதும் போது சாமுண்டி படத்தில் கதா நாயகனுக்கும் ககாநாயகிக்கும் இடையே உறவுப்பாலம் போடும் வாண்டுகள் நினைவுக்கு வரா மலில்லை. சிறுவர்கள் நிறையவே படம்பார்க்கிறார்கள். அவர்கள் சண் டைகளை மட்டும் ரசிக்கவில்லை. கோமுட்டித்தலையா, ஒட்டகமுதுகா, கூமுட்டை தக்காளி எதிர் போன்ற வகைச் சொற்களை நிறையவே கற்றுக் கொள்கின்றனர். ஒட்டு மொத்தமாக சினிமாத் தணிக்கை என்பது மின்சாரம் வந்தபிறகு கேள் விக்குறிதான். வீட்டுக்கு வீடு சூரிய சக்தி மின்கலம், சட்டி அன்ரனா, புதிய படங்களைக், காட்சிகளைப் போட்டி போட்டுக்கொண்டு சில நிலையங்கள் அரங்கேற்றுகிறன. எங்களைப்பற்றி நாங்களே முடி வெடுக்கும் நேரம் இது. நாங்கள் விண்நோக்கிப் போகிறோமா? நிலம் நோக்கி நடக்கப் போகிறோமா? என்று சிந்திப்போம். அதற்காக உணவுப்பஞ்சத்தை ஒழிக்க என்ன செய்யலாம் என்று கேட்டால் பட் டினி கிடக்கலாம், என்று சொல்ல வேண்டாம்.

மாயா

## பெண்களின் பிரச்சினையை பெண்களே கையாளும் நிலை எப்போது வரும்?

பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம், பெண்கள் ஆய்வு மையம்,பெண்கள் அபிவி ருத்தி நிறுவனம், பெண்கள் ஆய்வு வட்டம், பெண்கள் விடுதலை இயக் கம். அட்.அட.அட. பெண்களுக் கெண்டேதான் அவ்வளவும் இயங் குது. ஆனால் வாழ்க்கையைமிகச் சுலபமாக இந்த நிலையங்களில கழிக்கிற பெண்களின்ர தொகையும் கூடிக்கொண்டுதான் போகுது. போன முறை யாரோ ஏமாத்திப் போட்டா னெண்டு கர்ப்பத்தோட வந்தவா. இங்க வச்சிருந்து பிரசவம்பார்த்து ரெண்டு பேரையும் தாயையும் பிள்ளையையும் கவனிச்சு முடிய வீட்ட போறமெண்டு போனவா, பிற கும் ஏமாந்து போய் வந்து நிக்கிறா. அந்தப் பெண் அவ்வளவு ஏமாளி யாகத் தெரியவில்லை. படித்தவள், நாகரிகமாக இருந்தாள். மூன்று வய துக்குழந்தை அவளுடன் ஒட்டிய வாறே நின்றது. இப்ப என்ன செய் யப்போறாய். 'அவர் என்னை ஏற்கிற னெண்டு சொன்னவர் அதுதான்.'

"ம்......இப்ப ஏற்றுக் கொண்டாரோ" வவுனியாவுக்குப் போனவர் இன்னும் வரயில்லை. "ஏற்றுக்கொள்ளுவனெண்டா ஏற்றுக் கொள்ளுவன் என்னில நம்பிக் கையில்லையே. நம்பாட்டி... நான் உம்மோட பழகி என்ன பிரயோ சனம். இனி வரமாட்டன்." இந்த வசனம் எந்தப் பெண்ணையும் அச்சுறு த்தும், பலரறிய வந்து போனவன் பிறகு வராமப் போயிற்றா அவமானம். இனி என்ன செய்யிறது என்று அவனு டைய கோரிக்கைக்குப் பணிந்தால் வருவான் என நினைத்த நினைப்பில் மண்ணள்ளிப் போட்டு விட்டு அவன் வேறு பெண்ணைத் தேடிப் போய் விடுகிறான். இதுவே ஒவ்வொரு ஏமாந்த பெண்ணின் கதையுமாக உள்ளது. சரி என்னதான் கெஞ் சினாலும் எல்லாம் கலியாணத்துக் குப் பிறகு தான் என்றாலும், தனக்கு வளையக் கூடிய வேறிடத்தைத் தேடுகிறான். காதலிக்கும் போது கண் ணே மூக்கே என்பான். கல்யாணம் என்றால், ரெண்டு வருசம் போகட்டும். அம்மா சொன்ன படிதான் நடப்பன். என்றெல்லாம் ஆட அம்மா அடுத் தவர் சொத்தை எவ்வளவு வளைத் துப் போடலாம் என்று கணக்குப்போட, நாலுபேரறியக் காதல செய்தவன் காணாதவன் போல போக- பெண் தற்கொலை முயற்சியிலிறங் குகிறாள். எல்லாவற்றுக்கும் மேலாகப் பெண்ணுக்கே அவமானம். பெண்ணு க்கே அவமானம் என்ற பாரம்பரிய நக்கல். ஒரு பெண்ணின் கீழ்மைக்குப் பின்னால் ஒரு அயோக்கியன் இருக்கி றான். இந்த அயோக்கியன் இன்னான் என்று இனங்காட்ட முடியாமல் பெண் இறந்துவிட்டாலோ. குற்றவாளி மறைந்திருந்தாலும் அவன் மனச்சாட்சிக்குத் தெரியும். ஒவ்வொரு ஆணும் தன்தன் 'கற்பை'க் காப்பாற்றிக் கொண்டிருந் தால் ஒரு பெண்ணும் கற்பிழக்க மாட்டாள். நாளாந்தம் பெருகிவரும் இந்தப் பெண்களின் ஏமாறும் பெண் களின் நிலைக்குக் காரணமான வர்களைக் கண்டுபிடித்து பகிரங்க மாகத் தண்டனை வழங்க வேண் டும். பாலியல் வல்லுறவுகள் மரண தண்டனைக் குரியவை என்றால் நம்பவைத்து மோசடி செய்வது எந்தவகை. இப்படியே பெண்கள் காப்பகங்கள் பெருகப் பெருக, ஆண களின் நடத்தை பற்றியே கேள்வி யெழும் முறையாக ஒரு பெண் ணைத் திருமணம் செய்ய என்ன தடை. நாட்டின் எதிர்காலத்தையே சிதைக்கும் இந்தச் சமுதாயச்சீரழி வுக்கு முழுக்க முழுக்க யார் கார ணம். பாதிக்கப்படும் பெண்கள் சீறி யெழுந்து தம்மைக்காத்துக் கொ ள்ள, பாதிப்புக்கு ஈடு பெற எப்போது முடியப் போகிறது. பெண்கள் பிரச் சனையைப் பெண்களே கையாளும் நிலை எப்போது வரும். மண் விடுத லையோடு பெண் விடுதலையும் வரும் போலும் அதற்கு முன் தம்மை யிழந்த பெண்கள்- தங்கு தடை யின்றிப் பெருகட்டும் என விடலாமா?

# இருவேறு தமிழ் அடையாளங்கள்?

கடந்த கிழமை எழுதப்பட்ட பத்திதொடர்பாக சில நண்பர்கள் தெரிவித்த அபிப்பிராயங்களில் குறிப்பிடத்தக்கவை இரண்டு.

முதலாவது, தமிழ்நாட்டவர்களை அவர்களுடைய அரசியல் சூழலுக்குள்வைத்தே விளங்கிக் கொள்ளவேண்டும் எங்களுடைய நோக்கு நிலையிலிருந்து அவர்களைத் தியாகம் செய்யச் சொல்லிக் கேட்பது சரியா? என்பது.

இரண்டாவது, புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து தமிழ் நாட்டுக்கு வரும் சில ஈழத்தமிழ் படைப்பாளிகள் அங்குவைத்துக் கொடுக்கும் பேட்டிகளிலும் தெரிவிக்கும் கருத்துக்களிலும் புலிகளுக்கு எதிரான மற்றும் தமிழீழ விடுதலைப்போராட்டத்துக்கு

மூன்றாவது, மலையகத் தமிழர்களை அவர்களுடைய பின்னணிக்குள்வைத்தே, அவர்களுக்கேயான தனித்துவமான அரசியல் நிலைமைகளுக்குள் வைத்தே புரிந்து கொள்ளவேண்டும் அதைவிட்டு அவர்களை அங்கேயிருந்துகொண்டு ஈழப்போருக்குத் தீவிர ஆதரவு தரும்படி கேட்பது அவர்களை, அவர்களுடைய அரசியல்சூழலில் வைத்து பலியிடுவதில்தான் கொண்டு போய்விடும் என்ற தொனிப்பட வந்த அபிப்பிராயம்.

நாலாவது, மலையகப் படைப்பாளிகளும், மீடியாக்காரர்களும் ஈழப்போர்பற்றிய தமது நிலைப்பாட்டை தெளிவாக முன்வைக்க வேண்டும் என்ற அபிப்பிராயம்.

இந்த நாலாவது அபிப்பிராயமே தமிழகத்தின் மீடியாக்காரார் புத்திஜீவிகள் படைப்பாளிகள் போன்றோருக்குப் பொருந்தக்கூடியது.

தமிழகத்திலிருப்பவர்களை அவர்களுடைய சட்டச்சூழலுக்குள் அவர்களுக்கேயான அரசியல் சூழலுக்குள் வைத்துப்புரிந்து கொள்ளத்தான் வேண்டும். ஆனால் அது, அவர்கள் நீதியின்பாற்பட்டும், மனிதாபிமானத்தின் பாற்பட்டும் ஈழத் தமிழர்களின் வலிகளைப் பகிரத் தடையாயிருக்கக்கூடாது.

அண்மையில் வந்துபோன ஒரு இந்தியப்படைப்பாளி சொன்னார்... "உங்களுடைய வலியும் எங்களுடைய வலியும் ஒன்றுதான்" என்று. உண்மை. ஒன்றுதான். ஆனால்,

தலைவர்கள் புத்திஜீவிகள், மீடியாக் காரர்கள் போன்றோருக்கே மிக வாய்ப்பாக அமையும்.

புலிகள் பற்றி கதைப்பது சட்டப்பிரச்சினை என்றால் அதைப் பற்றித்தொடாமலேயே தமிழர்களின் வலிபற்றி கதைக்கமுடியாதா? இதைச் சில தனிநபர்கள் செய்தால்தான் பிரச்சினை. இதையே ஒரு பேரியக்கமாக வெகுசனத்தளத்தில் பரவலாக்கினால் எத்தனை பேரைத்தான் பொடாவின் கீழ் சிறையில்போட முடியும்? ஒரு கூர்மையான அவதானி அண்மையில் சொன்னார்.... வைகோ செய்ததையே ஒரு பத்தாயிரம் பேர் சய்திருந்திருந்தால் ஜெயலலிதாவால் எதுவுமே செய்திருந்திருக்க முடியாது என்று.

பிரிக்கப்படமுடியாத முப்பெரும் பூதங்கள். இந்த முப்பெரும் பூதங்களிடம் சிக்கியிருக் கும் தமிழர்களை இவை பூதங்கள் தான் என்பதை இன்னமும் விளங்கிக் கொள்ளும் பக்குவமற்றிருக்கும் பெருமளவு தமிழர்களை எப்படிதெளியவைப்பது? யார்வந்து தெளிய வைப்பது?

பேராசிரியர் அரசு சொன்னார் இப்பொழுது இந்திய நாடாளுமன்றத்தில் அமைச்சராயிருக்கும் கருணாநிதியின் பேரன் தயாநிதி மாறன் போன்றோர் தமிழ் அடையாளங்களை விளங்கிக் கொள்ளமுடியாதவர்களாம். அவரும் அவரையொத்த எல்லாப்புதிய தலைமுறைத் தமிழ்தலைவர்களினதும் மனங்களில் "புதியபதிவுகள்" வந்துவிட்டன என்று

> ***அண்மையில் வந்துபோன ஒரு இந்தியப்படைப்பாளி சொன்னார்... ''உங்களுடைய வலியும் எங்களுடைய வலியும் ஒன்றுதான்'' என்று. உண்மை. ஒன்றுதான். ஆனால் வலியைப்போக்கும் ஆகக்குறைந்தபட்ச நடவடிக்கைகளைக் கூட தமிழ்நாட்டுக்கலைஞர்கள் படைப்பாளிகள் பெருமெடுப்பில் செய்யவில்லை என்பதே இங்குள்ளபிரச்சினை.***
>
> ***அவர்கள் ஏதாவது செய்யவேண்டும் என்பதன் அர்த்தம் அவர்களை புலிகளாய் வாருங்கள் என்று அழைப்பதல்ல. புலிகளை ஆதரிப்பதில் அவர்களுக்கிருக்கும் சட்டரீதியான ஆபத்துக்கள் புரிந்துகொள்ளப்பட முடியாதவையுமல்ல. ஆனால் ஈழத்தமிழர்களின் வலி என்ற மனிதாபிமானப்பிரச்சினையைத்தொட அவர்கள் தயங்குவது ஏன்? அல்லது அதைத்தொட்டுப் படம் எடுப்போர் கன்னத்தில் முத்தமிட்டால், உயிரே போன்ற படங்களையே அதிகம் எடுப்பது ஏன்?***

பாதகமான விசயங்களே அதிகம் வருகின்றன. இதற்கு தமிழ் நாட்டிலுள்ள பலம் வாய்ந்த மீடியாக்கள் தரும் முக்கியத்துவமும் அதிகமாயிருக்கிறது. இத்தகைய ஒரு பின்னணியில் உதிரிகளாயிருக்கும் தமிழ் நாட்டின் படைப்பாளிகள் என்ன செய்யமுடியும்? என்பது.

இப் பத்தி இந்த இரண்டு கேள்விகளுக்குமான பதிலாய் வருகிறது.

முதலாவது கேள்விக்கு பதில் சொல்லமுன்பு, சில மாதங்களுக்கு முன்பு கிளிநொச்சியில் நடந்த ஒரு சந்திப்பைச் சுட்டிக் காட்டுவது பொருத்தமாயிருக்கும்.

யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு இலக்கிய விழாவிற்காக வன்னியூடாக வந்த மலையகப் படைப்பாளிகள் மற்றும் பத்திரிகையாளர் போன்றோர் போகும் வழியில் கிளிநொச்சியில், அழகியல் கலாமன்றத்தில் ஒரு சந்திப்பை மேற்கொண்டார்கள். கிளிநொச்சியிலுள்ள படைப்பாளிகள், கலைஞர்கள், மீடியாக்காரர்கள் போன்றோருடனான இச்சந்திப்பின்போது கொழும்புமைய மீடியாக்களில் தொழில்புரியும் சில மலையக மீடியாக்காரர்பற்றி ஒரு விமர்சனம் முன்வைக்கப்பட்டது. கடந்த ஆண்டு கொழும்பில் நடந்த *ஹிரு* கலைக் கூடல்பற்றி *தினகரனில* வந்த செய்திபற்றியே மேற்படி விமர்சனம் எழுந்தது. இந்த விமர் சனத்தையொட்டி நடந்த நீண்ட உரையாடலின் போது நான்கு விதமான அபிப்பிராயங்கள் வெளி வந்தன.

முதலாவது, மலையகத்திலிருந்து வந்தவர்கள் கிளிநொச்சிக்கு விருந்தினர்களாகவே வந்திருக்கிறார்கள். எனவே அவர்களை மனம் நோகச் செய்யாமல் அதாவது சர்ச்சைக்குரிய விவகாரங்களைத் தொடாமல் விருந்தைக்கொடுத்து சந்தோசமாக அனுப்பிவைக்கவேண்டும் என்பது.

இரண்டாவது, மலையகத் தமிழர்கள் கொழும்புமைய மீடியாக்களையே பெருமளவுக்கு தமது வெளிப்பாட்டுக்களமாக பயன்படுத்தி வரும் ஒருசூழலில் அவர்கள் கொழும்புமைய மீடியாக்களின் இனச்சாய்வு அரசியலுக்குள் சிக்கி தமிழீழ விடுதலைப்போராட்டத்தை கொச்சைப்படுத்தும் செயல்களுக்கு துணைபோகக்கூடாது என்பது.

அதாவது மலையகத்தின் அரசியல் சமூகபொருளாதார கலை நடவடிக்கைகள்யாவும் கொழும்புடன் பிணைக்கப்பட்டுள்ளன. கொழும்பின் பிரதான அரசியல் நீரோட்டத்துள் எவ்வளவுக்கு எவ்வளவு அவர்கள் கரைகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களுடைய அரசியலில் புரட்சிகரமான அம்சங்கள் குறைந்து கொண்டே போகும். அதுபோலவே அவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு கொழும்புமைய மீடியாக்களையே தமது வெளிப்பாட்டுக்களமாக கொண்டிருக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களுடைய படைப்புக்களிலிலும் போர்க்குணம்குறைந்து கொண்டேபோகும். அதாவது அன்றைய சந்திப்பில் கலந்து கொண்ட அன்ரனிஜீவா போன்றோர் கவலைப்பட்டதுபோல மலையகத்தின் இளம் படைப்பாளிகளின் படைப்புக்கள் பெருமளவுக்கு வீரியம் குறைந்தவைகளாகவே வெளிவரும்.

எனவே இத்தகையதொரு பகைப்புலத்தில் மலையகத்தமிழர்கள் புலிகளின் போராட்டத்தை மலையகத்துக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்று யாரும் அவர்களைக் கேட்கவில்லை.

பதிலாக அவர்கள் தமிழர்களின் சுதந்திரப்போராட்டம் பற்றிய தமது நிலைப்பாட்டை தெளிவாக எடுக்கவேண்டும். ஒருபடைப்பாளியாக மீடியாக்காரராக இருக்கும் எவருக்கும் இந்த தார்மீகக்கடப்பாடு உண்டு. இது விசயத்தில் தனது நிலைப்பாட்டை தெளிவாகக் கூறவேண்டியது ஒரு கலைத்தர்மமும், மீடியாத்தர்மமுமாகும் என்று சொல்லப்பட்ட ஒரு அபிப்பிராயம்.

அந்தவலியைப்போக்கும் ஆகக் கறைந்தபட்ச நடவடிக்கைகளைக்கூட தமிழ்நாட்டுக்கலைஞர்கள் படைப்பாளிகள் பெருமெடுப்பில் செய்யவில்லை என்பதே இங்குள்ள பிரச்சினை.

அவர்கள் ஏதாவது செய்ய வேண்டும் என்பதன் அர்த்தம் அவர்களை புலிகளாய் வாருங்கள் என்று அழைப்பதல்ல. புலிகளை ஆதரிப்பதில் அவர்களுக்கிருக்கும் 'சட்டரீதியான ஆபத்துக்கள் புரிந்து கொள்ளப்பட முடியாதவையுமல்ல. ஆனால் ஈழத்தமிழர்களின் வலி என்ற மனிதாபிமானப்பிரச்சினையைத்தொட

**நிலாந்தன்**

அவர்கள் தயங்குவது ஏன்? அல்லது அதைத்தொட்டுப் படம் எடுப்போர்; *கன்னத்தில் முத்தமிட்டால், உயிரே* போன்ற படங்களையே அதிகம் எடுப்பது ஏன்?

இதுவிசயத்தில் தேனிசை செல்லப்பா,ஓவியர் புகழேந்தி மற்றும் *காற்றுக்கென்னவேலி* படமெடுத்த இயக்குநர் புகழேந்தி போன்ற சில மிக அருந்தலான புறநடைகள் நீங்கலாக பெரும்பாலான தமிழகப் படைப்பாளிகள் புத்திஜீவிகள் மற்றும் மீடியாக்காரர்கள் சாட்சிகள் போலிருப்பது ஏன்?

தமிழ் வலி என்பது தமிழ் என்ற அடையாளத்தால்வந்த ஒன்று. அந்தவலியைப்பகிரவோ அல்லது புரிந்துகொள்ளவோ சகதமிழ்களால் முடியாதிருப்பது என்பது இந்தப் பிராந்தியத்தில் இருவேறு தமிழ் அடையாளங்களை உருவாக் கத்துடிக்கும் கொழும்பிலுள்ள சிங்களத்

வைகோ சிறையையேற்று தமிழர்களின் வலி பொதுவானது என்பதை நிரூபித்தார் என்பது உண்மையே. ஆனால், அவருடைய சிறைவாசம் ஒரு விவகாரமாகவோ அல்லது ஒரு அரசியல் பேரெழுச் சிக்கான காரணமாகவோ உருவாகமுடியவில்லை என்பதை இங்கேசுட்டிக் காட்ட வேண்டும். ஒரு பெரிய மந்தத்தனம் அங்கே எல்லாவற்றின்மீதும் மூடிக்கவிந்திருப்பதுபோல ஒரு தோற்றம்.

இந்த மந்தத்தனத்துக்குக் காரணம் அங்குள்ள மிகவும் ஸ்தாபிக்கப்பட்ட மீடியாக்களும் சினிமாவும்தான். தமிழகத்தை தெளியவைப்பது என்பது அங்கே தமிழர்களை தமிழ்ச் சினிமாவிலிருந்து விடுதலை செய்வதிலிருந்தே தொடங்கப்பட வேண்டும். இந்தியாவின் அதிகம் இலாபமீட்டும் ஒரு தொழில்துறை அது. அதோடு மோதி தமிழர்களை தெளியவைப்பது யார்?

மற்றது மீடியாக்கள். தமிழக மீடியாக்கள் எவ்வளவுக்கு சர்வவியாபகமாயுள்ளன என்பதை அண்மையில் கிளிநொச்சிக்கு வந்துபோன பேராசிரியர் அரசு விரிவாக எடுத்துச் சொன்னார். நன்கு ஸ்தாபிக்கப்பட்ட தமிழக மீடியாக்கள் மத்தியில் புலி எதிர்ப்பு அலை இன்னமும் ஓயவில்லை. இதுகாரணமாகவே புலம்பெயர்ந்துவாழும் சில ஈழத்தமிழ் படைப்பாளிகளுக்கு இந்தமீடியாக்களில் அதிகரித்த முக்கியத்துவம் தரப்படுகிறது. இது இப்பத்தியின் ஆரம்பத்தில் சொல்லப்பட்ட இரண்டாவது விசயம்.

தமிழகத்தின் அரசியல், சினிமா, மீடியா மூன்றும் ஒன்று மற்றதிலிருந்து

மவர் சொன்னார். கருணாநிதி தமிழ் அபிமானம் பற்றிக்கதைத்தால் "என்ன தாத்தா உங்களுக்கு வயதாகி அறிவு தடுமாறிவிட்டதா?" என்று கேட்கக் கூடிய ஒரு தலைமுறை யிடம் தமிழகத்தின் அரசியல் கைமாறி வருகிறது என்றதொனிப்பட பேராசிரியர் அரசு கதைத்தார்.

இந்நிலையில், தமிழகத்தின்வலியும் தமிழீழத்தின்வலியும் ஒன்றுதான் என்று தமிழகத்துக்கு உணரவைப்பது எப்படி? சில படைப்பாளிகள் மட்டும் புரிந்து வைத்திருக்கும் இந்த உண்மையை ஒரு வெகுசன அபிப்பிராயமாக மாற்றுவது எப்படி? தமிழ்ச்சினிமாவும் மீடியாவும் தமிழக அரசியலும் சேர்ந்துருவாக்கிய ஜனவசியம்மிக்க மாய உலகு ஒன்றிலிருந்து தமிழ்நாட்டை தெளிய வைப்பது என்பது எவ்வளவு விரக்தியூட்டவல்லது, எவ்வளவுக்கு வலி மிகுந்தது என்பதை பேராசிரியர் அரசுவும் இங்குவந்துபோன ஏனைய படைப்பாளிகளும் கதைத்தபோது உணர முடிந்தது.

தமிழ்சினிமாவோடும், தமிழக மீடியாவோடும் அவை உருவாக்கித் தந்திருக்கும் வாரிசு அரசியல், தனிநபர்வழிபாடு போன்றவற்றோடும் மோதும் அளவுக்கு சக்திமிக்க தனிநபர்களோ கட்சிகளோ அல்லது செயற்பாட்டுக்குழுக்களோ எதுவுமே அங்கு இப்போதைக்கு பேரியக்கமாயில்லை.

இந்நிலையில் ஈழத்தமிழர்கள் தமது விடுதலையை எப்படி முழுமைப்படுத்தப்போகிறார்கள் என்பதில்தான் தமிழகத்தின் தலைவிதியும் தொங்கிக்கொண்டிருக்கிறது.

இதன் அர்த்தம், டெல்லியில் உள்ளவர்கள் அனாவசியமாக அஞ்சுவதுபோல ஈழத்தமிழர்களின் விடுதலைப்போராட்டம் தமிழகத்தை இந்தியாவிடமிருந்து பிரித்துவிடும் என்பதல்ல.

மாறாக,ஒருபோராடும் இனம் என்ற காரணத்தாலும் இந்தப் பிராந்தியத்திலேயே பெருமெடுப்பில் புலம்பெயர்ந்த ஒரு சிறு இனம் என்ற காரணத்தாலும் ஈழத்தமிழ்களே தமது அடையாளத்தை புதிய மிலேனியத்துக்கு ஏற்றாற்போல புதுப்பிக்கத்தக்க அகப்புற நிலைமை களோடு காணப்படுவதால், இனிவரும் காலங்களில் ஈழத்தமிழ் அடையாளம் என்ற ஒன்றிலிருந்து நிறையக்கற்கவேண்டிய ஒருநிலையில் தமிழகம் மட்டுமல்ல சிங்களவரும் இந்தப்பிராந்தியத்திலுள்ள எல்லா மந்தித்துப்போன இனங்களும் இருக்கின்றன என்ற அர்த்தத்தில்தான். ●

வெகுவிரைவில் எதிர்பாருங்கள்...!
நேதாஜி எழுதும் புதிய அரசியல் தொடர்
தமிழ் தேசியமே தமிழர் இலட்சியத்தின் ஆதாரம்

# நறுக்கென...



சமாதானப்பேச்சுக்களுக்கு ஆதரவளிக்குமாறு பிரித்தானியாவிடம் சிறிலங்கா பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதுவும் ஒலிம்பிக்விளையாட்டுக்குச் சென்றவேளையில் எதென்ஸ் நகரில் வைத்து பிரிட்டிஷ் பிரதமர் ரொனி'பிளேயரி'டம் இதனை கூறியுள்ளார்.

நல்லவிடயம்தான்.

ஆனால் எப்போதாவது பிரிட்டன் சமாதான முயற்சிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்ததாகவோ. ஆதரவு தரமறுத்ததாகவோ செய்தி எதுவும் இல்லை!

யுத்தத்திற்கு ஆதரவாக ஆயுதங்களையும் ஏனைய இராணுவ உதவிகளையும் வழங்கிக்கொண்டே சமாதானத்தையும் வலியுறுத்தும் சனநாயகப்பாரம்பரியம் வல்லாதிக்க நாடுகளுக்கு எப்போதும் உண்டு. பிரிட்டனும் இதற்கு விதிவிலக்கல்லத்தான்.

சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்கு விடுதலைப்புலிகளை கொண்டுவருவதற்கு பிரிட்டன் உதவவேண்டுமாம்...

சமாதான பேச்சுவார்த்தைக்கு முன்னோடியாக. ஆரம்பத்தில் போரில் பெரும் வெற்றி பெற்றிருந்த நிலையிலேயே யுத்த நிறுத்தத்தை அறிவித்து தமது நல்லெண்ண சமிஞ்ஞையை வெளியிட்ட

## ஜே.வி.பியை அழைக்கும் திராணி உண்டா உங்களுக்கு?

வர்கள் விடுதலைப்புலிகள்தான். பின்னர் போர்நிறுத்த உடன்பாட்டையும். புரிந்துணர்வு உடன்பாட்டையும் இன்றுவரை அரசின் எரிச்சலூட்டும் நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் கடைப்பிடித்துவருபவர்களும் அவர்களே... ஒரு ஒழுங்குமுறையில் சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன். அவர்கள் பாராட்டும்வகையில் நடைபெற்றுவந்த கட்டம் கட்டமான பேச்சுவார்த்தைகளில் உலகம் பாராட்டும் வண்ணம் கலந்துகொண்டு இயங்கியவர்களும் அவர்கள்தான்.

பேச்சுவார்த்தைகள் தடைப்படவும் - இடைநிற்கவும் - இறுதியில் ஒருதேக்கநிலையை எட்டவும் காரணமானவர்கள் பலர்...முதலில் அமெரிக்கா... இந்தியா... பின்னர் சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா எனப்பலரும் இதற்குக் காரணமானவர்களேயாவர்.

ஒவ்வொருவருக்கும் நாட்டில் சமாதானம் ஏற்படுவதை விடவும் இந்த மண்ணில் அவரவர் அரசியல். இராணுவ. பாதுகாப்பு நலக்களை ஸ்திரப்படுத்தித் தமது மேலாதிக்க நலன்களை பேணுவதே இலக்காக இருந்ததால் சமாதான முன்னெடுப்பு நடவடிக்கைகளினூடாகவும் அதனையே மேற்கொள்ளமுயன்றனர். வாஷிங்டன் மாநாடு. இடைக்கால நிர்வாக அதிகாரசபை. போன்ற விடயங்களுடன் இவர்கள் நடந்து கொண்டவிதமே விடுதலைப்புலிகளை பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகிநிற்க வைத்தது.

இப்போது இவர்கள்தான் சமாதானத்தை வலியுறுத்துகிறார்கள்! சரி இப்போதாவது இவர்களிடம் இனப்பிரச்சினைக்கு நேர்மையான நீதியான தமிழ்மக்களின் அபிலாசைகளை நிறை வேற்றக்கூடிய உறுதியான தீர்வொன்றை முன்வைக்கவோ. ஏற்றுக்கொள்ளவோ மனப்பக்குவமோ விருப்பமோ கிடையாது... என்பது வெளிப்படையான உண்மையாகும்.

ஆனால் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை மேசைக்குவரவேண்டும் தாங்கள் விரும்பும் தீர்வை அவர்கள் தலையில் கட்டியடிக்க அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு சுமக்கவேண்டும்... இலங்கைக்கு நிதியுதவிகளை வழங்கி அதனூடாக தமது அரசியல் நலன்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். இதுதான் அவர்களின் விருப்பம்... இதெல்லாம் சாத்தியமாகாது என்பது வேறுவிடயம். நிற்க... ராஜபக்ஷரே...! சிறிலங்காவின் பிரதமரே...! சமாதானத்துக்கு ஆதரவளிக்க பிரிட்டனை அழைத்தது கிடக்கட்டும் முதலில் மிகமுக்கியமானதாக ஜே.வி.பியினரை அழைக்க உங்களுக்குத் திராணியுண்டா கூறுங்கள்?

---



பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக அதிகாரசபைத் திட்டத்தை அடித்தளமாகக் கொள்ள வேண்டும் என்ற தமிழ் மக்கள் தரப்பின் நியாயமான கோரிக்கையை புறந்தள்ள நினைக்கும் அரசு... அதாவது சனாதிபதி அதற்குப் பதிலாக மாற்று யோசனைகள் அடங்கிய திட்டமொன்றை தயாரித்து வருகிறது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக சிங்கள அரசுகள் இது வரை எத்தனையோ தீர்வுத் திட்டங்களை தயாரித்த போதிலும் அவையாவும் தமிழினத்தை முற்றாகத் தீர்த்துக் கட்டும் இலக்கினையே உள்நோக்கமாகவும். தொலை

## மாற்றுத்திட்டமா...? ஏமாற்றும் திட்டமா...?

நோக்காகவும் கொண்டிருந்தமையை தமிழ் மக்களின் தேசியத் தலைமை தீர்க்கமாகப் புரிந்து கொண்டமையாலேயே அவற்றை தமிழ் மக்களின் தலையில் கட்டியடிக்க முடியாமல் போயிற்று.

ஆனாலும் புதிய புதிய திட்டங்களை-அரசியல் சூழ்ச்சிப் பொறிகளை அவர்கள் தயாரிப்பதில் என்றுமே சலித்ததில்லை.

இதே சந்திரிகா 1995 இலும் பின்னர் 2000 மாம் ஆண்டிலும் அதிகாரப்பரவலாக்கல் என்ற பெயரில் தீர்வுப் பொதிகளைத் தயாரித்து அதனை அப்போதைய அவரது அமைச்சர்களான பேராசிரியர் G.L.பீரிஸையும் அந்தப் பெரும் 'ஆமா'ப் பேர்வழியும் அப்போதைய அம்மணியின் வெளியுறவு அமைச்சருமான லக்ஷமன் கதிர்காமரையும் நாடு நாடாகச் சுமக்க வைத்து பிரசாரம் செய்யவைத்த மோசடியை தமிழ்மக்கள் மறக்கவே மாட்டார்கள்.

அம்மணியார் இப்போது மாற்றுத்திட்டம் ஒன்றை அவசர அவசரமாக தயாரித்து வருகிறாராம்.

பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கப்படும் போது அரசாங்கம் எதனை வலியுறுத்தப் போகிறது என்பதை எடுத்துக்காட்டவே இதனை அரசு தயாரிக்கிறதாம். நிச்சயமாக இது இடைக்கால நிர்வாக அதிகார சபை யோசனைகளுக்கான மாற்றுத் திட்டமாக அமையப் போவது கிடையாது.

இது ஒரு 'ஏ' மாற்றுத் திட்டமாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இதனை முன்வைப்பதன் மூலம் அம்மணியார். ஜே.வி.பியை ஏமாற்றத் திட்டமிடுகிறார். சர்வதேச சமூகத்தை ஏமாற்ற யோசிக்கிறார். சிங்கள மக்களை சமாளிக்கத் திட்டமிடுகிறார். பேரினவாதிகளை திருப்திப்படுத்த திட்டமிடுகிறார் ஒட்டுமொத்தமாக தமிழ் மக்களை பேய்க்காட்டத் திட்டமிடுகிறார். கடைசியில் விடுதலைப் புலிகளுக்கு சினமேற்றி அவர்களின் பொறுமையைச் சோதித்து அவர்களைப் போர்க் கோலம் கொள்ள வைக்கத் திட்டம் போடுகிறார் என்றே கூற வேண்டும்.

ஒரே கல்லில் பல மாங்காய்களை வீழ்த்தத் திட்டமிடும் சனாதிபதி அம்மணியின் தலையில் தான் கல்வந்து விழுந்தாலும் எவரும் ஆச்சரியப்படப் போவதில்லை...

அவதந்தரம் தனக்கந்தரமாகி முடிவுறுது தானே வழக்கம்.

அம்மணியின் மாற்றுத்திட்ட ஏமாற்றுத்திட்டம் தோற்றுப் போகும் என்பது மட்டும் உறுதியாகும்.



உட்கட்சி முரண்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில் கட்சித்தலைமைப் பதவியைவிட்டு மெல்லத் தன்னைத்தானே கழற்றிவிட்டுக் கொண்டுள்ள அந்த அதிஉத்தம சனாதிபதி அம்மையார் தனது தோழமைக்குரிய முன்னாள் சிவப்புத் தோழர்களே எதிரிகளாகிவரக்கூடிய சாத்தியத்தை முன்கூட்டியே உணர்ந்து செயற்படத் தொடங்கியுள்ளார் போல் தெரிகிறது.

சாட்சிக்காரன் காலில் விழுவதை விட சண்டைக் காரனின் காலில் விழுவது மேல் என

## சாட்சிக்காரனின் காலில் விழுவதா? சண்டைக்காரனின் காலில் விழுவதா?

எண்ணினாரோ தெரியாது. இன்று அவருக்கு ஏற்பட்டுள்ள பன்முனை நெருக்கடிகள். அழுத்தங்களில் இருந்து விடுபடவும். தனது ஆட்சியதிகாரப்பதவி நிலையை பாதுகாக்கவும். எதிர்கால அரசியலில் தனது நிலையை தொடர்ந்தும் ஸ்திரப் படுத்திக் கொள்ளவும் மாற்று வழியொன்றை தற்காலிகமாக வேனும் தேட வேண்டிய அத்தியாவசியம் அவருக்கு இப்போது ஏற்பட்டுவிட்டது.

தோழில் கைபோட அனுமதிவழங்கியதை வேறுவிதமாகப் பயன்படுத்த நினைத்த தோழமைக்கு தகுதியற்ற தோழர்களான ஜே.வி.பியினர் இப்போது அவரின் தோழிற்கு மேல் தலையிலேயே ஏறிக்குந்திக் கொண்டு தாமே தலைவர்கள் என்று காட்டிக்கொண்டு அரசாங்கத்தையும் ஏன் அவரையுமே ஆட்டிப்படைக்க முயலும் அயோக்கியத்தனத்தை அவரால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. போலும்.

கடைசியில் அந்த நிரந்தர அரசியல் எதிரியான... தன்னால் ஆட்சிப்பொறுப்பிலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் பிரதமரும் இந்நாள் எதிர்கட்சித்தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவை அழைத்து பேச முடிவு செய்துள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

உண்மையில் இந்தச் சந்திப்பு சமாதானப் பேச்சுக்களில் இருதரப்பு ஒத்துழைப்புக் குறித்துப்பேசுவதற்காகவோ. அல்லது வேறு ஏதாவது தேசியநலன் குறித்துப் பேசுவதற்காகவோ அல்ல. இருதரப்பினரதும் சொந்த அரசியல் வியாபாரத்திற்கு எதிர்காலத்தில் ஏற்படக்கூடியதானசில ஆபத்துக்களை தவிர்த்து தமது வழமையான அரசியலை எப்படி வெற்றிகரமாக தொடர்வது என்பது குறித்துப் பேசுவதற்காகத்தான் என்பது தெரியவந்துள்ளது.

ஏற்கெனவே சந்திரிகா அம்மையாருக்கு ஜே.வி.பியினரால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் நெருக்கடிகளால் அவர் பல்வேறு அழுத்தங்களுக்குள்ளாகியுள்ள நிலையில் தாம் ஒரு பிசாசுக் கூட்டத்துடன் தோழமை கொண்டுவிட்டோமே என்ற பயம் அவரை பீடித்துள்ள நிலையில் ஜே.வி.பி இன்னும் சில காலங்களில் தம்மையே விழுங்கிவிடும் ஆபத்து உருவாகியுள்ளதை உணர்ந்துள்ள அவர். இதை வளர விடுவது நல்லதல்ல என முடிவு செய்துள்ளார் போல் தெரிகிறது.

ஏற்கெனவே ரணிலுக்கும் ஜே.வி.பி தொடர்பான அச்சம் நடந்து முடிந்த தேர்தலுடன் அதிகரித்துவிட்டுள்ள நிலையில். இருவரும் தமது அரசியல் நலன்களைப் பாதுகாக்க சந்திப்பதும் பேசுவதும் அவசர அவசியமாகிவிட்டது. அவ்வளவுதான்.... இந்தச் சந்திப்பு சமாதனத்திற்கு ஏதும் உதவுமென எவரும் நம்பினால் அம்போல்தான்....!

இருவர் ஒருவர் பண்டாரநாயக்காவின் வாரிசு.. மற்றவர் ஜே.ஆர் ஜெயவர்த்தன பாரம்பரியத்தில் வந்தவர்....

சமாதானத்தை முழுமையாகக் கொண்டுவர இவர்களால் முடியும் என எவரும் நம்பலாம்?

---



'வடக்கு கிழக்கைப் பிரித்து தனியான நிர்வாகம் ஒன்று நடைபெறுமானால் கொழும்பில் வெள்ளவத்தை. பம்பலப்பிட்டி முதலிய இடங்களில் வாழும் தமிழர்களின் நிலை என்னவாகும் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். இவ்வாறு தமிழ் மக்கள் மீதான கரிசனை(!?) யுடன் அறிக்கை விட்டிருக்கிறார் விவசாய அமைச்சர் அநுர குமார திஸ்ஸநாயக்கா.

அன்னார் ஒரு ஜே.வி.பி க்காரர் என்பதை கவனத்தில் கொள்வது அவசியம்.

தான் மிகுந்த பொறுப்புணர்வுடன் பேசியதாக அவர்

## முதலைக் கண்ணீர் வேண்டாம் தாயகம் தமிழர்களை பாதுகாக்கும்!

நினைக்கலாம். ஆனால் அவருக்கு வரலாறு தெரியாத அறியாமைக்காக அவருக்காக நாம் அனுதாபப்பட வேண்டும்.

வடக்கு கிழக்கு இன்னமும் தனியாகப்பிரியாத நிலையில் கொழும்பிலும் ஏனைய தென் பகுதிப்பிரதேசங்களிலும் வாழும் மக்கள் எத்தகைய மனோபலத்துடனும். நம்பிக்கையற்றநிலையிலும். பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் மிக்க சூழலில் 1958 முதல் இன்றுவரை வாழ்ந்து வந்திருக்கிறார்கள்; வாழ்கிறார்கள். என்பது அந்த அரைகுறை அமைச்சருக்கு தெரியாமல் இருக்கலாம்.

1958ஆம் ஆண்டில் பண்டாரநாயக்கா ஆட்சியின் போது சிங்களப்பேரினவாத வெறியர்களின் -அரசியல்வாதிகளின் -மதவாதிகளின் காட்டுமிராண்டித்தனமான நெறிப்படுத்தலில் சிங்களக்காடையர்களால் அரங்கேற்றப்பட்ட தமிழ்மக்களுக்கு எதிரான இனக்கலவர வன்முறைகளின் போது அவர் தற்போது குறிப்பிட்டுள்ள வெள்ளவத்தை. பம்பலப்பிட்டி வாழ் தமிழ் மக்கள் எத்தகைய இழப்புகளை. அவமானங்களை. கொடுமைகளை. அழிவுகளை எதிர்கொண்டார்கள் என்பது இந்த அரைகுறை அமைச்சருக்கு தெரியாது போலும்.

அப்போது அதைக்கைகட்டி மௌனமாக அங்கீகரித்த பண்டாரநாயக்க அந்த மக்களைப்பாதுகாக்கும் வல்லமையோ. மனமோ கொண்டிருக்கவில்லை. இனக்கலவரத்தீயில் வெந்து நொந்த அந்த மக்களை ஏதிலியரான நிலையில் கப்பல்களில் ஏற்றி உங்கள் இடத்திற்கு நாட்டிற்கு போங்கள் என வடக்குக்கு அனுப்பிவைக்கத்தான் அவரால் முடிந்தது. இதேநிலைதான் 1977.1983 ஆகிய காலத்திலும் சிங்கள இனவாதிகளாலும் ஜெயவர்த்தனா போன்ற அரசியல் குண்டர்களாலும் தமிழ் மக்களுக்கு கொழும்பில் ஏற்பட்டது என்பது வரலாற்றுப்பதிவாகவே உள்ளது.

இதெல்லாம் திஸ்ஸநாயக்கா என்ற அந்த அரைகுறை அமைச்சருக்குத் தெரியாது என்றால்... அவர் கரடிவிட முயல்கிறார் என்றே அர்த்தம். இன்று கொழும்பில் வாழும் தமிழ் மக்களின் ஆத்மபலம் வடக்கிலும் கிழக்கிலும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் நிலவும் அவர்களின் இராணுவ மற்றும் அரசியல் பலத்தின் பாற்பட்டதேயாகும்.

சிங்கள அரசோ. அல்லது ஜே.வி.பியோ தங்களைப்பாதுகாக்கும் என அவர்கள் ஒரு போதுமே நம்பியிருக்கவில்லை. அப்படி எவரும் நம்பினால் அவர்கள் அரச துணைப்படையில் கைக்கூலி அடிமைகளாக இருப்போர்களாகவே இருக்கமுடியும். அரைகுறை அமைச்சரே தமிழ் மக்களுக்காக நீங்கள் முதலைக்கண்ணீர் விடவேண்டாம். அவர்களின் தாயகம் அவர்களைப்பாதுகாக்கும்.

**செங்குட்டுவன்**

# ஒரு தேசத்தின் பாதுகாவலனாக கடமைபுரியும் புலனாய்வாளன்

**ஆபத்துமிக்க காலகட்டத்தில்தான் ரஷ்யாவைச்சேர்ந்த ஒரு திறமையான புலனாய்வாளன் மிகமுக்கியமான தகவல்களை ரஷ்ய தலைநகரான மொஸ்கோவிற்கு அனுப்பிக்கொண்டிருந்தான்.**

**அப்புலனாய்வாளன் சிறந்த பத்திரிகையாளனாக, அறிவாற்றலுள்ள ஆய்வாளனாக, கூர்மதியுள்ள அரசியல்வாதியாக என எல்லாவகையிலும் வெளிப்படுத்தும் நபராக ஜப்பான் தலைநகரான டோக்கியோவில் நிலைபெற்றிருந்தான், அந்நபர்தான் றிச்சட் ஜோர்ஜ்.**

பூகோளத்திலுள்ள ஒவ்வொரு தேசமும் தம்மை பாதுகாத்துக்கொள்ள அயல்தேசங்களினது அரசியல், இராணுவ, புலனாய்வு மூலோபாயங்களை, தந்திரோபாயங்களை அறிந்துகொள்வதில் அதிமுக்கிய கவனத்தை செலுத்தி வருகின்றன. அத்தகைய புலனாய்வு பணிகளுக்கான உளவு வலையமைப்பை உருவாக்க அர்ப்பணிப்புமிக்க புலனாய்வாளர்களை புலனாய்வுப் போர்க்களத்தில் ஈடுபடுத்தி வந்துள்ளன, வருகின்றன, வரவுமுள்ளன.

இப்படியான புலனாய்வுப் போர்ப் பணிகளில் சிறப்பாக செயலாற்றி திருப்பங்களை ஏற்படுத்தியுள்ள புலனாய்வாளர்களுக்குள் இருவரது உண்மை நிகழ்வுகளை உலக புலனாய்வு வரலாற்றிலிருந்து மீட்டுப் பார்ப்போம்.

இரண்டாம் உலகயுத்த காலப்பகுதிகளின்போது ஜேர்மனியர்கள் ஐரோப்பாவிலுள்ள பல நாடுகளை ஆக்கிரமித்திருந்தார்கள். இவ் ஆக்கிரமிப்புப் போரில் முழுமையாக ஈடுபட்டுவந்த ஜேர்மனியர்கள் ரஷ்யாவை ஆக்கிரமிக்கும் இலக்குடன் பெரும் படையெடுப்பொன்றை முன்னெடுத்தார்கள்.

அப்படையெடுப்புக்கான முன் தயார்ப்படுத்தல்களாக ஜேர்மனியர்களின் கூட்டுநாடான ஜப்பான் ரஷ்யாவின் கிழக்கு முனையிலும் ஜேர்மனியர்கள் ரஷ்யாவின் மேற்கு முனையிலும் தத்தமது படைகளை நிலை நிறுத்திவைத்திருந்தார்கள்.

இவ்யுத்த அபாயநெருக்கடி மிகுந்த காலகட்டத்தில் இராணுவ அசைவு எந்தப்பக்கத்திலிருந்து வரும் என்பதை அறிவதில் ரஷ்யாவிற்கு கடினமாகவே இருந்தது.

இவ்வரலாற்று ஆபத்துமிக்க காலகட்டத்தில்தான் ரஷ்யாவைச் சேர்ந்த ஒரு திறமையான புலனாய்வாளன் மிக முக்கியமான தகவல்களை ரஷ்யத் தலைநகரான மொஸ்கோவிற்கு அனுப்பிக்கொண்டிருந்தான்.

அப்புலனாய்வாளன் சிறந்த பத்திரிகையாளனாக, அறிவாற்றலுள்ள ஆய்வாளனாக, கூர்மதியுள்ள அரசியல்வாதியாக என எல்லாவகையிலும் வெளிப்படுத்தும் நபராக ஜப்பான் தலைநகரான டோக்கியோவில் நிலைபெற்றிருந்தான். அந் நபர்தான் றிச்சட் ஜோர்ஜ்.

அவர் அனுப்பிக்கொண்டிருந்த பல தகவல்களில் முக்கியமான தகவல்கள் யாதெனில், ஜப்பான் பசுபிக் சமுத்திர பிரதேசத்தின் யுத்தத்திற்காக படைவீரர்களை திரட்டிக்கொண்டிருக்கின்றது என்றும கவாய்தீவில் பேர்ண்துறைமுகத்தில் அமைந்த அமெரிக்கக் கடற்படைத் தளத்தை தாக்கத்திட்டமிட்டு வருகின்றதென்றும் அமைந்திருந்தன. மேலும் அவர் தனது அறிக்கையில் ரஷ்யாவிற்கு எதிரான யுத்தத்தில் ஜப்பான் ஜேர்மனியுடன் சேராது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இத்தகவல்களை ஸ்டாலின் பெற்றுக்கொண்டதனை அடுத்து ரஷ்யா கிழக்குமுனையில் நிலைபெற்றிருந்த விசேடபயிற்சி பெற்ற படைப்பிரிவுகளை மொஸ்கோவிற்கு திருப்பி அழைத்து ஜேர்மனியர்களின் ஆக்கிரமிப்பிற்கு எதிரான போரில் ஸ்டாலின் ஈடுபடுத்தினார். அத்தகைய தீர்மானத்தால். அப்போரில் ரஷ்சியர்கள் ஜேர்மனியர்களை விரட்டியடித்து ரஷ்யாவைப் பாதுகாத்தார்கள்.

இவ்வரலாற்றுத் திருப்புமுனைக்கு முக்கியகாரணமாக ஜோர்ஜ்சின் புலனாய்வுத்தகவல்கள் இருந்துள்ளன. அத்தகவல்களைப் பெறுவதற்கு அவர் ஜேர்மனிய பத்திரிகையாளராக மாறுவேடம் தரித்து நடமாடி உளவு வலை அமைப்பை உருவாக்கி இருந்ததர். அதுவும் ஒரு குறுகிய காலத்துக்குள் ஜப்பானில் விரிந்து பரந்து செயற்படக்கூடியவாறு வலையமைப்பை உருவாக்கி பல மூல வளங்களிலிருந்து இரகசியத் தகவல்களைப் பெற்றுவந்தார்.

அம் மூலவளங்களில் சிலரே ஜப்பான் அமைச்சர்கள், தளபதிகள், தொழிலதிபர்கள் ஆகியோராகும். அத்தோடு டோக்கியோவில் அமைந்துள்ள ஜேர்மனிய தூதுவர் அலுவலகம் மூலமாகவும் ஜோர்ஜ் அவ்வப்பொழுது முக்கியமான இராணுவ, அரசியல் தகவல்களைப் பெற்றுவந்தார். இவ்வாறுபெறப்பட்ட புலனாய்வுத்தகவல்களே ரஷ்யாவை ஜேர்மனிய ஆக்கிரமிப்புப் போரிலிருந்து காப்பாற்ற உதவின.

அத்தகைய மேன்மையான புலனாய்வுப்பணியில் ஜோர்ஜ் அர்ப்பணிப்புடன் செயலாற்றியதற்காக ரஷ்யா பாக்குவில் ஒரு வீதி அவரது பெயரைத்தாங்கியுள்ளது. றிச்சாட் ஜோர்ஜ் என்கின்ற கப்பல் தண்ணீரில் மிதந்து செல்கின்றது. அவரது முகம் ரஷ்யதபால்தலையில் பொறிக்கப்பட்டுள்ளது. இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக ஜோர்ஜ் ரஷ்யா நாட்டின் மாவீரன் ஆக்கப்பட்டுள்ளார்.

அடுத்ததாக அமெரிக்க சுதந்திரப்போரில் திருப்புமுனை ஏற்பட முக்கிய பங்கை வகித்த தளபதி வோஷிங்ரனின் புலனாய்வுப்பணி பற்றி இங்கு நோக்குவோம்.

அமெரிக்காவை 1776ஆம் ஆண்டு பிரித்தானிய படைகள் ஆக்கிரமித்திருந்தன. இவ் ஆக்கிரமிப்பிலிருந்து அமெரிக்கா சுதந்திரமடைவதற்கான போரில் தளபதி வோஷிங்ரன் ஈடுபட்டுவந்தார். இப்போரின் போது வோஷிங்ரனின் படை உயிர் இழப்புக்களாலும் விட்டோடும் சம்பவங்களினாலும் ஒரு சில ஆயிரம் தீவிர போக்குள்ள சுதந்திரப்படை வீரர்களைக் கொண்டதாகக்குறைந்து போயிருந்தது.

அதனால் சுதந்திரப்படை வீரர்கள் ரெறன்ரன் எனும் இடத்தில் "டெலவார்" ஆற்றைக்கடந்து பாதுகாப்பாக நிலைகொண்டிருந்தார்கள். அவர்களை பட்டினியும் குளிரும் சாகடித்துவிடும் என்பதனால் புரட்சி எழுச்சி வீழ்ச்சி அடைந்துவிடுமோ என வோஷிங்ரன் எண்ணினார்.

அம் மனநிலையிலே வோஷிங்ரன் வாழ்ந்துள்ளதற்கு சான்று பகர்வதாக, அவர் தன் சகோதரன் ஜோன் என்பவருக்கு தன் உளச் சுமையைக் குறைப்பதற்காக எழுதிய கடிதங்கள் ஒன்றில் "இவ்விளையாட்டு அநேகமாக முடிவடையும் தறுவாயிற்கு வந்துவிட்டதென நான் எண்ணுகிறேன்" என்று குறிப்பிட்டிருந்தார்.

இப் பெரும் நெருக்கடியான காலகட்டத்தில்தான் வோஷிங்ரனின் புலனாய்வாளனான ஹனிமன் ரெறன்ரனில் நிலைகொண்டிருந்த பிரித்தானிய படையினருக்குத் தான் தீவிர விசுவாசி என்ற நடிப்புடன் பிரித்தானியாவுடைய முழு நம்பிக்கைக்குரியவராக செயல்பட்டு வந்தார். பிரித்தானியாவுக்கு உளவு பார்ப்பது போல நடித்துக்கொண்டு உண்மையிலே வோஷிங்ரனின் புலனாய்வாளனாக இயங்கினான்.

— நீலன் —

ஹனிமன் மாட்டு வியாபாரியாகவும், இறைச்சிக் கடைக்காரராகவும் இருந்ததனால் பிரித்தானியப் படைகளுக்கான இறைச்சி வழங்குபவராகவும் இருந்துள்ளார். இறைச்சிகாக மாடுகளை வேட்டையாட செல்லும் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி "டெலவார்" ஆற்றினைக் கடந்து பாதுகாப்பான சந்திப்பொன்றை வோஷிங்ரனுடன் வெற்றிகரமாக செய்தார்.

அச்சந்திப்பின் போது பிரித்தானிய படைகளின் விழிப்பு நிலையை தளர்வடையச் செய்யத்தக்க தகவல்களை பிரித்தானிய தளபதிக்கு வழங்குவதற்கான திட்டம் வகுக்கப்பட்டது.

அதாவது அமெரிக்க புரட்சிப்படையினர் பட்டினியாலும், குளிராலும் உடல் சோர்ந்து இருப்பதாகவும் அவர்களால் நகர்ந்து ஒரு தாக்குதலை செய்யமுடியாது இருப்பதாகவும், ஒருவாறு உயிர்வாழ்ந்து கொண்டிருப்பதாகவும் இதனால் வோஷிங்ரனின் சுதந்திரப்படையில் ஒழுங்காற்று முறை முற்றுமுழுதாக சீர்குலைந்து கலகஞ் செய்யும் தறுவாயிலுள்ளதாகவும் என்கின்ற அடிப்படையிலான தகவல்கள் ஹனிமன் பிரித்தானிய படைத்தளபதி ரல் என்பவரிடம் வழங்குவதாகும். வோஷிங்ரன் திட்டப்படி ஹனிமன் வழங்கிய தகவலைப் பெற்றுக்கொண்ட 'ரல்' இனிமேல் வோஷிங்ரன் படையால் ஆபத்துகள் ஏதும் வரப்போவதில்லை என்கிற தீர்மானத்திற்கு வந்து கிறிஸ்மஸ் பண்டிகையை குதூகலமாகக் கொண்டாடுவதற்கான அனுமதியை படையினருக்கு வழங்கினார். கிறிஸ்மஸ் பண்டிகையை "றம்" மது பானத்தால் பிரித்தானியப்படையினர் கொண்டாடினார்கள். அவர்கள் மிதமிஞ்சிய குடிவெறியில் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தார்கள்.

இச்சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த வோஷிங்ரன் தன் படையினர்களுடன் திடீரென டெலவார் ஆற்றை மீண்டும் கடந்து "ரெறன்ரனை" அதிகாலை வேளையில் மின்னல் வேகத்தில் தாக்கி ஒரு ,அமெரிக்கரையும் இழக்காமல் மீளக் கைப்பற்றினார். இதுவே சுதந்திரப்போரில் அமெரிக்கா காட்டிய முதற் பெரிய வெற்றியாகும்.

இவ்வெற்றிமுற்றிலும் எதிர்பாராததாக இருந்ததனால், வீழ்ச்சியடையும் கட்டத்தில் இருந்த சுதந்திரப்போரிற்கு வோஷிங்ரன் புத்துயிர் ஊட்டினார். புரட்சி இன்னும் உயிர்த்துடிப்புடன் தான் இருக்கின்றது என்பதை அமெரிக்கர்களுக்கு உணர்த்தியதாக தாக்குதல் வெற்றி அமைந்தது.

இவ்வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்த புலனாய்வுப் பணிக்காக புகழுரை எதையும் ஹனிமன் வேண்டி நிற்கவில்லை. தனது பணியைத் திறம்படச் செய்து முடித்ததனால் ஏற்பட்ட ஆத்மதிருப்தியை தவிர வேறெந்தப்பலனையும் அவர் எதிர்பார்க்கவில்லை. அவர் 93 வயது வரை வாழ்ந்து இறந்தார்.

அவர் இறந்த பின்பும் வாழ்ந்து வருகின்றார். அதாவது அமெரிக்காவிலுள்ள லமிங்ரன் கிராமத்தில் பழைய இடுகாட்டிலுள்ள அவரது கல்லறையின் அருகில் நாட்டப்பட்டுள்ள நினைவுக் கல்லில் புரட்சி யுத்த வீரன் என குறிப்பிட்டு இருக்கின்றது.

அமெரிக்க அரச பூங்கா ஒன்றில் நினைவுத்தூபி ஹனிமனின் ஞாபகார்த்தமாக நிறுவப்பட்டிருக்கிறது. அதில் பதியப்பட்டுள்ள செப்புத் தகட்டில் பொறிக்கப்பட்டுள்ள வாசகங்கள் பின்வருமாறு உள்ளன.

"சுதந்திர ஊற்றைப் பருகவும்"

எதிர்கால சந்ததியினர் சுதந்திரத்துடன் வாழ்வார்களாக. இதுவரையில் மேலே சொல்லப்பட்ட இரு உண்மை புலனாய்வு நிகழ்வுகளையும் ஆழ்ந்து நோக்கின் ,வெவ்வேறு புலனாய்வு விளக்கங்கள் இருக்கின்றன. இருப்பினும் அதில் புலனாய்வுப் பணிகள் தொடர்பாக தமிழர்களுக்கு சிலசெய்திகள் உள்ளன.

அவையாதெனில் தமிழர்தாயகப் பகுதிகளில் சிங்கள அரச புலனாய்வு அமைப்பின் மறைமுக தகவல் மூலகங்களாக இயங்கும் தனியாட்கள், நிறுவனங்கள் தொடர்பான தகவல்களை சேகரித்து தமிழீழ உள்ளகப் புலனாய்வுப்பிரிவிற்கு வழங்குதல் அப்புலனாய்வு கடமையை புரிந்து தமிழர் தாய் மண்ணைப் பாதுகாக்கவேண்டிய அவசியம் பற்றி சொல்வது ஒருசெய்தி.

சிங்கள தேசத்தின் அரசியல் இராணுவ புலனாய்வு மூலோபாயங்களை, தந்திரோபாயங்களை அறிந்து தகவல்களை தமிழீழ தேசிய புலனாய்வு அமைப்பிற்கு வழங்குதல். அப்பொறுப்புமிக்க புலனாய்வுப் பணிகளில் தமிழர்கள் தம்மை ஈடுபடுத்த வேண்டிய அவசியம் பற்றி வலியுறுத்தப்படுவது இன்னொருசெய்தி.

தமிழர் தாயகப்பூமி எதிர்கொள்ளும் இடையூறுகள், நெருக்கடிகள், அச்சுறுத்தல்கள் அர்ப்பணிப்பு நிறைந்த புலனாய்வுப்பணிகளால் நீக்கப்பட்டு திருப்பங்களை ஏற்படுத்தும். அத்திருப்பங்களை ஏற்படுத்தும்வகையிலே தமிழர்கள் புலனாய்வாளர்களாக இயங்கவேண்டிய தேவையை உணர்த்துவது மற்றையசெய்தி.

இச்செய்திகள் யாவும் எடுத்துச் சொல்ல முயல்வது இதுதான். அதாவது சிங்கள அரசின் புலனாய்வு அமைப்பு தமிழர் தாயகத்தில் தமக்கான உளவு வலையமைப்பை நிறுவும் முயற்சியிலே தீவிரம் காட்டவே செய்யும். அத்தகைய தீவிரத்தை தளர்வடையச் செய்து சிங்கள புலனாய்வு அமைப்பை தோல்வியடையச் செய்ய வேண்டுமென்ற புலனாய்வுச் செருக்கு ஒவ்வொரு தமிழர்களிடமும் இருக்கும்போது தான் தமிழர் தாயகம் பலம் பெறும். தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்டம் சிங்கள தேசத்தின் புலனாய்வு அச்சுறுத்தல்களை மட்டும் எதிர்கொள்ளவில்லை. அதற்கப்பால் சக்திமிக்க வல்லரசுகளின் புலனாய்வு ஆக்கிரமிப்புப் போர்களையும் எதிர்கொள்கின்றது.

இத்தகைய புலனாய்வு போர்ச்சூழலில்தான் தமிழர் தாய் மண் இருந்து வருகின்றது. ஆதலால் தமிழத் தேசிய எதிர்சக்திகளின் புலனாய்வு ஒத்துழைப்பாளர்களாக எவரும் இருப்பதனை விடுத்து தமிழர்கள் தம் தேசிய சக்தியை தமிழீழ புலனாய்வு அமைப்பினருக்கு கொடுக்கும்போதே புலனாய்வுப் போரிலும் தமிழ்த் தேசம் வெற்றி பெற்று கம்பீரத்தோடு திகழும். ●

ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி. 20 . 08 . 2004

மின் அஞ்சல : weekly @ eezhanatham.com


## ஆத்திரக்காரருக்கு புத்தி மட்டு

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உட்கட்சிப் பிரச்சனை நாட்டின் பாதுகாப்பிற்கும் நலன்களுக்கும் பாதகமாக அமையுமானால் படையினரை புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் செல்வதற்கு தான் உத்தரவிட வேண்டி ஏற்படும் என சனாதிபதி சந்திரிகா யதார்த்தத்துக்கு மீறி வாய்ச்சவடால் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

முன்னரும் இவ்வாறுதான் திருகோணமலை குரங்கு பாஞ்சான் விவகாரத்திலும் கட்டளையிடப் போவதாகவும் கட்டளையிட்டு விட்டதாகவும் ஜம்பம் அடித்தார்.

உண்மையில் அரச படைகள் போரிட்டு புலிகளை வெற்றிகொள்ளப் போவதில்லை என்பதும் அத்தகைய தொரு நிலை ஏற்படின் அரசபடைகள் எத்தகைய விளைவுகளை சந்திக்கும் என்பதும் சந்திரிகாவுக்கு தெளிவாகவே தெரியும்.

ஆனால் சனாதிபதி சந்திரிகாவின் இந்த வாய்ச்சவாடலில் ஒரு உள்நோக்கம் இருப்பதாகவே கொள்ள வேண்டும்.

அதாவது இராணுவ வலிமையில் அரச படைகள் மேலோங்கி இருப்பது போன்றும் தமது படைகள் இராணுவ சமநிலையில் உயர்வாக இருப்பது போன்றும் ஒரு தோற்றப்பாட்டை வெளிப்படுத்த சந்திரிகா விரும்புகிறார் போலத் தெரிகிறது.

சனாதிபதி சந்திரிகாவின் இந்த யதார்த்தத்தை மீறிய இந்த கற்பனை எந்தப்பலனையும் அவருக்கு வழங்கிவிடப் போவதில்லை.

போரின் மூலமான அடுத்தடுத்த தோல்விகளும் அந்த போரில் புலிகளின் மேலோங்கிய இராணுவ பலமுமே சனாதிபதி சந்திரிகாவை சமாதான முயற்சிக்கு நோர்வேயை அழைக்கத் தூண்டியது.

அத்தோடு போர் நீளுமாக இருந்தால் சிங்கள தேசத்தின் பெரும் பொருண்மிய வளத்தையும் படையினரையும் பலியிட்டு கைப்பற்றிய யாழ்ப்பாணத்தை இழக்க வேண்டி ஏற்படும் என்பதோடு அவமானகரமான தோல்வியை சந்திக்க சிங்கள தேசம் நேரிடும் என்பதை புரிந்து கொண்டே அன்று சனாதிபதி சந்திரிகா சமாதானம் தொடர்பாக சிந்திக்க தலைப்பட்டார்.

அத்தோடு அன்றைய இராணுவ வலிமை என்பது புலிகளின் தொடர் ஓயாத அலைகள் இராணுவ நடவடிக்கையால் அரச படைகள் உதிரிகளாக, செயற்படத் தொடங்கிவிட்டனரோ என சர்வதேச ஊடகங்கள் கேள்வியை எழுப்பும் அளவுக்கு நிலமையிருந்தது.

இத்தகையதொரு இராணுவ பலவீனத்தில்தான் சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கும் போது சிறிலங்கா அரச படைகள் இருந்தன.

இதனை மறந்து சனாதிபதி சந்திரிகா புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் படைகள் செல்ல உத்தரவிட நேரிடும் என தெரிவிப்பதானது ஆத்திரகாரனுக்கு புத்திமட்டு என்பதைதான் வெளிப்படுத்துகிறது.

அத்தோடு சமாதான முயற்சி தொடர்பாக தான் எடுக்கும் சூழ்ச்சிகள் நிரம்பிய திட்டங்களை புலிகள் நிராகரிப்பதை அவரால் சகித்துக் கொள்ள முடியாதுள்ளதன் விளைவாகவும் கொள்ளவேண்டும்.

சனாதிபதி சந்திரிகா சமாதானம் ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு ஏனைய எல்லா எதிர்பார்ப்புகளையும் பின்தள்ளி இதய சுத்தியோடு செயற்பட முனைவாரானால் அடிக்கடி ஆத்திரம் கொள்ளவும் அவசரப் படவும் தேவையிலலை.

ஆனால் எந்தநிலையிலும் புலிகள் இயக்கத்தை இராணுவரீதியாக அவர் குறைத்து மதிப்பிட முனைவாராயின் ஒரு பெரும்தோல்விக்கு அவர் தயாராகி விட்டார் என்பதாகவே கொள்ள வேண்டும். சந்திரிகாவின் இந்த எச்சரிக்கையானது இன்னொரு புறத்தில் அவர் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறத்தயங்கமாட்டார் என்ற செய்தியையும் புலப்படுத்துவதாகவே அர்த்தம் கொள்ள வேண்டும்.

## தூரனின்பார்வை

# கழுகு வெண்புறாவாக முடியுமா...?

என்னதான் வெள்ளை நிறமையை லீட்டர் கணக்கில் உடல் முழுக்க ஊற்றிக் கொண்டாலும் கழுகு வெண்புறாவாகி விட முடியாது. கழுகின் இரத்தவெறியும் பிணம் தின்னும் ஆவலும் அதனை விட்டுப்போகாது. தூரத்தில் நின்று அதன் தற்காலிக உருமாற்றத்தைக் கண்டு ஏமாந்து போகிறவர்களும் கூட அதனை நெருங்குவதற்கு முன்னரே அதன் தோற்றமற்ற வேடத்தை இனம் கண்டு கொள்வார். அப்படியும் பார்வை மற்றும் சிந்தனை மந்தமுடையோர் அதன் தோற்றத்தை இனம் காணாது விட்டாலும் சொற்ப நாளில் அதன் குணமாற்றத்தை உணரவே செய்வர். அதற்குள் விடையங்கள் எல்லை தாண்டிப் போய் பல்வேறு ஆபத்துக்களும் உருவாகி விடக்கூடும்

இன்றைய சந்திரிகாவின் தோற்ற மாறுபாடும் அப்படியானது தான்.

ஏற்கனவே இம்மாதிரியான சமாதானப்புறா வேடத்தில் அவரை 1995 ஆம் ஆண்டில் பார்த்து ஏமாந்த அனுபவப்பட்டறிவு தமிழ் மக்களுக்கு நிறையவே உண்டு

அவர் தற்போது கஷ்ரப்பட்டு ஓதிவரும் சமாதான வேதம் என்பதும் கூட சாத்தான் ஓதும் வேதம் தான் என்பதை அவர்கள் நன்றாகவே உணர்வர்.

உண்மையில் சிறிலங்காவின் துடன், தேர்தல் முடிவுகள் சமாதான விரோதசக்திகளுக்கு ஆதரவான முறையிலும் முடிந்தது.

ஆட்சியைக் கைப்பற்றிய புதிய அரசுக்கு சமாதானத்தை முன்னெடுப்பது பற்றிய எந்தக் குறிக்கோளும் இருக்கவில்லை. இப்படியே தற்போதுள்ள நிலையை நீடித்துக்கொண்டே காலத்தை கடத்தும் நோக்கம் அதற்கு இருந்தது. எனினும் ஆட்சியைத் தொடர்வதற்கு அவசியமான நிதிவளம் திறைசேரியில் இல்லாததால் சர்வதேச கடனுதவிகளை நம்பியே அரசை கட்டியிலுக்க வேண்டிய நிலை இருந்ததால் அரசுக்கு சமாதானத்தை தொடர்வதைவிடவும் அல்லது அதனை தொடர்வது போன்று நடிப்பதை விடவும் வேறுவழி இருக்கவில்லை.

ஏனெனில் கடன்வழங்கும் நாடுகளும்,அமைப்புகளும் கடனுக்கு சமாதானத்தை காணிக்கையாகக் கேட்டமையே அதற்கு காரணமாகும்.

ஆனாலும் அவரது சமாதான முன்னெடுப்பு முயற்சிகள் போலித்தனமானவை,என்பதற்கு கடந்த மூன்று மாதகாலத்துள் அவர் அது தொடர்பாக எடுத்த அரசியல் நிலைப்பாடுகளும், அடித்த கருத்து நிலைக்குத்துக் கரணங்களுமே சான்றாகும் அதற்கு அவரது தோழமைக் கட்சிகளும் பின்னனிக் கார ஏற்படுத்துமானால் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தினுள் அணிவகுத்து செல்லுமாறு படையினர்க்கு தான் உத்தர விடப்போகிறாராம்:- இந்த எச்சரிக்கையானது விடுதலைப்புலிகளை மிரட்டும் தொணியைக் கொண்டது என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆய்வாளர்களின் கருத்து எதுவானாலும் சந்திரிகாவின் நிலைப்பாடு என்ன என்பது இப்போது தெளிவாகியுள்ளது. அவ்வளவுதான். கிழக்கு நிலையைக் கட்டுப்படுத்துவதற்கு அரச துருப்புக்களை அங்கு அனுப்புவதுதான் ஒரே வழி எனக்கூறும் சந்திரிகா போர் 'பிரகடனத்தின் முதல் வரியை வெளிப்படுத்தியுள்ளார் என்றே கூறவேண்டும்.

கிழக்கில் அசம்பாவிதங்கள் அதிகரிக்க காரணமே அரசும், படைதரப்பும் தான் என்பது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயமாகும். கருணாவுக்கு பாதுகாப்பு வழங்கி அவரது துணையுடன் அவரின் குழுவினரைப் பயன்படுத்தி தேர்தலுக்கு முன்பிருந்தே கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் வன்முறைகளை கொலைகளை மேற்கொள்ளும் திட்டத்தை செயற்படுத்தியவர் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர்தான் என்பது சந்தேகமற நிரூபிக்கப்பட்ட விடயமாகும்.

ஜனாதிபதி அம்மையாருக்கு இந்நாட்டில் சமாதானத்தை நிரந்தரமாக ஏற்படுத்துவதில் ஆத்மார்த்த விருப்பு இருக்குமேயானால் அவர் இன்று அவரின் செயற்பாடுகளாளேயே ஸ்தம்பிதம் அடைந்துள்ள சமாதான முன்னேடுப்பு முயற்சிகளை அதன் ஆரம்பத்தில் இருந்தே அங்கீகரித்து, நெறிப்படுத்தி, அதனை முன்னெடுத்து வந்த அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்விற்கு ஒத்துழைப்பு நல்கி உதவியிருப்பார். அப்படி உதவியிருந்தால் இப்போது சமாதான நகர்வுகள் ஒரு

வெற்றிகரமான கட்டத்தினை சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் எட்டியிருக்கவும் கூடும் .

ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. முன்னர் முயல் வேகத்தில் ஆரம்பித்து ஆமை வேகத்தில் நகர்ந்து இப்போது நத்தை வேகத்தில் கூட நகர முடியாத நிலையே ஏற்பட்டுள்ளது. அதற்கு முழுக் காரணமும் ஜனாதிபதியின் செயற்பாடுகளேயாகும். அவர் ஆரம்பம் முதலே ரணிலின் சமாதான முயற்சிகளையும், நோர்வே நாட்டின் அதற்கான அனுசரணை செயற்பாடுகளையும், இதற்rான சர்வதேச சமூகத்தின் ஆதரவுப் பின்னணியையும், முற்று முழுதாக எதிர்த்து வந்ததுடன் இதற்கு எதிரான பொய்ப்பிரசார நடவடிக்கைகளை சர்வதேச மட்டத்தில் தீவிரப்படுத்தியும் வந்தார்.

ஒருகட்டத்தில் சமாதான முன்னெடுப்புகள் மெதுவாக வேனும் கூட தனது கட்டுப் பாட்டையும், எதிர்ப்பையும், எதிர்பிர சாரத்தையும் மீறி முன்னெடுக் கப்படுகிறது என்பது தெரிந்த போது திடீரென ரணில் நாட்டில் இல்லாத வேளையில் ஆட்சியைக் கலைத்ததன் மூலம் தனது நிறைவேற்று அதிகார பலத்தை பயன்படுத்தி சமாதான முயற்சிகளுக்கு நிரந்தர ஆப்பொன்றை வைத்தார்.

அமைதி நிலைக்கு ஆபத்து ஏற்படும் வகையில் சமாதானத்தின் எதிர்காலம் கேள்விக்குறியானணமாகும்.

சமாதான முன்னெடுப்பை ஜனாதிபதி ஏதோ ஒரு வகையில் ஏதோ ஒரு காரணத்திற்காக முன்னெடுக்க விரும்பினாலும் கூட, அதற்கு ஆதரவளிக்கவோ ஆதரவளிப்பது போன்று நடிக்கவோ கூட அவர்கள் விரும்பவில்லை.

நறிப்பாக ஜே.வி.பியினரின் நிலைப்பாடு முற்றாகவே சமாதானத்தை நிராகரிக்கும் தன்மை கொண்டதாகவே இருக்கிறது.

இது சந்திரிகா அம்மையாருக்கு எந்த வகையிலும் சமாதானம் தொடர்பாக எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப் பெருந்தடையாகவே உள்ளதையும் அவர் அறிவார்.அவரால் ஜே.வி.பி.யை தூக்கியெறிய முடியாத நிலை, அதனை தூக்கியெறிய முடியாத நிலையில் சமாதான முயற்சிகளைப் பெயருக்கேனும் தொடாவதென்பதும் சாத்தியமாகாத நிலை. இடையில் கிழக்கில் கருணாவால் எழுந்த குழப்ப நிலையைப் பயன்படுத்தி அரசியல் அனு கூலமடைய திட்டமிட்டதும் தோல்வி கண்டு விட்டது. சர்வதேச சமூகம் மீண்டும் சமாதானத்தை தொடர வேண்டியத்திற்கான அழுத்தத்தை வலியுறுதத் தொடங்கி விட்டது.

இந்த நிலையில் என்ன செய்வது என்று குழப்பமடைந்துள்ள சந்திரிகா இப்போது புதிதாக ஒரு எச்சரிக்கையை மிரட்டும் தொனியில் விடுப்பதன் மூலம் விடுதலைப் புலிகளை சின மேற்றி, அவர்களின் மனவியல்பை மாற்றி, அவர்களைப் போர்முகம் நோக்கி இழுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்பது தெளிவாகியுள்ளது. கருணா விவகாரத்தால் எழுந்த பதற்றமும் குழப்பமும் அடங்கி வரும் நிலையில் அவர் தற்போது புதிய அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

அதாவது விடுதலைப்புலிகள் அமைப்பின் உட்பூசல், அவர்களுக்கிடையே எழுந்துள்ள மோதல் நாட்டின் ஸ்திரநிலைக்கு ஆபத்து

பிரதேசவாதத்தை தூண்டும் வகையில்தமிழ் தேசியத்தை-அதன் கட்டுமான வளர்ச்சியை சிதைக்கும் வகையில் நன்கு திட்டமிட்ட முறையில் அரசபடைகளின் பாதுகாப்பு அனுசரணையுடன் மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கைகளே கிழக்கில் இன்றைய பதற்றநிலைக்குக் காரணமாகும் கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட விடுதலைப் புலிகளின் ஆதரவாளாகள் மீதான படுகொலை நடவடிக்கைகளை செய்தோர் இராணுவப் ப்குதிகளில் இருந்து ஆயுதபாணிகளாக வன்தோர் என்பதும் அவர்கள் இக்கொலைகளைப் புரிந்துவிட்டு இராணுவ முகாம்கள், சோதனைச் சாவடிகள் ஊடாகவே தப்பிச் சென்றார்கள் என்பதும் சிலவேளைகளில் இச்சம்பவங்கள் நடந்து இடத்திற்கு அருகாமையில் நின்றிருந்த படைத்தரப்பினர் சம்பவத்தை தடுக்க முயலவில்லை என்பதும் பல உண்மைகளை வெளிப்படுத்தியே நிற்கின்றன.

இவையாவும் கிழக்கின் வன்முறை அதிகரிப்பின் பின்னணியில் அரசபடையினரும் புலனாய்வுப்பிரிவினரும் கருணா கும்பலைச் சேர்ந்தவர்களுடன் இணைந்தே செயற்பட்டு வருகின்றமையை தெளிவாக உணர்த்தி நிற்கின்றன.

நிலைமை இவ்வாறு இருக்கையில் கிழக்கின் நிலைமை யைக் கட்டுப்படுத்த அங்கு இராணுவத்தை அணிவகுத்துச் செல்லப் பணிப்பேன் என்று சந்திரிகா கூறுவது தான் யுத்தத்தை ஆரம்பிக்கத் தாயார் என்ற கருத்தையே கொடுப்பதாக உள்ளது.

சமாதானத்தை முன்னெடுக்க சாத்தியமான வழிகளை காணத் தயங்கும் சந்திரிகா சண்டையைத் தொடக்க துடிப்பது அவரின் நிஜமுகத்தை வெளிப்படுத்துவதாகவே உள்ளது.

# சேர்ந்து வாழுதல் சாத்தியமா...?

அரசியல் இலாபங்களையே கருத்தில்கொண்டு அரசு செயற்படுவதால் மக்களின் குறைபாடுகள் கவனிக்கப்படுவதில்லை என ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித்தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

ரணில் விக்கிரமசிங்கவின் .இந்த கூற்றானது நாட்டின் இன்றைய நிலையை தெளிவாகவே படம்பிடித்துக்காட்டியிருக்கிறது.

ஒரு எதிர்க்கட்சி தலைவரின் கூற்று என்று புறம்தள்ளிவிட முடியாத ஒரு கூற்றாகவே இது அமைகிறது.

மக்களைப்பற்றி சிந்திக்காத ஒரு போக்கு பொதுவான இலங்கையின் அரசியலில் நடைமுறையிலிருந்தாலும் அதை மக்கள் உணர்ந்து கொள்ளாதவாறு பார்த்துக் கொள்வதில் அரசியல் தலைமைகள் கவனமாக செயற்படுவது வழமை.


ஆனால் இலங்கையின் நடைமுறைப்போக்கு இவையாவையும் மீறி பூதமாய் வெளிக்கிளம்பப் போகும் அபாயம் ஒன்றிற்கான முன் சமிக்ஞைகளை வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டது.

இந்த வகையில் மக்களின் குறைநிறைகள் என்ற வகையில் அரசு சந்திக்கப் போகும் தோல்விஎன்பது தனித்து அரசை நிர்வகித்த கட்சி ஒன்றிற்கான தோல்வி இனங்களைக்கொண்ட ஒரு நாட்டில் "மூக்கிருக்கும்வரை சளி இருக்கவே செய்யும்" என்கின்ற ஒரு நிலைதான்.

ஆனால் மூக்கிருக்கிறதென்பதற்காக சளி இருக்க வேண்டும் என்ற நியதி இருந்துவிடமுடியாது. அதனை சரியான முறையில் இனங்காணப்பட்டு அதற்கான சிகிச்சையை மேற்கொள்ளவேண்டியதேவை அதிகம். அதுவே அதற்கான அதிகப்பாதுகாப்பைத்தரவல்லது.

ஆனால் இலங்கையில் கட்சி அரசியல் நலன் சார்ந்து போகும் அரசியல் நகர்வுகளால் புரையோடிப்போன இனச்சிக்கலும் மக்களின் குறைகளும் புதிது புதிதாக புதிய பிரச்சினைகளுக்கான வாசல்களையே திறந்து விடுகின்றன.

இதனால் உடனடியாக தீர்வுகான வேண்டிய பிரச்சினைகளுக்கு பதிலாக பிரச்சினைகளுக்கு மேல் பிரச்சினைகளை தோற்றுவித்து அரசியல் ஸ்திரமின்மையை தோற்றுவித்து விடுகிறது.






களை எதிர்கொள்ளத்தக்கதாக நாட்டின் புதிய வடிவமைப்புக்கு முற்போக்கு சிந்தனைகொண்ட புதிய தலைமைகளின் வருகைகள் அவசியமாகின்றது.

அத்தோடு, அந்த தலைமுறைகளிடம் வலுவான பொருளாதார தளமிடப்பட்ட வலிமைமிகு நாடாக கையளிக்க வேண்டிய தேவையும் உள்ளது. ஆனால் இலங்கையின் பொருளாதார வலுமிக்க தளம் என்பது தமிழர்களிடமே அதிகம் உள்ளது அத்தோடு இலங்கையில் வலுவான பொருளாதார தளமிடப்பட வேண்டுமானால் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு வேண்டும். அந்த வகையில் இலங்கையில் மக்களின் குறைகள் பற்றி

இதன் பயன் முற்றிப் போகும் முரண்பாடுகள் நாட்டை அதளபாதாளத்துள் இழுத்துக் கொண்டு செல்கிறது.

இதனால் சிங்களவர், தமிழர் போன்ற இனங்கள் வாழும் இலங்கைபோன்ற ஒரு நாட்டில் சேர்ந்துவாழுதல் எந்த மாற்றத்தையும் நாட்டில் கொண்டுவந்து விடப் போவதில்லை.

அத்துடன் புதிய புதிய ஆக்கங்க ளுக்குப் பதிலாக புதிய முரண்பாடுகளைத் தான் நாட்டில் தோற்றுவிக்கும்.

யின் வளர்ச்சி, முதலீடுகளிற்கான பொருளாதாரவாய்புகள், மற்றும் நவீன வளர்ச்சியோடு ஒத்தோடும் அறிவு விசாலிப்பு என்பன தமிழ் மக்களை பொறுத்தவரை ஏறுமுகத்தில் இருப்பதே.



யொன்றோடு முடிந்துவிடுமா அல்லது ஒரு நாட்டின் அல்லது அந்த நாட்டின் மக்களின் எதிர்கால அரசியல் வாழ்வில் ஏற்படுத்திவிடப்போகும் பாரிய தோல்வியொன்றோடு நிறைவுறப் போகிறதா என்ற கேள்வியை தோற்றுவிக்கிறது. காரணம் - ஒரு கட்சியின் தோல்வியோடு நிறைவுறுமாக இருந்தால் அந் நாட்டிற்கான மீள் எழுகைக்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கும்.

மாறாக கட்சியின் தோல்வியென்ற வரையறைகளைத்தாண்டி ஒரு நாட்டின் அரசியல் அத்திவாரத்திலேயே ஆட்டத்தை ஏற்படுத்துமாக இருந்தால் இதன் பயன் அந்த நாடு சிதைந்துபோகவே அதிகவாய்ப்பிருக்கிறது.

அந்த வகையில் இலங்கையின் தற்போதைய போக்கு எதற்கான வாய்ப்பை அதிகம் கொண்டிருக்கிறது.

முரண்பாடுகள் எழுவதும், இனச்சிக்கல்கள் நாட்டில் தொடர்வதும் பல்தேசிய

அந்த வகையில் இன்றைய இலங்கையின் அரசியல் ஸ்திரமின்மைக்கான காரணம் கட்சி நலன் சார்ந்த அரசியல் இலாபங்களும் தான். ஆனால், இதன் தோற்று வாய்களைப்பற்றி சிந்திக்கவோ அதைப்பற்றி ஆலோசிக்கவோ தயாரில்லா மனோபாவத்தில் தான் நாட்டின் தலைவர்கள் செயற்படுகிறார்கள்.

அப்படியென்றால் இத்தகைய அதாவது இலங்கை போன்ற ஒரு நாட்டிற்கான கொள்கை வகுப்புகளோ அரசியல் பகுப்பாய்வுத் திட்டமிடல்களோ இல்லையா என்ற கேள்வியெழலாம்.

இலங்கைபோன்ற வளர்ச்சியடைந்துவரும் மூன்றாம் மண்டலநாடுகளின் திட்டமிடல்களையும், பகுப்பாய்வுகளையும் அந்த நாடுகளே மேற்கொள்கின்றதா என்பதற்கு அந்த நாடுகளின் மீது திட்டமிடல்களும் பகுப்பாய்வுகளும் பரப்பப்படுகின்ற ஒரு போக்கே காணப்படுகிறது. என்றே கூறவேண்டும்.

இதன்தாக்கவிளைவு சிந்திப்பது என்பது சிங்களவர்களைப் பற்றி சிங்களவர்கள்தான் சிந்திக்க வேண்டும். தமிழர்கள் தமிழர்களைப் பற்றி சிந்திக்க வேண்டும். அதாவது இரண்டு

**சிறி.இந்திரகுமார்**

தேசங்களிலிருந்து அல்லது அதிகாரமிக்க இரண்டு கட்டமைப்பிலிருந்து இது தான் குறைகளிற்கானத் தீர்வை தேடித்தரும்.

ஆனால் இலங்கையிலோ அத்தகையதொரு புதிய மாற்றத்துக்கான வாசல்கள் எவையும் உடனடியாக திறந்துவிடக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படவில்லையென்றே கூற வேண்டும்.

காரணம் அடுத்தடுத்து கையளிக்கவேண்டிய புதிய மாற்றங்களுடன் கூடிய நாட்டின் நலத்திட்டங்களுக்குப் பதிலாக கைமாறி கைமாறி புதிய மெருகூட்டப்பட்ட இனவாதம் சாந்த பகையுணர்ச்சிகளே அரசியல் தலைமைகளிடம் கையளிக்கப்படுகின்றது.

காரணம் தகவல் தொழில்நுட்பத்தாலும், தகவல் புரட்சியினாலும் சுருங்கிவிட்ட உலகில் இனங்கள் இயல்பாக புதிய வேகங்களுடன் புதிய வளர்ச்சிப்போக்கு நிலைகளை நோக்கிதூண்டப்படும்.

அதுவும் கல்விநிலையிலும் விழிப்புடைய அதே நேரம் புதிய தூண்டல்மற்றும் தேடல் இயல்பைக் கொண்ட தமிழர்கள், சுருங்கிப்போகும் வளாச்சிகளுக்கு தடையான காரணங்களை அதிகம் கொண்ட சிங்களவர்கள் போன்ற இனத்தோடு சேர்ந்து வாழ்தல் முடியாததாகவே இருக்கும்.

இதை இலங்கையை நிர்வகிக்கும் அரசதலைவர்கள் மட்டுமல்ல, உலகின் புதிய பொருளாதார மாற்றங்களை கொண்டுவரும் அரசுகளும் . சிந்திக்க தலைப்படுதல் வேண்டும்.

காரணம் இன்றைய வேகமான உலகமயமாதலின் போக்கோடு பயணிக்க தமிழர்களுக்கான தடைகள் அதிகம் இல்லை. காரணம்,சனத்தொகை


ஆனால் இலங்கையில் சிங்களவர்களால் முடியாது என்று அறுதியிட முடியாவிட்டாலும் அவர்களுக்கான தடைகள் அதிகம் இருக்கிறது என்பதே யதார்த்தம்,

ஆகவேதான் இலங்கையின் அல்லது இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஈழத்தமிழர்களின் குறைகளும் நிறைகளும் அவர்கள் பிரிந்து வாழுகின்ற அல்லது தங்களை ஆளுகின்ற அதிகாரங்களுடன் கூடியதான உரிமைகளை வழங்குகின்றபோதே தீர்வுக்கான அதிகவாய்ப்பை கொண்டிருக்கிறது.

அந்த வகையில் மக்களின் குறைகள் பற்றி சிந்திப்பது என்பது சிங்களவர்கள் சிங்களவர்களைப்பற்றி சிந்திக்க வேண்டும். தமிழர்கள் தமிழர்களைப்பற்றி சிந்திக்கவேண்டும். அதாவது இரண்டு தேசங்களாக இருந்து அல்லது இரண்டு அதிகாரமிக்க கட்டமைப்புகளிலிருந்து தான் சிந்திக்கவேண்டும். இதுதான் குறை களிற்கான தீர்வைத் தேடித்தரும்.



# மானியங்கள் மீளப்பெறப்பட்டதை தொடர்ந்து வரப்போவது என்ன?



***மார்க்சியவாதிகளாகத் தங்களை இனங்காட்டிக்கொள்ளும் ஜே.வி.பியினரைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டுள்ள தேசிய முதலாளித்துவக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியினை, இடதுசாரி சார்பான கட்சியாக மேற்குலகம் பாரம்பரியமாகவே கருதி வந்திருக்கிறது. அவ்வாறுதான் அக்கட்சியும் தன்னை 1994வரையும் இனங்காட்டி வந்துள்ளது.***

**பு.சத்தியமூர்த்தி**

'காலத்தை மீறிக் கனவு கண்ட சந்திரிகாவின்' கூடாரம் சிறிலங்காவின் பொருண்மியத்தைக் கையாள்வதில் சிக்கல்களை எதிர்நோக்கத் தொடங்கிவிட்டது. அல்லது தோல்வியை எதிர்கொள்ள ஆரம்பித்துவிட்டது. 2004இன் ஆரம்பத்தில் இருந்தே அல்லது ஜே.வி.பியுடனான அரசியல் ஊடாட்டம் ஆரம்பமான 2003இன் நடுக்கூறிலிருந்தே, அப்போதைய ஐ.தே.கட்சி அரசாங்கம் வாழ்க்கைச் செலவினைக் கட்டுப்படுத்தவில்லையென்பதை ஒரு பிரதான அரசியல்விவகாரமாக அம்மையாரின் சகாக்கள் கையிலெடுத்து விட்டார்கள் சாமான்ய மக்களையும் மத்தியதர வர்க்கத்தினைச் சேர்ந்த, நிலையான மாதச் சம்பளத்தினை நம்பி வாழும் அரச,தனியார் ஊழியர்களையும் மிகவேகமாக ஈர்க்கக்கூடிய இந்த விவகாரத்தை சந்திரிகாவின் கூடாரம் கையாண்ட விதமும் அது ஆட்சியைக்கைப்பற்றுவதற்கு முக்கியமானகாரணமாகும். அத்தோடு விவசாயிகளின், குறிப்பாக மகாவலி வலய நெற்செய்கையாளர்களின் பிரதான இரு பிரச்சினைகளான உரத்தின் விலையுயர்வு, நெல்லைச் சந்தைப்படுத்த முடியாமை ஆகிய இரண்டையும் இவர்கள் வானளாவ உயர்த்தினார்கள். அம்மையாரின் ஆட்சிவந்தால் இதற்கெல்லாம் உடனேயே தீர்வு காணப்பட்டு விடும் என்பதாகவும் வாக்குறுதிகளை வாரி வழங்கினார்கள். இந்த வாக்குறுதிகளும் பிரசாரங்களும் இப்போது சுற்றிச் சுழன்று அம்மையாரின் கூடாரத்தின்மீது திரும்பியிருக்கிறது.

மார்க்சியவாதிகளாகத்தங்களை இனங்காட்டிக்கொள்ளும் ஜே.வி.பி.யினரைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டுள்ள தேசிய முதலாளித்துவக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியினை, இடதுசாரி சார்பான கட்சியாக மேற்குலகம் பாரம்பரியமாகவே கருதி வந்திருக்கிறது. அவ்வாறுதான் அக்கட்சியும் தன்னை 1994வரையும் இனங்காட்டி வந்துள்ளது.

இந்தப் பின்னணியில் புதிய ஐ.ம.சு. முன்னணி தனது அரசாங்கத்தின் வேலைத்திட்டத்திற்கென வகுத்துக்கொண்டுள்ள பாதை, அதனை மேலும் இக்கட்டுகளுக்குள் தள்ளிவிட்டுள்ளது. மேலும் தள்ளிவிடவும் போகிறது. இன்று சிறிலங்காவின் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படவுள்ள சட்டமூலம் வெளிநாட்டினர் இலங்கைத்தீவில் சொத்துக்களைக் கொள்வனவு செய்யும்போது அதற்கு வரி அறவிடுவது தொடர்பானதாகும். ஜே.வி.பி.யின் அரசியல் வேலைத் திட்டத்துக்காகக் கொண்டுவரப்படும் இச்சட்டமூலம் ஒட்டுமொத்தத்தில், சிறிலங்காவில் முதலிடும் வெளி நாட்டவர்களையும் குறிப்பாகப் பல்தேசியக் கம்பனிகளையும் பாதிக்கக் கூடிய தாகையால் இது ஒப்பீட்டளவில், சிறிலங்காவுக்குள்ளான முதலீடுகளின் வரவினைப் பாதிக்கப்போகிறது.

ஆனால் இந்தப் பிரச்சினைகளெல்லாம் சாதாரண சிங்கள மக்களுக்கு விளங்கப் போவதில்லை. அவர்களது பிரச்சினையெல்லாம் அன்றாட வாழ்க்கைக்கான செலவீனம் உயர்வதிலேயேமையங்கொண்டுள்ளது. உண்மையில் அவர்கள் கடந்த பொதுத்தேர்தலில் அதனையே பிரதான விடயமாக எடுத்துக்கொண்டு யாருக்கு வாக்களிப்பது என்பதை தீமானித்தார்கள். (பொதுவாகவே தமக்கு யார் அதிகளவு நலச்சேவைகளை வழங்குவதாக வாக்களிக்கிறார்களோ அவர்களுக்கே சிங்கள மக்கள் வாக்களிப்பது வழமை. உதாரணமாக 1970ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் சந்திரமண்டலத்திலிருந்தாவது அரிசி கொண்டு வருவதாக வாக்குறுதியளித்த சிறிமாவோ அம்மையாருக்கு சிங்களவர்கள் அமோகமாக வாக்களித்திருந்தமை கவனிக்கத் தக்கது.)

இப்போது எல்லாமே புஸ்வானமாகிவிட்டன. ஆட்சிக்கு வந்த கையோடு வழங்கிய உரத்துக்கான விலைக்குறைப்பும் பறந்து போய்விடுமோ? என்ற சூழல் கடந்த 13ம் திகதியுடன் ஏற்பட்டு விட்டது. விலைவாசி வீழ்ச்சியடையும் என்ற (யதார்த்தத்துக்கு ஒத்துவராத) நம்பிக்கையிலிருந்த சிங்களவர்களுக்கு அது கானல்நீராகிப் போய் விட்ட அவலத்தை அம்மையாரின் அரசு பரிசளித்திருக்கிறது.

மூன்று வாரங்களுக்குள் இரண்டாவது தடவையாக எரிபொருட்களுக்கான விலை அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இந்த அதிகரிப்பென்பது சாதாரணமானதல்ல. ஒரு லீற்றர் பெற்றோலுக்கான விலை முதற்தடவை 08 ரூபாவாலும் பின்னர் 03 ரூபாவாலுமாக மொத்தம் 11 ரூபாவால், அதாவது ஏறக்குறைய 20 விழுக்காட்டினால் அதிகரித்திருக்கிறது. வீட்டுப் பாவனைக்கான எரிவாயுவின்விலை 70 ரூபாவால் அதிகரித்திருக்கிறது. ஆனால் இவையெல்லாவற்றையும்விடவும் சாதாரண மக்களை மிகவும் பாதிக்ககூடிய தீர்மானமொன்றை சிறிலங்காவின் நிதியமைச்சு எடுத்துவிட்டது. நிதியமைச்சர்சரத் அமுனுகம அதனையும் பகிரங்கப் படுத்தியும் விட்டார் “அரசாங்கம் மானியங்கள் வழங்கு வதனை நிறுத்தியிருக்கிறது” என் பதே அது. அத்தியாவசியப் பொருட் களான எரிபொருட்கள் பால்மா, சீனி, வெங்காயம், மிளகாய், கிழங்கு போன்றவற்றுக்கான மானியமே மீளப்பெறப்பட்டிருக்கிறது. கோதுமை மாவுக்கான மானியத்துக்கும் இக்கதி நேரக்கூடும்.

இதேநேரத்தில் இரண்டு வாரங்களுக்கு முன்னர்தான் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரிப்பதை ஆராய சந்திரிகா சிரேஸ்ர அமைச்சர்கள் ஏழுபேரைக் கொண்ட அமைச்சரவை உபகுழு ஒன்றை நியமித்திருந்தார்.

அரிசி, பால்மா, சீனி போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையேற்றத்துக்கான காரணத்தைக் கண்டறிவதுடன், விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இக்குழு எடுக்கும் எனவும் நுகர்வோர் விவகார அமைச்சு தெரிவித்திருந்தது.

இக்குழுவின் இணைப்பாளராக இருந்தவர் நிதியமைச்சர் சரத் அமுனுகம என்பது கவனிக்கத்தக்கது. சுசில்பிறேம் ஜெயந், தினேஸ் குணவர்த்தன. மைத்திரிபால சிறிசேன, அனுர பிரியதர்சன யாப்பா, அனுரகுமார திசாநாயக்க, சுனில் ஹந்துன்நெத்தி ஆகியோர் இதன் உறுப்பினர்கள். இதில் கடைசி இருவரும் ஜே.வி.பி. யினர் ஆவர்.

இந்தக்குழு நியமிக்கப்பட்டு சரியாக ஒரு வாரத்துக்குப் பிறகு அத்தியாவசியப் பொருட்களுக்கான மானியங்களை மீளப் பெறும் முடிவுக்கு நிதியமைச்சு வந்திருந்தது தான் சுவாரஸ்யமானது.

இதனைச் சிறிலங்காவின் மக்கள் எப்படி எதிர்கொள்ளப் போகிறார்கள்? விருந்துச்சோற்றுக்கு எதிர்பார்த்துக் காத்திருக்க சோற்றுக் கோப்பையே களவாடப்பட்ட துயரக் கதை சிறிலங்காவின் மக்களுக்கு அரசினால் பரிசளிக்கப்பட்டிருக்கிறது. அரசினால் இந்தத் திசையிலேயே பயணிக்க முடியும். ஏனெனில் வேறு பாதைகளில் பயணிக்க அவர்கள் எடுத்துக்கொண்டுள்ள வேலைத் திட்டம் அனுமதிக்காது.

அரசின் செலவீனங்கள் அதிகரித்துச் செல்லும் வேளையில், அவற்றை ஈடுசெய்வதற்கான வரவுகள் திறைசேரிக்குக் குறைந்தே செல்கின்றன. ஏனெனில் ஏற்கனவே சிறிலங்காவின் வரவுசெலவுத் திட்டத்தின் துண்டுவிழும் தொகையை ஈடுசெய்யும் மூலகங்களாக வெளிநாட்டுக் கடன்கள், உள்நாட்டுக் கடன்கள், வெளிநாட்டு முதலீடுகள், தனியார் மயமாக்கல் மூலமான நிதியீட்டம் என்பவற்றுடன் புதிய வரிகளும் காணப்படுகின்றன.

புதிய அரசாங்கம் 30 ஆயிரத்திற்கு மேற்பட்ட பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கவுள்ளது. 10லட்சத்துக்கு மேற்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்க வேண்டியுள்ளது. ஓய்வூதியங்களும் இதில் சேர்த்துக் கொள்ளப் பட்டால் மேலும் இரண்டரை லட்சம் பேர் உள்ளடக்கப்படுவார்கள். இதை விடப்புதிய போராயுதங்களின் கொள் வனவிலும் அரசு ஈடுபட்டுள்ளது.

ஆகவே அரசின் வருமானத்துக்கான வழிகள் துலக்கமாக இல்லாமலிருக்கையிலே செலவீனம் வானளாவ எகிறிச் செல்லப்போகிறது; சென்று கொண்டிருக்கிறது. இதனை எதிர்கொள்ளும் ஒரு உபாயமாக அரசாங்கம் மானியங்களை மீளப் பெற்றிருக்கிறது.

அரசுக்கான வருமான மூலங்கள் ஏன்மூடிக்கொண்டன? சமாதான முயற்சிகளில் அரசு காட்டும் 'அங்கிடுதத்தித்தனம்' அதனை முடக்கி வைத்திருக்கிறது. ஏற்கனவே சமாதான முயற்சிகள் முன் நகர்ந்து செல்கையில் வாக்குறுதியளிக்கப்பட்ட 700 மில்லியன், 4.5 பில்லியன் டொலர்களை மனதில் வைத்தே ஐ.தே.கட்சி தனது பொருளாதாரத் திட்டமிடலை மேற்கொண்டிருந்தது. சந்திரிகாவின் கூடாரமும் அதனையே அடிமனதில் இலக்கு வைத்திருக்கிறது. ஆனால் அதனை அடையக் குறுக்கு வழிகளை நாடுகிறது.

சமாதானப்பாதையில் ஏற்படும் முன்னேற்றத்தை குறிகாட்டியாக வைத்தே மேற்குலகிலும் யப்பானினதும் நிதியுதவிகளுக்கான வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே இதனைப் பெறவேண்டுமானால் சமாதான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு வளர்ச்சிப் பாதையை எட்டியே ஆகவேண்டும். அதற்குத் தயாராக இல்லாத அரசு என்னதான் குறுக்கு வழிகளை நாடினாலும், மூடப்பட்ட கதவுகளில் முட்டிக் கொள்ளவே நேரிடும்.

எனவேதான் அரசாங்கம் செலவீனங்களை ஈடுகட்ட இப்போது மானியங்களை மீளப்பெற்றிருக்கிறது. இனி நடக்கப்போவது என்ன? புதிய வரிகளின் வரவா? அவை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ●

நாற்றிசை நடப்பு



# கீழைத்தேசம் மற்றும் மேலைத்தேசங்களில் சனநாயகத்தின் பிரயோகம்

ஐங்கரன்



சனநாயகம் என்ற சொற்பதம் அரசியலுக்கான பிரயோகமென மட்டுமே உணர்ந்து கொள்பவர்களாக கீழைத்தேச மக்கள் காணப்படுகின்றனர். அதிலும் மிகப்பிந்திய சனநாயக பின்பற்றுகையைக் கொண்ட மக்கள் தேர்தலை குறிக்கும் ஒன்றாகவே சனநாயகத்தை விவரணப்படுத்தி வருகின்றனர். ஆனால் சனநாயகமே மேற்கு நாடுகளில் பொருளாதார பரிமாணமாக, சமூகப் பரிமாணமாக தனிமனித உரிமை, சுதந்திரம் சார்ந்த பரிமாணமாக வடிவமைக்கப்பட்டு கையாளப்படுகின்றது. சமூக, பொருளாதார அபிவிருத்திக்கும் தனிமனித பொருளாதார வளர்ச்சிக்கும் சனநாயகம் ஆற்றி வரும் பங்கு அளப்பரியது. அத்தகைய நோக்கிலேயே மேற்கு நாடுகளின் சனநாயக மயப்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. இதனை அரைகுறையாக பிரயோகப்படுத்தி கீழைத்தேசங்களின் பல பிராந்தியங்களை ஆக்கிரமித்த சக்திகள் எஞ்சிய பிராந்தியங்களிலும் அரைகுறை சனநாயகத்தை சனநாயகமென போதிக்க ஆரம்பித்துள்ளது.

## ஆப்கானிஸ்தானும் தேர்தலும்

ஆப்கானிஸ்தானில் சனாதிபதி தேர்தல் சூடு பிடித்துள்ளது. அடுத்த ஒக்டோபரில் நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலுக்கு 23 வேட்பாளர்களது பெயர்கள் ஆப்கான் தேர்தல் திணைக்களத்தால் அறிவிக்கப் பட்டுள்ளது. என்றுமில்லாதவாறு தேர்தல் களத்தில் வேட்பாளர்கள் குவிந்திருப்பதுடன் சனநாயகத்தின் பலவீனங்கள் துளிர்விட ஆரம்பித்து விட்டது.

பிரதான போட்டியாளர்கள் ஓரிருவர் காணப்பட்டாலும் ஆப்கானிஸ்தான் மக்களை தாமானம் எடுக்க முடியாதளவுக்கு இத்தேர்தல் காணப்படுகின்றது. மிகச் சிறிய பெரும்பான்மை வாக்குகளை பெறும் வேட்பாளரே தெரிவு செய்யப்படும்போது சனாதிபதிக்கு எதிரான வாக்குகள் தொகை அதிகமாக இருக்குமென்ற பலவீனமான சனநாயகமே காணப்படும். இதனையே ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளின் சனநாயகமாக கருதப்படும் போக்கு காணப்படுகின்றது. இதனை திணித்த அமெரிக்காவும் அதன் சகாக்களும் ஆப்கானிஸ்தானின் இயல்பான ஆட்சிமுறையை தகர்த்ததுடன், மேற்குக்கு இயைபான ஓர சமத்தை சிறந்ததென ஆக்கும் வேலையையும் பூரணமாக்கிவிட்டது.

இதேவேளை அமெரிக்கர்களுக்கு எதிரான தீவிரவாத தாக்குதல் அதிகரித்திருப்பதுடன் படிப்படியாக தீவிரவாதம் பலமடையத் தொடங்கியுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் அதிர்ச்சியூட்டும் வகையில் அமெரிக்க பாதுகாப்புச் செயலர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் ஆப்கானிஸ்தானுக்கு வருகை தந்துள்ளார். அவரது விஜயம் முக்கியமானதாக விளங்கியபோதும் ஆப்கான் தீவிரவாதத் தாக்குதலால் அதிர்ந்துள்ள இராணுவத்தை உசார்ப்படுத்தவென ஊடகங்கள் கருத்து வெளியிட்டிருந்தன. அவர் அங்கு குறிப்பிடுகையில் ஆப்கானிஸ்தானில் உற்பத்தியாகும் போதைப்பொருள் உற்பத்தியே ஆப்கான் சனநாயகத்திற்கு தடையாக உள்ளதெனக் கூறினீர். எந்தளவுக்கு அமெரிக்கர் சனநாயகத்தை நேசிக்கிறார்கள் என்பது அவரது கருத்திலிருந்து புலனாகின்றது. சுதந்திரம், தன்னாதிக்கம் உரிமை எதுவுமில்லை.

சனநாயகத்திற்கு தடையாக போதைப்பொருள் மட்டுமே அவருக்கு தடையாக புலப்பட்டது. சிறைக் கைதிகள் சித்திரவதை செய்யப் பட்டமையோ, ஈராக், ஆப்கான், யூகோசிலாவிய மக்கள் உரிமை இழந்து சுதந்திரம் இழந்திருப்பதையோ அவர் சனநாயகமென கருதவில்லை. அமெரிக்க ஆட்சியாளர் பிரயோகப் படுத்த விரும்பும் சனநாயகம் அரைகுறையானதென்பது தெளிவாகப் புலனாகின்றது.

## நஜாவ் நகர்

சதார் அமெரிக்கப்படைகளுக்குப் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் ஷியா முஸ்லிம் தலைவராக உள்ளார். இடைக்கால அரசிடம் ஆட்சியைபெயரளவில் கொடுத்த அமெரிக்க ஆக்கிரமிப்பு இராணுவப்பிடியை தொடர்கின்றது. இராணுவப்பிடியால் எதனையும் சாதிக்கலாமெனக் கருதும் அமெரிக்கா நஜாவ் நகரத்தை நோக்கி ஒரு சிறிய யுத்தத்தை நிகழ்த்தி வருகிறது. கையாலாகாத் தனத்துடன் செயல்படும்இடைக்கால அரசு ஈராக்கிய மக்களின் துயரமாகவே காணப்படுகின்றது.

இத்தாக்குதல் ஈரானிற்கு எதிரான தாக்குதல் என்றே மேற்கு நாட்டவர் வர்ணிக்கின்றனர். ஈராக்கின் ஷியா முஸ்லிம்களின் சதார் படையுடன் ஈரான் இணைந்திருப்பதுடன் தாக்குதலை முறியடிக்க பாரிய யுத்த அணுகுமுறையே உசிதமானதென அமெரிக்க இராணுவத்தலைமை கருதியதாகத் தெரியவருகிறது.

இதனால் இத்தாக்குதலை சாதாரணமானதாக எடைபோட முடியாதுள்ளது. சதார் ஒரு சதாம் இல்லா விட்டாலும் பின்னணியுடன் செயற்படும் ஒருவராகவும் ஈரான் மட்டுமன்றி சிரியாவின் ஆதரவுப்படையாகவுள்ளதெனவும் கூறப்படுகின்றது. இதனால் அமெரிக்கா அதிகமானவற்றை சாதிக்க விரும்புகிறதென்பதே தாக்குதலின் உக்கிரத்தைக்கொண்டு மதிப்பிடமுடிகிறது.

அமெரிக்காவின் ஈராக் பற்றிய கொள்கையில் எந்த மாற்றமும் நிகழவில்லை என்பது அதன் நடவடிக்கை உணர்த்துகிறது. மேலும் தாக்குதலினால் அமெரிக்கா எதிர்காலத்தில் போட்ட அரசியல் திட்டமிடல்கள் தகர்ந்ததுடன் இடைக்கால அரசும் இதன் ஆட்சியாளரும் ஈராக் மக்களின் நெருக்குவாரத்துக்கு உட்படக்கூடியவர்களாகக் காணப்படுவார்கள். அமெரிக்க அரசும் சரி, இடைக்கால அரசும் சரி ஈராக் மக்களுக்கு எதனையும் ஏற்படுத்திக்கொடுக்காது தீவிரவாதத்தை கட்டுப்படுத்துவது கடினமான பணியாகவே அமையும்.



தீவிரவாதம் எதுவும் வானத்திலிருந்து ஈராக் மண்ணில் விழவில்லை என்பதை அமெரிக்க -இடைக்கால தரப்பு உணரும்வரை தாக்குதல் தவிர்க்க முடியாத உத்தியாகவே அமையும்.அமெரிக்கா ஒரு புதிய வர்க்கத்தை உருவாக்க முயன்றாலும் தீவிரவாதம் அதனை எதிர்த்தே செயற்படும். அமெரிக்க நடவடிக்கை ஷியா முஸ்லிம்களை தூண்டிவிட்டிருப்பதுடன் தீவிரவாதத்தை மேலும் பலப்படுத்துவதாகவே அமையும். அதனால் அமெரிக்கா ஏதாவது அடைய முடியுமாயின் அதனை அடையும் என்பதே அதன் பொதுவான போக்காகும்.

## பலஸ்தீனர் மீதான தாக்குதல்



பலஸ்தீன மக்களுக்கு சார்பாக உலகில் எந்த சக்திகளும் இல்லை என்றாகிவிட்டது.இஸ்ரேலியரின் தாக்குதல்கள் எல்லையின்றி நிகழ்ந்தாலும் உலகம் கண்டு கொள்வதாக இல்லை. அல்லது இஸ்ரேலியரை பாதுகாக்கும் அமெரிக்கரை எதிர்த்து நிறுத்த உலகில் எந்தப் பதில் சக்தியும் இல்லை என்பதே யதார்த்தமாகும். மேற்கை நம்பி ஆயுதப் போராட்டத்தை கைவிட்ட அரபாத் நிர்க்கதியாகிவிட்டார். தற்போது பலஸ்தீன விடுதலை அமைப்பிலிருந்தும் அரபாத் கழற்றிவிடப்படும் நிலைமையே வளர்ந்ததுடன் plo வுக்கு மாற்றீடாக தீவிரவாத அமைப்பை தருவிக்க உலகம் விரும்புவதையும் காணமுடிகின்றது. பலஸ்தீன மக்கள் கற்களை வீசியெறியும் போராட்டத்திற்கு வழி வகுத்ததில் மேற்கிற்கும் இஸ்ரேலுக்கும் பங்கிருந்தது போல், யசீர் அரபாத்துக்கும் பங்கிருந்தது. மக்களை அரசியல் மயப்படுத்துவதுடன் ஆயுதப் போரில் பரீட்சயமாக்குவதையும்.. உரிய காலத்தில் பார்த்துக் கொள்ளவில்லை. அதுமட்டுமன்றி மேற்குலகத்தை நம்பி plo வையும் தன்னையும் பாதுகாக்காது அரபாத் விளங்கியதுடன் ஆயுதப் போராட்டத்தோடு இணைந்துகொள்ளவும் தவறினார். ஒரு கட்டத்தில் கைவிடப் பட்ட ஆயுதப் போராட்டத்தை அரபாத்தால் மீண்டும் ஒருபோதும் ஆரம்பிக்க முடியாமல் போய்விட்டது. கஸ்ரோவோ, போஷிமினோ, மாவோவோ போராட்டத்தை எதற்காகவும் நிறுத்திக்கொள்ளவில்லை. தொடர்ச்சியாக முன்னெடுத்ததுடன் பனிப்போர்க் காலம் சாதகமாக அமைந்திருந்தது. ஆனால் புதிய உலக ஒழுங்கு மட்டும் அரபாத்தை கட்டிப் போடவில்லை. பனிப்போர்க்காலமே அதனை ஆரம்பித்திருந்தது. மேலும் அரபாத்தின் பலவீனமே பலஸ்தீனர்களின் அழிவுக்குக் காரணமாகிறது. பலமான சக்தியாக எந்த நாடு எழுச்சியடைகிறதோ அத்தகைய நாடு மக்களையும் போராட்டத்தையும் தக்கவைக்கும்.

எனவே பலஸ்தீனர் மீதான இஸ்ரேலியரின் தாக்குதல் பலத்தின் கட்டுமானத்திலிருந்து நிகழ்த்தப்படும் யுத்தமாகும். அதனை முறியடிக்க பலஸ்தீனர்கள் பலமானவர்களாக மாற்றப்படவேண்டும். மேற்குலகின் சனநாயகமே, தீர்வுத்திட்டமே பலஸ்தீனர்களை பாதுகாக்கவும் மாட்டாது பலமாக்கவும் ஆக்காது.இவ் யதார்த்தம் உலகில் போராடும் எந்த மக்கள் கூட்டத்திற்கும் பொருத்தமானதாக அமையும்.

## இந்திய சுதந்திர தினம்

ஆரவாரிப்பின்றி, ஆனால் பல தாக்குதல்களுக்கு முகங்கொடுத்தே முடிந்துள்ளது. புதிய அரசின் புதிய கொண்டாட்டம் என்ற வகையில் மன்மோகன் சிங்குக்கும் அதன் ஆதரவாளர்களுக்கும் புதுவித பாடமாகும். இந்தியாவின் பல மாகாணங்களின் தீவிரவாதத்தின் தாக்குதல்களும் அழிவுகளும் நிகழ்ந்துள்ளது. செங்கோட்டையில் பேசிய பிரதமர் வறுமை, பொருளாதாரம் கல்வி வேலைவாய்ப்பு

(20 பக்கம் பார்க்க...)

# நேர்நோக்கு

அரசாங்கம் உணவுப் பொருட்களுக்கு வழங்கி வரும் மானியங்களை நீக்கவுள்ளதாகவும் அதனால் பொருட்களின் விலை அதிகரிக்கும் என்றும் சிறிலங்காவின் நிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். நாட்டில் இவ்வாறு பல பொருட்களுக்கு மானியம் வழங்கப்படுவதாகவும் அதனை நீக்குவதன் மூலம் பெறப்படும் நிதியை அபிவிருத்திக்குச் செலவிடப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

கடந்த பொதுத் தேர்தலின் போது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் வாக்குறுதிகளில் மிக முக்கியமானதாக அமைந்தவை விலைவாசிக்குறைப்பு, அரசாங்க ஊழியர்களுக்கு 70 சதவீத சம்பள அதிகரிப்பு, வேலையற்றபட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல் என்பனவாகும்.

சுமார் இரண்டு வருட காலமாக சமாதான முயற்சிகளின் காரணமாக புத்துயிர் பெற்று வந்த சிறிலங்காவின் பொருளாதாரம் மேலும் வளர்ச்சியடைய வேண்டுமானால் சமாதான முயற்சிகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். யுத்தம் நடைபெறும் நாட்டில், அல்லது யுத்த அச்சம் நிலவும் நாட்டுக்கு உதவ வெளிநாட்டு நிதிநிறுவனங்களும் அரசுகளும் தயாராக இல்லாத நிலையில் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கத் தயாராக ஐ.தே.முன்னணி இருந்தது.

இதற்கு முட்டுக்கட்டை போட்டாலும் சமாதான முயற்சியைத் தொடராவிட்டால் எதுவுமே செய்ய முடியாது என்பதைச் சனாதிபதி சந்திரிகா உணர்ந்திருந்தார். எனவே அவரும் கூட

## தவறு வாக்காளர்களிலேயே...!

சமாதான முயற்சிகள் தொடரும் என்றே தேர்தல் பிரச்சாரங்களில் கூறிவந்தார்.

எனவே முன்னர் கூறப்பட்ட விலைவாசி குறைப்பு, அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு, பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு என்பனவே அவரது கட்சி ஆட்சிபீடம் ஏற உதவியாக இருந்தது.

அவர் நாடாளுமன்ற அதிகாரத்தைக் கைப்பற்றியவுடன் மாகாண சபைகளையும் கலைத்து அவற்றுக்கான தேர்தல்களை நடத்தினார். அத்தேர்தல் காலத்திலும் கூட இவ் வாக்குறுதிகளையே வலியுறுத்தினார்.

மாகாணசபைத் தேர்தல் முடிவுற்றதும் எரிபொருள் விலைஏற்றம் பொருட்களின் விலை அதிகரிப்பு என்பன ஏற்படும் என எதிர்க்கட்சிகள் எச்சரிக்கை செய்தபோது அவ்வாறெல்லாம் இல்லை என அவரது கட்சியினர் கூறிவந்தனர்.

எரிபொருட்களின் விலையை உயர்த்தாவிட்டால் தமக்கு பல கோடி ரூபாக்கள் இழப்பு ஏற்படும் என பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்து வந்த போதும் விலையை ஏற்ற அனுமதிக்கப்படவில்லை. மாவின் விலையை அதிகரிக்க பிறிமா நிறுவனம் கோரிக்கைவிடுத்த போது அந்த நிறுவனத்தை இழந்தாலும் மாவின் விலையைக் கூட்ட அனுமதிக்க முடியாது என அரசாங்கம் சவால்விட்டது.

ஆனால் இப்பொழுது எரிபொருளின் விலை குறிப்பிடத்தக்க தாக்கம் விளைவிக்கக் கூடிய வகையில் அதிகரித்துள்ளது. பெற்றோலின் விலைமிகக் குறுகிய சில நாட்களில் இரு தடவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. டீசலின் விலையும் அதிகரிக்கப்பட்டேயாக வேண்டிய நிலை உள்ளது. இவையெல்லாம் அனைத்துப் பொருட்களினதும் விலைகளை அதிகரிக்கக் கூடியவை என்பது எவருக்குமே தெரிந்த ஒன்று. இப்படி இருக்கையில், பொருட்களுக்கு வழங்கப்பட்ட மானியம் நீக்கப்பட்டால் மேலும் விலைவாசி அதிகரிப்பு ஏற்படப்போகின்றது.

இதேவேளை அரசாங்க ஊழியர்களுக்கு 70 சதவீத சம்பள உயர்வு வழங்கப்படும்



என்ற சந்திரிகாவின் வாக்குறுதி இன்று வரை நிறைவேற்றப்படவில்லை.அதற்கு வரவு-செலவுத்திட்டத்தின்போது அதிகரிப்பு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த வரவு செலவுத்திட்டம் எப்போது சமர்ப்பிக்கப்படப்போகின்றது? என்பது ஆட்சியாளருக்கே தெரியாது.

ஏனெனில் முதலாவதாக நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றக் கூடிய பெரும்பான்மைப் பலம் ஆட்சியாளர்களிடமில்லை. ஜாதிகஹெல உறுமய பா.உ கள் வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்குவதாகக் கூறினாலும் இரண்டாவதாக வரவு செலவுத் திட்டம் தயாரிக்க அரசாங்கத்திடம் போதிய நிதிவசதியோ, அல்லது கடன் கிடைக்கும் என்ற நம்பிக்கையோ இல்லை.

அவ்வாறு வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்படும் பட்சத்தில் 70 வீத சம்பள உயர்வு வழங்கப்படுமா? அவ்வாறு வழங்கப்படினும் விலைவாசி ஏற்றம் காரணமாக சம்பள உயர்வால் உரிய பயன்கிட்டுமா? என்பவையெல்லாம் கேள்விக்குரியவையே.

இதேபோன்றுதான் அனைத்துப் பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்ற ஆளும் கட்சியின் வாக்குறுதியும் உள்ளது. 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் வேலை கோரி விண்ணப்பித்திருக்கையில் சுமார் 17ஆயிரம் பட்டதாரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அவர்களின் பெயர் விபரங்களை மட்டும் அரசாங்கம் வெளியிட்டது.

இந்தச் சாதனையை அமைச்சர் கேக்வெட்டிக்கொண்டாடிக்கொண்டிருக்கையில், வெளியில் பல்லாயிரக்கணக்கான பட்டதாரிகள் தாம் புறக்கணிக்கப்பட்டமையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்திக்கொண்டிருந்தனர். இப்போதும் கூட அனைவருக்கும் வேலை வாய்ப்பெனும் வாக்குறுதி மட்டுமே உள்ளது.

இவ்வாறு வாக்குறிதிகளைக் காற்றில் பறக்கவிட்டுள்ள அரசாங்கம் மானியங்களை நீக்கி அவற்றை அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்போவதாகக் கூறுவது அபத்தமாகும்.

ஆனால் இந்த அபத்தங்களெல்லாம் நிகழ தென்பகுதி வாக்காளர்களே காரணமாக அமைகின்றனர். ஏனெனில் இவ்வாறு அரசியல் வாதிகள் கூறும் "மணலைக்கயிறாகத் திரிக்கும்" வாக்குறுதிகளைச் சீர்தூக்கிப் பார்க்காது யதார்த்தத்தை சரிவரப்புரியாது இவ்வாறானவர்களை மாறிமாறி ஆட்சி பீடத்தில் ஏற்றுவதனாலேயே அரசியல்வாதிகள் போலி வாக்குறுதிகளை வழங்கி மீண்டும் மீண்டும் ஆட்சிபீடம் ஏறுகின்றனர். அத்துடன் அவர்கள் இவ்வாறு நடப்பது இதுதான் முதற்தடவையுமல்ல. அல்ல என்பதால் தவறு அவர்கள்மீதே.

**வேலவன்**

இந்திய உற்பத்திப் பொருட்கள் பல நம்மூர் சந்தைகளில் நிறையவே நிரம்பியுள்ளன.

சில்வர் பொருட்கள் முதல் உடுக்கும் உடைவரை, நீண்டு நல்ல சினிமாக்களுக்குப்பதில் குடும்பத்தோடு இருந்து பார்க்க முடியாத சினிமா என நீண்டுசெல்கிறது இறக்குமதி.

இந்தியாவிலிருந்துவரும் கோபால் பற்பொடிக்கான கேள்வி அரிதாகிப்போக நம்மவரின் நாட்டம் தங்களின் வாயசைவுக்கு நொறுக்குத்தீன்களை தேடியது.

விளைவு உருமாறி, பெயர்மாறி பல நொறுக்குத் தீன்கள் விற்பனைக்குவர இன்னொரு புறம் 'நிஜாம்பாக்கு, நீலாம்பரிப்பாக்கு' என பாக்குவகையராக்கள் மறுபுறம் சந்தையை நிரப்பின.

ஆனால் இதன் தோன்றல்களாய் சந்தைகளில் அதுவும் யாழ்ப்பாணக்கடைகளில் அதிக விற்பனைக்கான இடத்தைப்பிடித்திருப்பவை 'பான்பராக்' என்ற ஒரு வகையான சிறுபொதிகள்.

இந்த 'பான்பராக்'குகளுக்கு இந்தியாவில் அதிலும் தமிழ்நாட்டில் பெரியதொரு பொலிஸ் தேடுதல்வேட்டையே நடாத்தப்பட்டு பல இலட்சம் பெறுமதியான 'பான்பராக்'குகளை கைப்பற்றி தடைவிதிக்கப்பட்டது 'பான்பராக்' இதேபோன்று இலங்கையில் கொழும்பிலும் இவ்வாறு தேடுதல்கள் மூலம் எச்சரிக்கப்பட்ட 'பான்பராக்குகள்' யாழ்ப்பாணத்தில் தடையின்றி தாராளமாய் விற்பனைக்கு விடப்பட்டுள்ளது.

இந்த 'பான்பராக்'குகளின் விளைவுகள் பற்றி அறிந்துகொள்ளாதஅல்லது அறிந்தும் தெரியாதது போல நடிக்கும் ஒரு சில கும்பல்கள் இதன் வருகையிலும் விற்பனையிலும் துணைபோகின்றன.

ஆனால் இந்த 'பான்பராக்'குகளின் யாழ்ப் பாண விஜயத்தின் பின்னணியில் அரசியல் புலனாய்வுச்சக்திகளின் கரங்கள் நீண் டிருக்கும் சாத்தியப்பாடுகள் அதிகமாகவும் உள்ளது.




ஏனெனில் இந்த 'பான்பராக்' குகள் பார்வைக்கு பாதக மில்லாதவை போல தோன்றினா லும் இதுவொரு போதைப்பொருளாகும். ஆரம்பத்தில் இந்த 'பான்பராக்'குகள் பாகிஸ்தானிலிருந்து அதிகமாக இந்தியாவுக்குள் கடத்தப்பட்டுவந்தன.

இவ்வாறு இந்தியாவுக்குள் கடத்தப்படுவதற்கும் கடத்துவதற்கும் விற்பனை செய்யப் படுவதின் பின்னணியில் பாகிஸ்தான் புலனாய்வு அமைப்பின் கரங்கள் இருந்ததாக தகவல்கள் தெரிவித்தன.

## கொடிய "பான்பராக்"குகள் விடிய விடிய விற்பனை

காரணம் 'பான்பராக்'கின் பாவனை பயனாக இந்திய இளைஞர்களும் இந்திய சமூகத்தையும் போதைக்கு அடிமையாக்கி இந்தியர்களை போதைக்குள் அமிழ்ந்து கிடக்கும் வகையில் பாகிஸ்தான் புலனாய்வு அமைப்பு செயற்பட்டன.

இவ்வாறு இந்தியாவிலும், அதேபோன்று இலங்கையிலும் விற்பனை செய்யப்படும் 'பான்பராக்'குகள் பாடசாலைகளை அண்மித்த பகுதிகளில் மாணவர்களை குறிவைத்தே விற்கப்பட்டன.

இதன் விளைவு தொடர்பாக இலங்கையில் பலமுறை எச்சரிக்கப்பட்டு தடுப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் இப்போது யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்படுவதன் பின்னணியென்ன என்பது தொடர்பாக யாழ்ப்பாணத்து வர்த்தகர்களும் பெற்றோர்களும், அமைப்புகளும் கவனம் செலுத்தவேண்டும்.

ஏற்கனவே மதுவிற்கும், வன்முறைக்கலாசாரத்துக்கும், சமூக சீரழிவுக்கும் யாழ்ப்பாண இளைய சமூகத்தை பழக்கப்படுத்தியவர்கள் இப்போது 'பான்பராக்' வகையராக்களை விற்பனைக்கனுப்பி இன்னுமொரு சீரழிவுக்கு பிள்ளையார் சுழி போட முயற்சிக்கப்படுகிறது.

அதிகம் யாழ்ப்பாணத்தில் வாகனச்சாரதிகள், முச்சக்கரவண்டிச்சாரதிகள், மாணவர்கள் மத்தியில் கணிசமான அளவு பாவனைக்கு வந்து விட்டதாகவும், இவர்களே அதிகமாக இதனை, பாவிக்கின்றார்கள் எனவும் தெரியவருகிறது.வாகன விபத்துக்களுக்கும், வாய்ச்சண்டைகளுக்கும் இந்த 'பான்பராக்'குகளின் பாவனையின் விளைவும் ஒரு காரணமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே - இத்தகைய பொருட்கள் தொடர்பாக எமது சமூகம் உடனடியாக விழிப்படைந்து எமது இளம் சந்ததியை பாதுகாக்க வேண்டியகடப்பாடு இருக்கிறது.

இவையெல்லாம் அடிப்படையில் எமது தேசத்தை சின்னாபின்னமாக்க தீட்டப்படும் தீய சக்திகளின் நாசகார திட்டங்கள் என்பதை எமது சமூகம் புரிந்துகொள்ளவேண்டும்.

விழிப்படைவதே இப்போது எமக்கான முதற்பணி என்பதை எல்லோரும் புரிந்துகொள்ளவேண்டும் புரிந்து கொள்வார்களா?

முதலில் எமது இளம் சமூகத்தை போதைக்கு அடிமையாக்குவது அடுத்து எம்மை அரசியல் அடிமையாக்குவது இதுதான் இதன்முடிவு.

இவ்வாறுதான் வன்னியிலும் லேகியம் என்ற பெயரில் சில போதைப் பொருட்கள் விற்பனைசெய்யப்படுகிறது.

ஆனால் இந்த லேகியம் மருத்துவக்குணம் கொண்டதாகவும் இது மருந்துப்பொருட்களுக் குள் உள்ளடங்குவதாகவும் சாதாரண விற்பனைக்குள்ளாகிறது.

ஆனால் இந்த லேகியத்தை (மதன மோகினி போன்ற) மருத்துவ தேவைகளுக்காக பயன்படுத்தப்படுவதிலும் பார்க்க, போதைக்காக பயன்படுத்தப்படும் அளவே அதிகம்.

பொதுவாக ஒரு சில நாடுகளில் அனுமதிக்கப்படும் மருந்துப் பொருட்களுக்கு இன்னொரு நாட்டில் தடைவிதிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு.

இவ்வாறு சாதக பாதக ரீதியாக மருத்துவரீதியான அனுமதிபற்றி நாமும் சிந்திக்கலாமே.

இதுவொரு போராடும் தேசம் நாம் விழிப்பாகத்தான் இருக்கவேண்டும் லேகியம் முதல் "பான்பராக்"குகள்வரை.

**நக்கீரர்**

# அரசின் மனித உரிமை மீறலுக்கு எதிராக தோன்றியதே தமிழ் மக்களின் போராட்டம்

## - மனித உரிமை ஆணைக்குழு செயலாளர் வணக்கத்திற்குரிய கருணாரத்தினம் அடிகளார். -

***தமிழ் மக்கள்மீது சிங்கள அரசுகளால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட பல கொடூரங்களால் தமிழ் மகக்களின் உரிமைகள் மீறப்பட்டன.***

***அத்துடன் தமிழ் மக்களுக்கே உரித்தான அடிப்படை வாழ்வியல் மற்றும், அரசியல் உரிமைகள் கூட பறிக்கப்பட்டதுடன் தமிழ்மக்கள் மீது இனக்கலவரங்களையும், படுகொலைகளையும், பாலியல்வல்லுறவு களையும் கட்டவிழ்த்து விடப்பட்டன.***

***பெண்கள் என்றோ, சிறுவர்கள் என்றோ, வைத்திய சாலைமற்றும் பாடசாலைகள் என்றோ பாகுபாடு எவையுமின்றி படுகொலைத் தளங்களாகப் பயன்படுத்தி தமிழ் மக்கள் மீது மிகப்பெரிய மனித உரிமை மீறலை சிறிலங்கா அரசுகள் மேற்கொண்டன.***

***ஆனால் இவற்றை ஒரு அமைப்பு ரீதியாக வெளிப்படுத்துகின்ற அல்லது இதற்கு எதிராகக் குரல் கொடுக்கும் வகையில் தமிழ் மக்களுக்கென ஒரு மனித உரிமைசெயலகம் இருக்கவில்லை. ஆனால் இப்போது அதனை நிவர்த்தி செய்யும் வகையில் கிளிநொச்சியில் மனித உரிமைச் செயலகம் இயங்கி வருகிறது. இந்த வகையில் மனித உரிமை ஆணைக்குழுவின் செயலாளர் வணக்கத்துக்குரிய கருணாரத்தினம் அடிகளார் அவர்களை இவ்வாரம் செவ்வி காணும் நோக்கில் சந்தித்தோம். அவர் எம்மோடு பகிர்ந்து கொண்ட கருத்துக்கள் வருமாறு;***

தமிழ்மக்களின் மனித உரிமைகளை, அடிக்கடி ஆட்சிபீடம் ஏறிய சிங்களத் தலைமைகள் மதிக்கத்தவறி மனித உரிமை மீறல்களை செய்து வந்தது. இது இன்று நேற்றல்ல, காலம் காலமாக நடை பெற்று வந்த ஒன்றாகும்.

எந்த ஒரு நாட்டிலும் எந்த ஒரு விடுதலைப்போராட்டத்தை எடுத்துக்கொண்டாலும் அவை ஏற்படுவதற்கான அடிப்படைக்காரணம் அங்கு ஏற்பட்ட மனித உரிமைமீறலே ஆகும். அந்தவகையிலே தமிழ்மக்களுடைய விடுதலைப் போராட்டமானது சிங்கள ஆட்சியாளர்களாலும் சிங்களத் தலைமைகளினாலும் சிங்களப் பேரினவாதிகளாலும் காலம் காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்த



மனித உரிமைமீறல்கள் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள், பல்கலைக்கழக வெட்டுப்புள்ளி, பொருளாதாரத் தடை, பாரபட்சமான கல்விக் கொள்கை என பல்வேறுபட்ட மனித உரிமை மீறல்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் தமிழ் மக்கள் மீது காலம் காலமாக திணிக்கப்பட்டு வந்தமையால் அதற்கு எதிராக எழுந்த உரிமைப் போராட்டம் இன்று ஆழ வேரூன்றி எமது உரிமைகளை நாமே வென்றெடுக்க வேண்டும் என்றவகையில் மக்கள் இன்று தாமாகவே நமது உரிமைகளுக்காக போராடிவருகின்றனர். இது எவரும் மறுக்க முடியாத ஒன்றாகும்.

ஒட்டுமொத்தமான தமிழ்மக்களின் வாழ்வு சிறிலங்கா அரசினால் கேள்விக்குறியான நிலைக்குத் தள்ளப்பட்டதுடன்; திட்டமிட்ட ரீதியில் சிங்கள பேரினவாதிகள் எங்களுடைய மக்களை எந்தவித காரணங்களும் இன்றி இன அழிப்புகளை செய்து வருகின்றனர். இதனை பலவழிகளில் தமிழ்மக்கள் களைவதற்கான முயற்சிகள் எடுத்தபோதும், அவர்கள் எடுத்த ஒவ்வொரு முயற்சிகளிலும் தட்டிக்கேட்க ஆட்கள் இல்லாது அழிக்கப்பட்டு வந்தனர். அதாவது 1958 ஆம் ஆண்டு இனக் கலவரத்தை எடுத்துக் கொண்டால் தமிழ்மக்கள் எந்த குற்றங்களும் செய்யாத நிலையில் அவர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டு சித்திர வதைகள் மேற்கொள்ளப்பட்டு, படுகொலை செய்யப்பட்டனர். இது தொடர்ந்து 1977-1983, என பட்டியல் இட்டுக் கொண்டு செல்லமுடியும். இந்தப் படுகொலைகளில் எல்லாம் தமிழ்மக்கள் எந்தத்தவறும் செய்யாது அவர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு கைதுகள் செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

எந்த ஒரு நாட்டிலும் இல்லாத அளவுக்கு தமிழ்மக்களின் உரிமைகள் சிங்கள ஆட்சியாளர்களால் சிதைக்கப்பட்டுவந்துள்ளது என்பதை எவரும், எந்த ஆட்சியாளரும் மறுக்கமுடியாது. அடிப்படையான தமிழ்மக்களின் உரிமைகளை பேணிக்காக்கும் வகையில் ஒவ்வொரு தனிமனிதனும் தமது உரிமைகளை பெறுகின்ற உரிமை உடையவர்கள். அதாவது காணி உரிமை கல்வி உரிமை, சுகாதாரவசதி உரிமை, என அடுக்கிக்கொண்டே போகலாம். மனித வாழ்வியலை பாதிக்கின்ற உரிமைகளை, பாதுகாக்கின்ற வகையிலே இவ்மனித உரிமை செயலகம் அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தமிழ்மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். பல அமைப்புக்களும் வெளிநாட்டு அமைப்புக்களும் மனித உரிமை தொடர்பாக செயற்படமுயற்சி எடுத்திருந்தாலும் அவை எதுவும் சாத்தியப்படவில்லை. அவை ஒட்டுமொத்தமான தமிழ்மக்களின் இன அழிப்பு என்ற பக்கத்தை பார்ப்பதாக எந்த அமைப்பும் செயற்படவில்லை. ஓரிருசம்பவங்களை சுட்டிக்காட்டி பணத்தை எடுக்கின்ற வகையில்தான் செயற்படுகின்றனவே தவிர தமிழ்மக்களின் பிரச்சினை களையோ அல்லது மனித உரிமை மீறல்களையோ வெளிக்கொணரவில்லை. அந்த வகையில் தமிழர்தாயகத்தில் ஒரு மனித உரிமைச் செயலகம் அமைக்கப்படவேண்டும் என்ற கோட்பாட்டுக்கு அமைவாக இச் செயலகம் அமைக்கப்பட்டுள்ளது.

**நேர்காணல்**
**சு.பிரபா**

இச் செயலகம் ஒட்டு மொத்தமாக தமிழர் தாயகப் பகுதி மக்களுடைய சகல பாதுகாப்பிற்குமாக நிறுவப்பட்டுள்ளது. வெளிநாட்டில் இருக்கின்ற சிலர் எங்களுக்கு ஆலோசகர்களாக இருந்து வருகின்றனர். அத்தோடு வெளிநாட்டவர்களும் ஆலோசகர்களாக இருக்கின்றனர். (இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் தமிழர்கள் இருந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது)

சிறிலங்காவில் வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட தமிழர்தான் மனித உரிமை செயலகங்களின் தலைவராக இருக்கின்றார்.

கடந்த காலங்களில் சிங்கள பேரினவாத அரசு மேற்கொண்ட இன அழிப்புக்கள் எவ்வாறு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

அதாவது தமிழ்மக்கள் ஆரம்பகாலத்தில் இருந்தே அழிக்கப்பட்டு வந்துள்ளனர். பிரிட்டிஸ் ஆட்சிக் காலத்தில் கூட மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளன. அவைகூடப் பதியப்படவில்லை. அந்தக் காலத்திலோ அல்லது தொடர்ந்து வந்த காலங்களிலோ தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப் படவில்லை. சிறிலங்கா சுதந்திரம் அடையும்போது சிறிலங்கா ஆட்சியை கைப்பற்றிக்கொண்டதே தவிர தமிழ்மக்களுடைய சுயநிர்ணயம் தமிழ்மக்களிடம் இருந்து பறிக்கப் பட்டது. இதுவே ஒருமனித உரிமை மீறல்தான். வெறுமனே துப்பாக்கி சூடுகள், கைதுகள் மட்டும் மனிதஉரிமைமீறல்கள் அல்ல. 1948 இல் பிரிட்டிஷ்காரர் இலங்கை யில் இருந்து வெளியேறும் போது சிறிலங்காவிடம் ஆட்சியை, கையளித்துச் செல்கின்றனர். அன்றில் இருந்தே எமது உரிமைகள் மறுக்கப்பட்டு மீறப்பட்டுள்ளன.

1970 இல் பல்கலைக் கழகத்தில் தரப்படுத்தல் அறிமுகப்படுத்தப்பட்டதால் போராட்டம் ஆரம்பிக்கப் பட்டது. இதை ஒரு அடிப்படை மனித உரிமைமீறலாக எமது சமூகத்தில் சிலர் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். இவற்றையெல்லாம் நாங்கள் ஆவணப்படுத்த இருக்கின்றோம். அதற்கான வேலைத்திட்டங்களை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றோம். அத்தோடு நடமாடும் செயலகங்கள் மூலம் ஆவணப்படுத்தவேண்டிய விடயங்களை ஆவணப்படுத்துவதோடு மக்களின் மனித உரிமைகள் தொடர்பான தீர்வுகளையும் மேற்கொள்ளவுள்ளோம்.

ஆரம்பகாலம் தொட்டு தமிழர் தாயகப்பகுதிகளில் இனவாதிகளாலும் தேசவிரோதிகளாலும் மனித உரிமை மீறல்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தபோது; இதனை தடுத்து நிறுத்தியவர்கள் யாரென்று பார்த்தால் அது விடுதலைப்புலிகள் தான். அடிப்படை மனித உரிமை மீறல்கள் நடந்தது என்பதை வெளியுலகிற்குக் கொண்டு வந்தவர்கள் என்றால் விடுதலைப்புலிகள்தான். அடிப்படை மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்தி இன்று இவ்வளவு தூரம் இந்தப் போராட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள். இவர்களுடைய ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானதாகும்.

மனித உரிமைகள் தொடர்பாக கதைப்பதில் சிறுவர் உரிமை என்பது மிகமுக்கியமானது. ஒரு குழந்தை கருவில் உருவெடுக்கின்ற போதே அதனுடைய உரிமைகள் பேணப்படவேண்டும். இந்த முறையானது கிராமப் புறங்களில் இன்னமும் கைவிடப்படவில்லை என்றே கூறவேண்டும்.

1978இற்கு பின்னர் யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகியபகுதிகளில் என்றுமில்லாதவாறு சிறுவர்களையும் குழந்தைகளையும் சுட்டுக்கொன்றனர். இவற்றையெல்லாம் நாம் இன்றும் மறக்காதவர்களாகவே உள்ளோம். குமுதினிப்படகில் பயணித்தவர்களில் ஏதுமறியாத ஆறுமாத குழந்தையைத் தானும் விட்டுவைக்கவில்லை. ஏன் மடுத்தேவாலயம், நவாலி, சென்பீற்றஸ் தேவாலயம், மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை என எந்த இடத்திலும் சிறுவர்களை அல்லது குழந்தைகள் என்று எவரையும் விட்டுவைக்கவில்லை. ஆனால் இவற்றை எல்லாம் மூடிமறைக்கும் வகையில் எல்லோரும் விடுதலைப்புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிராகதூக்குகின்ற ஒரே ஒரு ஆயுதம் சிறுவர் உரிமை மீறல் என்ற ஒன்றை. ஆனால், அதில் எந்தவித உணமையும் இல்லை. இன்று எமது தாயகத்தை எடுத்துக் கொண்டோமானால் இன்று இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட சிறுவர்கள், அதுவும் 18 அகவைக்கு குறைந்தவர்கள் போரினால் பாதிக்கப்பட்டு அதாவது தாயை இழந்து, தந்தையை இழந்து, உறவுகளை இழந்து அவலப்பட்ட எமது சிறுவர்களை புலிகள் இன்று பல்வேறுபட்ட சிறுவர் இல்லங்களை உருவாக்கி இன்று அவர்கள் பெற்றோரிடம் இருந்து அனுபவிக்கமுடியாத சுதந்திரத்தை அனுபவித்துவருகின்றனர். அண்மைக் காலமாக இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் சரி, ஏனைய பிரதேசங்களிலும்சரி. எத்தனையோ சிறுவர்கள் தாமாகவந்து விடுதலைப்போராட்டத்தில் இணைய முன்வந்த போதும் அவர்களை மீளவும் பெற்றோரிடம் ஒப்படைத்து விடுகின்றனர். வயதுவேறுபாடு இன்றி சிறுவர்களையும் குழந்தை களையும், படுகொலை செய்த அரசு இன்று அவற்றை மூடிமறைப்பதற்காக புலிகள் சிறுவர் உரிமைகளை மீறுகிறார்கள் என்ற ஒரு போலிப் பிரசாரத்தை செய்து சிறுவர் உரிமைகளை மீறிவருகின்றது.

• யுத்தகாலங்களில் சிறுவர்களுக்கான, குழந்தைகளுக்கான பால்மா மருந்து என்பவற்றையும் தடை செய்து பொருளாதாரவளத்தையும் நசுக்கி வந்த அரசு இன்று சிறுவர் உரிமைபற்றி அக்கறை காட்டுவது ஒரு போலி வேடமாகும். ●







# புதன் கிரகத்தை நோக்கிய மெஸெஞ்சரின் பயணம்

செவ்வாய் காலையில், நாஸா நிறுவனம் புதன் கிரக ஆய்வுக்கான தனது முதலாவது பணியைத் தொடக்கி வைத்தது.

சூரியனுக்கு மிக அண்மையாக இருக்கின்ற இந்த சிறிய கிரகத்தை சூழ்ந்திருக்கும் மர்மங்களில் அநேகமானவற்றை இப்பணி வெளிப்படுத்திவிடும் என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.

போயிஸ்கொம்பனி டெல்ரா-02 உந்துகணை ஒன்றில் காவிச்செல்லப்படும் இந்த மெஸெஞ்ஞர் (MEcury Surface, Space Environment Geochemistry and Ranging புதனின் மேற்பரப்பு, விண்வெளி சூழல் தரையமைப்புசார் இரசாயனம் மற்றும் தூரக்கணிப்பு MESSENGER) விண்கலம், 4வி மில்லியன் டொலர் செலவிலான பணியின் முதற்கட்ட ஆரம்பத்தின் போது 0616GMTக்கு ஏவப்பட்டபோது புளோறிடாவிலுள்ள



கேப் கனவெறால் வான்படை நிலையத்துக்கு மேலாக உள்ள வானில் சீறிச்சென்றது. விஞ்ஞானிகள் பதில் காணமுயலும் கேள்விகளுக்குள், இப்போது பூமியினுடைய சந்திரனைவிட சிறிது பெரிதாகக்காணப்படும் புதன்கிரகம் ஒரு சமயத்தில் பூமியை ஒத்த அளவைக் கொண்டிருந்தது, பிரளயத்தை (CATACLYSMIC) ஒத்த பெரு மோதல் ஒன்றின் காரணமாக அல்லது சூரிய மண்டல காற்றுகளினால் (SOLAR WINDS)



புளோறிடாவின் கேப் கனவெறாலில் அமைந்திருக்கும் 17B ஏவுதளத்தில் இருந்து 03. 08. 2004ஆம் திகதி மெஸெஞ்ஞர் விண்கலத்தைக் கொண்ட ஒரு டெல்ரா –02 உந்து கணை ஏவப்படுகிறது.

மெதுவான தேய்மானத்துக்கு உட்பட்டு கற்பார் பாஸ்கான தனது வெளிப்புறத்தை இழந்திருக்குமா? என்பதும் அடங்குகிறது.

மெஸெஞ்ஞர் விண்கலம் ஏழுவருடங்கள் பயணம் செய்து புதன்கிரகத்தை அணுகும். சூரியக் குடும்பத்தினூடாக மேற்கொள்ளும் இப்பயணத்தின்போது சூரியனை 15முறை வலம்வரும். பூமிக்கு அண்மையாக ஒருதரமும் வெள்ளிக்கிரகத்துக்கு (VENUS) அண்மையாக இரண்டு தரமும் புதனுக்கு அண்மையாக மூன்றுதரமும் பயணம் செய்யும்.




# மீண்டும் உலகை அச்சுறுத்தும் காசநோய்

இவ்வுலகில் தொற்று நோய்கள் அதிக மரணத்தை ஏற்படுத்துவதை நாம் அறிவோம். இந்நோயைப் பரவாமல் தடுத்தலும் பூரண சிகிச்சையளித்தலும் ஒரே நேரத்தில் செய்யப்படும்போதுதான் கட்டுப்பாட்டில் வைத்திருக்கமுடியும்.

அண்மைக்காலங்களில் உலகில் உயிர்களை அதிகம் காவு கொள்ளும் தொற்று நோய்களாக மலேரியாவும், எயிட்ஸ் நோயுமே இருந்தன. ஆனால் கடந்த வருடம் அதிக உயிர்களைக் காவுகொண்ட நோயாக காசநோய் முதலாமிடத்தைப் பிடித்துள்ளது.

ஐம்பது வருடங்களுக்கு முன்னர் காசநோய் உலகை மிக மோசமாக உலுக்கியதை எம்மில் சிலர் தரிசித்திருப்பார்கள். மருந்துகளின் கண்டுபிடிப்பும், தடுப்பூசி நடைமுறைப்படுத்தப்பட்டதும், இதர வருமுன் காப்பு நடவடிக்கைகளினாலும் காசநோயை ஓரளவுக்குக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதில் வெற்றி காணமுடிந்தது.

ஆனால் மீண்டும் காசநோய் தீவிரமாகப் பரவ ஆரம்பித்தது. எவ்வாறு என நீங்கள் யோசிக்கலாம். எயிட்ஸ் என்ற H.I.V தொற்றினால் மனித உடலிலுள்ள நோய் எதிர்புச் சக்திகள் அழிக்கப்படுவதை நீங்கள் அறிவீர்கள். காசநோய் எயிட்ஸ் நோயாளிகளை இலகுவில் ஆரம்பக்கட்டத்திலேயே தொற்றி விடுவதாலும், வேகமாகப்பரவுவதாலும், இந்நோய் விரைவில் இவர்களில் அரும்புவதாலும் காசநோயின் தாக்கம் வேகமாகப் பரவி வருகின்றது.

தற்போது இலங்கையிலே ஆறாயிரம் பேர் காசநோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என இனம் காணப்பட்ட போதிலும், இன்னும் அதிகமானோர் இனங்காணப்படாமலும் இருக்கிறார்கள். அனுராதபுர வைத்தியசாலையில் காரணம் தெரியாத மரணங்களை அறிய 'போஸ்மோட்டம்' செய்தபோது பலரது மரணத்திற்கான காரணம் காசநோயாக இருந்தது இனம் காணப்பட்டுள்ளமை இதற்குச் சான்று பகர்கின்றது.

காசநோய் ஒரு நீடித்த தொற்று நோய். இது எதனால் ஏற்படுகிறது?

இந்நோயானது காற்றினால் சுவாசத்தினூடாகப்பரவக்கூடியது. இந்நோயை மைக்கோபக்ரீரியம் என்ற பக்ரீரியாவகை நுண்கிருமியே உருவாக்குகிறது. இதில் ரியூப குளோசிஸ், போவைன், ஆபிரிக்கானம் என்ற வகைகள் இனம் காணப்பட்ட போதிலும் பொதுவாக பலரில் இந்த நோயை ஏற்படுத்துவது mycobacterium tuberculosis என்ற வகைக்கிருமியேயாகும்.

இந்த நோய் பொதுவாகச் சுவாசப்பைகளைத் தாக்குகின்ற போதிலும், உடலின் எந்த ஒரு உறுப்பும் இதனால் பாதிக்கப்படலாம்.



காசநோயின் அறிகுறிகளாவன.

(1)நீடித்த இருமல்-மூன்று வாரங்களுக்குமேல் சாதாரண தொற்றுக்கான சிகிச்சையளித்தும் மாறாது.
(2)சளியுடன் இரத்தக் கறள் வருதல்.
(3)நெஞ்சு நோவு.
(4)சுவாசிப்பதில் சிரமம்.
(5)இரவுக் காய்ச்சலும் வியர்வையும்.
(6)எடை குறைதல்.
(7)அதிக களைப்பு.

இவ்வாறான அறிகுறிகள் தென்பட்டால் உடனும் வைத்திய ஆலோசனையை நாடவேண்டும். சளியைச் சோதித்து கிருமியை இனம் காணுவதன்மூலம் இந்நோயை உறுதிப்படுத்தலாம் X கதிர் படப்பிடிப்பின் மூலம் பாதிக்கப்பட்ட சுவாசப்பை தாக்கத்தின் அளவை இனம்காணமுடியும். smears for afb by microscopy என்று சளிப்பரிசோதனையை அழைப்பர்.

எனினும் சில நோயாளர்களில் இப்பரிசோதனையில் கிருமிகளை இனம் காண முடியாமல் போய்விடுவதுமுண்டு. நோய் அறிகுறிகள் நீடித்தால் இவர்களில் bacteriological culture method- அதாவது கிருமியை ஆய்வு கூடத்தில் சளியிலிருந்து வளர்த்து இனம் காணல் முறையாகும்.

காசநோய் சிகிச்சை நீண்ட காலத்தையும், பல்வகை நுண்ணுயிர்க்கொல்லி மருந்துகளையும் உள்ளடக்கியதாகும். குறைந்த பட்சம் ஆறுமாதங்களுக்குச் சிகிச்சையளிக்கவேண்டும. இதில் முதல் இரண்டு மாதம் கூடிய வகை மருந்துகள் பூரண கண்காணிப்பில் வழங்கப்பட வேண்டும். இத்தீவிர சிகிச்சைக்குப் பின்னர் நான்கு மாதங்கள் இருவகை மருந்துகள் தினமும் பாவிக்கவேண்டும்.

முதல் இரு மாத மருந்துகள்.

(1)ISON IAZID (ஐசொனைசிட்)
(2)RIFAMPICIN. (றிபான்பசீன்)
(3)PYRAZINAMIDE (பைரசினைமட்)
(4)ETHAMBUTUL (இதம் பியூறிரோல்)

குழந்தைகளில் ETAMB - UTOL இற்குப் பதிலாக STEPTOMYCIN (ஸ்ஹறப்ரோமைசின்) ஊசி மருந்து பாவிக்கப்படுகிறது.

இரண்டாம் கட்ட நாலு மாதங்களிற்கான மருந்துகள்.

(1)RIFAMPICIN
(2)ISONIAZID

ஆறுமாத சிகிச்சையின் பின் நோய் மாறாதுவிட்டால் சிகிச்சைக் காலத்தை அதிகரிக்கவேண்டும்.

பூரண சிகிச்சை அளிப்பதன் மூலம் நோயைக் குணமாக்கவும், மரணத்தைத் தவிர்க்கவும் முடிகிறது. மேலும் நோய் பரவுதலையும், நோய் மீள வருவதையும், மருந்து செயலிழப்பதையும், சிகிச்சை பூரணமாகச் செய்யப்படும் போது எட்ட முடிகிறது.

DOTS முறை என அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நேரடிக் கண்காணிப்புச் சிகிச்சை முறை மூலம் இவ் இலக்குகளை எட்டமுடியும்.

நோய்த்தடுப்பு முறைகளில் நோயாளியைத் தனிமைப்படுத்தி பராமரித்தல், பூரண சிகிச்சை, தடுப்பு ஊசி என்பன செயற்படுத்தப்படுகிறது. நோயுற்ற ஒருவரின் குடும்ப உறுப்பினர்களுக்கும், நெருங்கிப்பழகும் அயலவர்களுக்கும் தடுப்பூசி போடுதல் அவசியமாகும்.

இந்நோய்க்கான தடுப்பு மருந்தை B.C.G என்று அழைக்கிறோம். குழந்தை பிறந்து 24மணி நேரத்தில் இவ்வூசி போடப்படுகிறது. இதுவே பிறக்கும் குழந்தைக்கான முதலாவது தடுப்பு மருந்தாகும். இதன்மூலம் குழந்தைக்கு ஏற்படக்கூடிய மூளைக் காசநோய் தவிர்க்கப்படுகிறது. மேலும் நோய் ஏற்படும் வாய்ப்பையும் மிகவும் குறைக்கிறது.

மனித உயிரையும், உடலையும் பாதித்து, உடலுழைப்பையும் நீண்டகாலம் கட்டிப்போடும் கொடிய காசநோயிலிருந்து விடுபட கண்காணிப்புடன் செயற்படுதல் அவசியமாகும்.

Dr.ச.முருகானந்தன்



## மண்ணின் மைந்தர்களின் கதை

மச்சான் டேய்... இராகவன் அண்ணையின் கதையை கேட்டாயோ! அது 2 ஆம் லெப்ரினன்ட் இளங்கோ.

ஓமோம் மச்சான்... கதை நல்லாத்தான் இருக்குது....

ஆனால்...

என்ன ஆனால்...!

போகிற போக்கைப்பார்த்தா! நீண்டநாள் இழுபடும்போல கிடக்குது.... என்றாலும் பரவாயில்லை. எப்படியென்றாலும் எதிரியை சந்திக்கத்தானே வேண்டும். (இது 2ஆம் லெப் புதல்வன்)

ஏன் மச்சான்.... யோசிப்பானேன்... இப்பதானே ஆனையிறவு பரந்தன் சண்டையை முடிச்சிட்டு வந்திருக்கிறம்.... உடம்பைப் பார்த்னீயா நல்லா முறுக்கேறியிருக்கு.... என்கிறான், 2ஆம் லெப் ஆழியன்.

இப்படியாக அவர்களின் பேச்சு தொடர இடையே குறுக்கிடுகிறார், கொம்பனி அதிகாரியான மேஜர் ராஜீப்.

தம்பிமார்... உடம்பு முறுக்கேறினது இருக்கட்டும் இன்றைக்கோ, நாளைக்கோ சண்டை தொடங்கப் போகுது... வேகமா வேலையைச் செய்யுங்கோ...., ஆமி நிறையப்பேர் தாண்டிக்குளத்தில வந்து இறங்கி நிற்கிறானாம். வேகப்படுத்துங்கோ.... வேகப்படுத்துங்கோ.... எனக்கூறி தானும் வேகமுடன் நடக்கிறார் அடுத்துள்ள காவலரணை நோக்கி....

பொறுப்பாளர் சென்றதும் அந்தக் கடினமான தரையில் தங்களது காவலரணை அமைக்கின்றபணியில், கோடைக்கால வெயிலுடன் போட்டிபோட்டுக்கொண்டு செயற்படுகிறார்கள். இவர்களைப் போல் ஏனைய போராளிகளும் புளியங்குளத்தை பாதுகாக்கவெனவும், எதிரிக்கு நல்லதொரு பாடம்புகட்டவெனவும் ஓயாது காவலரண் அமைக்கின்றவேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

புளியங்குளம் சண்டைக்கு முன்பும், பின்பும் அங்குள்ள அனைவரும் பட்டதுன்பங்கள், வேதனைகளை எழுதிவிடமுடியாது. பசி,பட்டினி,தாகம் இவற்றையும் கடந்து இரவு பகலென ஓய்வில்லாதவேலை, நித்திரையின்மை, குளிர், நுளம்புக்கடி, இப்படி எத்தினை எத்தினையோ துன்பங்களை அனுபவித்தே எல்லோரும் புளியங்குளத்தில் ஓய்வின்றி இயங்கிக்கொண்டிருந்தனர்.

புளியங்குளத்தில் எதிரியவனுக்கு சுடுகாடமைத்து அங்கே புரட்சி எழுதிட புலிகள் சேனை தயாராகிவிட்டது. புளியங்குளம் புரட்சிகுளமாகிட எதிரியே சம்மதித்துவிட்டதற்கு அறிகுறியாய் 13-05-1997



# எதிரி எங்களைத் தாக்க முன் நாங்கள் தாக்க வேணும்...

அன்று காலை 6.30 மணிக்கு எதிரியின் ஆட்டிலறி ஏவுதளத்திலிருந்து வெளிக்கிட்டுவந்த எறிகணை ஒன்று, பழையவாடி குளத்துவெட்டையில் வெடித்து தனது சிதறுத்துண்டுகளை வீசி எறிந்தது. பாவம் எதிரி முதலிலேயே வீணாக ஒரு எறிகணையை சுட்டுத்தீர்த்தான். அப்போதே எதிரி எமை வெல்லமுடியாது என்பதில் திறன்பெற்ற மன நிலையுடன் எல்லோரும் புளியங்குளத்தை காக்கச் சென்றுவிட்டோம்.

ஜெயசிக்குறு என எதிரியும், ஜெயசிக்குறு எதிர்ச்சமர் என நாமும் களத்தில் குதித்துவிட்டோம்....என்னதான் விலைகொடுத்தும் புளியங்குளத்தை காப்பது என்று எல்லோரும் சபதம் எடுத்துவிட்டோம்... தொடர்ச்சியாக சண்டை நடந்து கொண்டே இருக்கிறது. 06.06.1997 அன்று காலை ஓமந்தைப்பக்கமாக கடுமையான வேட்டோசைகளுடன் சண்டை நடந்துகொண்டேஇருக்கிறது. எதிரியின் எறிகணை ஏவுதளங்கள் எறிகணைகளை இடைவிடாது புளியங்குளத்தை நோக்கி ஏவிக்கொண்டே இருக்கிறது. எறிகணைகள் வெடிப்புச்சத்தங்களுக்குள்ளே ஏதோஒரு சத்தத்தை 2ஆம் லெப் புதல்வன் செவிமடுத்துவிட்டான். வேகமாக ஓடிச் சென்று தனது உந்துகணை செலுத்தியை எடுக்கிறான். ஏற்கனவே அதில் கவசஎதிர்ப்பு உந்துகணை ஒன்று பொருத்தப்பட்டே இருக்கிறது. தனது காவலரண் வாசலில் நிலை எடுத்தான். பக்கம், பக்கமாக இருபுறமாகவும் இருந்த காவலரணை நோக்கி...

மச்சான் கவனம்... கிபிரடா... என்று சொல்லிமுடிக்க முன்பதாகவே... புளியங்குளத்திலுள்ள எமது காவலரணுக்கு மேலே எதிரியின் கிபிர் விமானங்கள் இரண்டு தங்களது கழுகுப்பார்வையை பார்க்கத்தொடங்கியது.

க. மிரேசு

புளியங்குளமெங்கிலும் எதிரிகளின் பேரிரைச்சல்காதை கிழிக்க, எமக்கு மேலாக தாழப்பறந்து குத்தென அந்த விமானங்கள் வந்து கொண்டிருந்தது.

இப்போது புதல்வன் தனது நிலையை மேலும் ஒருமுறை உறுதிப்படுத்திவிட்டான். எதிரியின் மனித இரைதின்னும் கொடிய விமானம் மேலும் கிட்டவாக வந்துகொண்டிருக்க, புதல்வனின் உந்துகணைச்செலுத்தி உயிர் பெறுகிறது.

டப்பென்ற பெரிய சத்தத்துடன் பின்னுந்தலை நெருப்பாய் கக்கி, சீறிக்கொண்டு சென்று வெடிக்கிறது. கிட்டத்தட்ட விமானத்திற்கு அருகிலேயே வெடித்ததனால். அந்த இயந்திரக்கழுகின் விமானி சுதாகரித்துக்கொண்டு திசையை மாற்றி மேலெழும்பிவிட்டான்.

டேய் மச்சான்.... திரும்பவும் வருவான்.... ஆயத்தமாய் இரடா.... என்று கூச்சலிடுவதற்கு முன்பே புதல்வன், மேலும் ஒரு உந்துகணையை தயார்ப்படுத்தி நிலையெடுத்துவிட்டான். எதிரியின் விமானம், நேரே வருவதுபோல் பாசாங்கு செய்துவிட்டு. தூரத்தேகுத்தென வந்து தனது குண்டுகள் 02 என்ற வீதத்தில் இரண்டுவிமானமும் 04 கழற்றிவிட அது பாரியசத்தத்துடன் வெடிக்கிறது.

விமானம் குண்டுகளை கழற்றிவிட்டு மேலெழும்பும்போது பல்லாயிரம் கேட்சுகளுடன் சத்தம், வானையும், காதையும் பிளக்கிறது. மீண்டும் மேலெழுந்துவிட்டான், விமானத்தின் சத்தம் குறைந்து விட்டது. எதிரியின் விமானங்கள் போய்விட்டனவோ என்று நாம் நினைத்தபோது, எங்களின் உந்துகணையாலனான 2ஆம் லெப் புதல்வன்மட்டும் தனது நிலையையும், தனது உந்துகணை செலுத்தியின் இறுக்கமான பிடிப்பையும் விட்டு விடாமல். வானத்தையே விரைத்தபடி பார்த்துக்கொண்டிருந்தான். நிச்சயம் அந்த விமானங்கள் வரும் என்பதில் அவனுக்கு நம்பிக்கை இருந்தது.

விமானத்தின் சத்தம் கேட்காது மறைந்துவிட்டபோதும் மீண்டும் துளித்துளியாய் அதிகரிக்கச்செய்தது. இப்போது முற்றிலுமாக எதிரியின் விமானம் வருவது உறுதியாகி விட்டது. ஆனால், முன்புவந்தபக்கம் அல்லாமல் கடல்பக்கமாக வந்துவிட்ட விமானத்தின் பறப்பையே புதல்வன் கவனித்துக்கொண்டிருக்கிறான். ஒரு விமானம் எமது முகாமை குறிவைத்து தாழப் பறந்துவர, புதல்வன் தனது அடுத்த உந்துகணையை அடிக்க இப்போதும் எமக்குள் அல்லாது இரண்டு விமானங்களும் வேறு எங்கேயோ மாறி, மாறி இரண்டு தடவையும் தாக்குதலை நடத்திவிட்டு சென்றுவிட்டான். அதன்பின்தான் அவனது உந்துகணைச்செலுத்தி அவனது கையை விட்டகன்றது. தனது உந்துகணையை கழற்றிவைத்த 2ஆம் லெப் புதல்வன் தனது உதவியாளனிடம் சுத்தம் செய்யக் கொடுத்துவிட்டு, தனது பாதுகாப்பரணை பலப்படுத்தும் பணியில் ஈடுபட்டுவிட்டான். புதல்வன் எப்போதுமே அமைதியான சுபாவம் கொண்டவன். அவனது நடை, கதை, பாசத்துடன் பழகும் உறவுமுறை எல்லா போராளிகளையும் இலகுவில் கவர்ந்துவிடும். எல்லோரிடமும் அன்பாக பழகும் சுபாவத்தை இயல்பாகவே கொண்டவன். எப்படியான கடுமையான பயிற்சி என்றாலும், பணி என்றாலும், சண்டை என்றாலும் அயர்ந்துவிடாது தனது உழைப்பினாலும், செயலினாலும் அவைகளை எதிர்கொண்டு வெற்றியடைந்துவிடுவான்.


தான் ஏற்றுக்கொண்ட எந்தப்பணி என்றாலும் அதை திறம்பட செய்து முடிக்கும் ஆர்வம் அவனிடம் இருக்கவே செய்தது. அவன் எதிர்கொண்ட எத்தினையோ, சண்டைக்களத்திலும் எதிரியுடன் திறம்பட சண்டைசெய்து தனக்கென சாதனைகளை செய்திருப்பான், சாதாரண துப்பாக்கிகளிலும், இயந்திர துப்பாக்கியிலும் தனக்கு விருப்பமான உந்துகணை செலுத்தியினாலும் சிறப்பாக குறிபார்த்துச்சுடும் திறமையைக் கொண்டவன். எப்போதுமே ஏதோ ஒரு திறில் நிறைந்த செயற்பாட்டை தன்னகத்தே கொண்டவன். எனவே தான் கிபிர் விமானத்திற்கு இரண்டு உந்துகணைகளை அடித்து அந்த விமானியை சில நிமிடம் எனினும் ஏமாற்றிவிட்டான்.

எப்பவுமே நாங்கள் எதிரி சுடுவதற்கு முன் அவனை சுட்டுவிடவேண்டும் என்று தனது தோழர்கள் அனைவரிடமும் சொல்லிக் கொண்டே இருப்பான். எங்களின்ர நாட்டில வந்து எங்களைச் சுடுவதா ஒரு எதிரியையும் சும்மாவிடக்கூடாது என்று அடிக்கடி சொல்லுவான். இயல்பாகவே அவனது பேச்சிலும், செயலிலும், விடுதலையின் உணர்வு மிளிர்ந்து கொண்டேயிருக்கும். சிங்களவனாலதானே எமக்கு இவ்வளவு துன்பம்... என்று கூறிவிட்டு சும்மா இருக்கமாட்டான். இப்ப எனக்கு முன்னுக்கு 10ஆமி வரனும் சுட்டுத்தள்ளுவன் என்றும் வரட்டும் என்ன செய்யுறன்பார் என்று சொல்லிக்கொண்டே ஏதோசெய்து கொண்டேயிருப்பான். சண்டை தொடங்கும்மட்டும் அமைதியாக ஒன்றும் தெரியாதவன் போல் இருக்கும் அவன் சண்டைதொடங்கிவிட்டால், ஏதோ ஒரு புதுவித உணர்வுகளால் உந்தப்பட்டு, சுட்டுக் கொண்டே இருப்பான், அது மட்டுமல்ல எப்படி எப்படி எல்லாம் எதிரியை தர்க்கலாமோ அப்படி அப்படியெல்லாம் தாக்கிக்கொண்டிருப்பதை பார்த்துக்கொண்டே இருக்கச்சொல்லும் அளவிற்கு வித்தியாசமானதொரு சண்டைக்காரன்.

2ஆம் லெப் புதல்வனை நினைக்கும் போதெல்லாம் புளியங்குள முகாமை, புலிகள் தக்கவைக்க எடுத்த செயல்வடிவங்கள் எல்லாம் கண்முன்னே திரையிடுகின்றது. புளியங்குளம் புரட்சிக்குளமாக மாறியதற்கு இவன் போன்ற எத்தினையோ புர்ட்சிக்குள புலிவீரர்களின் தியாகங்கள் விரிந்துகிடக்கின்றன.



(20ஆம் பக்கம் பார்க்க...)




# இது தொடர்கதையா...?



சாந்திரமேஷ்

இடுப்பு வலியில் உயிர் போய்விடும் போலிருந்தது. அங்காலை இஞ்சாலை திரும்பவேண்டாம் திருமதி வசந்த். அவசரம் என்றால் அழைக்குமாறும் கூறி அவசர அழைப்பிற்குரிய பட்டனையும் கையில் தந்துவிட்டுப் போனாள் மருத்துவத்தாதி. அம்மாவின் நினைவுதான் வந்தது. இப்படித்தானே என்னையும் பெறுவதற்கு என் அம்மா துடித்திருப்பாள். அழுகை அழுகையாக வந்தது. 5 நிமிடத்துக்கு ஒரு தடவை வலி கூடுவதும் குறைவதுமாக இருந்தது. கதவைத் தட்டிக் கொண்டு வசந்த் வந்தான். பின்னே மருத்துவத்தாதியும் வந்து பிள்ளையின் துடிப்பைக் கீறிக் கொண்டிருந்த இயந்திரத்தை நிறுத்திவிட்டு கிறுக்கல்களாய் நீண்டிருந்த கடதாசியை எடுத்து ஏதோ எழுதிவிட்டு வயிற்றைச் சுற்றிக்கட்டியிருந்த பட்டியைக் கழற்றிவிட்டாள்.

இன்னும் எவ்வளவு நேரம் செல்லும் குழந்தை பிறக்க....? தாதியைக்கேட்டான் வசந்த்.3-4 மணித்தியாலம் செல்லும். சொல்லி விட்டுப்போனாள் தாதி. வலியில் துடித்துக்கொண்டிருந்தேன். ஒரு அடி கூட நகரமுடியவில்லை. அம்மா... என்ரையம்மா... அம்மா.... வலிதாங்க முடியாமல் அழுதேன்.

என்ன நீர்மட்டுமே இஞ்சையிருக்கிறீர்...? உப்பிடிக் கத்தி நீர்...! எனச் சினந்தான். என்னாலை தாங்கேலாமல் கிடக்கு....

சரியா நோகுது...கதறிக் கதறி அழுதேன். உப்பிடியான நீர் ஏன் பிள்ளைக்கு ஆசைப்பட்டனீர்...? ஏதேதோ எல்லாம் கதைத்தான். எட்டி உதைக்கவேணும் போலிருந்தது. "3-4"மணித்தியாலம் செல்லுமாம் நான் இஞ்சை நிண்டு என்னேயிறது...? போட்டுப்பிறகு வாறேன். பேசாமல்ப் படும் நித்திரையானால் வலி தெரியாது.

என் பதிலுக்குக் காத்திராமல் கதவைச் சாத்திக்கொண்டு போனான். ஏதோ பிரசவவலியை அனுபவித்தவன் போல் சொல்லி விட்டுப் போனான். நித்திரையானால் வலி தெரியாதாம். என்ன பிறப்பு இது...? காய்ச்சல் வந்தால் ஒரு குளிசையைப் போட்டிட்டுப் படுக்கிறதெண்டு நினைச்சோ அப்பிடிச்சொல்லிப்போட்டுப் போறார்...? அம்மாவைத்தான் திட்டித்தீர்த்தேன். வெளிநாடு வேண்டாம் வேண்டாம் எண்டு எத்தினைதரம் கத்தியிருப்பேன். கேட்டாவே எல்லாம் என்ரை நல்லதுக்குத்தானெண்டு சொன்னவா...அம்மா தேடித்தந்த வசந்த் எனக்கு உதவாதவனாக டிஸ்கோ, நைட்கிளப், குடிகார நண்பர்கள் எனத்திரியும் ஒரு ஊதாரி.உலகத்து விரதமெல்லாம் இருந்து உள்ள கோவிலெல்லாம் கும்பிட்ட எனக்கேன் இப்பிடியொரு நரக வாழ்க்கையைத் தந்தாய் கடவுளே....! நான் என்ன பாவம் செய்து இந்த நாட்டுக்கை தனிச்சுப் போயிருக்கிறேன். அழுத என் வாயிலிருந்து வெளிவந்த வார்த்தைகள்.

நேற்று நைட்கிளப்வெளிக்கிட்டபோது... என்னாலை ஏலாமல் கிடக்கு வசந்த். திகதியும் கிட்ட வந்திட்டுது. இனியாச்சும் உந்த நாசமாப்போன கூட்டத்தையும் குறுக்காலைபோன குடியையும் விட்டிட்டு வீட்டிலை இருங்கோவன் வசந்த்....? ஐயோவெண்டாக்கூட ஓடிவர ஒரு மனிசரில்லை. இஞ்சை உங்களை விட்டா எனக்கொரு நாதியில்லை என்ற எனக்கு...அவனிடமிருந்து வந்த பதில் நேற்று வந்த உனக்காக என்ரை சினேகிதங்களை விடச் சொல்லுறியோ...? அதென்னடி எங்கடை பெண்டுகள்தான் புதினமான பிள்ளைப்பெறுகிறியள்... அதுக்கை நோ... இதுக்கை நோ... குனிய நோ... நிமிரநோ... என்ன நடிப்பு நடிக்கிறயளடி...? வெள்ளைக்காறியளும் வைத்திலை பிள்ளையை வைச்சுக்கொண்டு கம்பு மாதிரித் திரியிறாளவை. சிகரெட்டும் ஊதித்தள்ளிக் கொண்டு என்ன மாதிரி இருக்கிறாளவை. என்ரையம்மா 9பிள்ளையளைப் பெத்தவா தோட்டத்துக்கை நிண்டு ம்னிசி தண்ணி கட்டிப்போட்டுத் தான் தனியப்போய்ப் பிள்ளையளைப்பெத்தவா... என்ரையப்பரென்ன பக்கத்திலையே போய் இருந்தவர்...? இத்தனையையும் கதைத்து விட்டு நைட்கிளப் போய்த்தான் வந்தான்.

இவனுக்கெப்படி என் வேதனையைப் புரியவைப்பேன். கதவைத்தட்டிக்கொண்டு மருத்துவத்தாதி ஒரு கட்டிலைத் தள்ளிக் கொண்டு வந்தாள். பின்னே ஜேர்மனியப் பெண்ணொருத்தியும் அவள் கணவனும் வந்தார்கள். அந்தப் பெண் என்போல் பிரசவ வலியில் துடித்துக்கொண்டிருந்தாள். அவள் கணவன் அவள் கண்ணீரைத் துடைத்து விட்டுத்தன் தோளில் சாய்த்து அவளுக்கு ஆறுதல் சொன்னான். அவள் அவன் வார்த்தைகளை மீறி அழுதுகொண்டிருந்தாள்.

தாதியைக் கேட்டான். வலி குறையிறதுக்கு மருந்து கொடுக்கலாமே...? தாதி சிரித்து விட்டு மருத்துவரைக் கேட்டு விட்டு வருவதாகப் போனாள். எனக்குப் பக்கத்தில் இருக்க வேண்டிய என்னவனோ.... படும் நித்திரையானால் வலி தெரியாதாம் சொல்லிவிட்டுப் போய் விட்டான். கட்டிலில் இருக்க முடியவில்லை... படுக்க முடியவில்லை.... வலி வர வரக்கூடிக் கொண்டு வந்தது. கட்டிலைவிட்டிறங்கி வெளியில் நடந்து திரிந்தேன்.

இந்நாட்டு ஆண்கள் பலர் பிரசவ வலியில் துடித்துக்கொண்டிருக்கும் தங்கள் மனைவிமாரோடு நடந்து திரிந்தார்கள். நான் மட்டும் அநாதைபோல் இந்த அந்நிய முகங்களுக்கு நடுவில் அழுதபடி நடந்து திரிகிறேன். ஒரு இடத்தில் இருக்கவும் முடியவில்லை நடக்கவும் முடியவில்லை படுக்கவும் முடியவில்லை. திடீரெனக் கண்கள் இருண்டு கொண்டுவர உடலெல்லாம் வியர்த்து ஏதோ செய்தது. விறுவிறுவெனக் கட்டிலில் போய் இருந்து அவசர அழைப்பு மணியை அழுத்துகிறேன். மருத்துவத்தாதியொருத்தி ஓடிவந்தாள்.

என்ன செய்யுது...? கேட்டாள். தலைசுத்துது.. என்னைக் கட்டிலில் படுக்க வைத்துவிட்டு அவசர அழைப்பு மணியை அழுத்தி மருத்துவரை அழைத்தாள். ஒரு மருத்துவரும் மூன்று தாதிமாரும் வந்தார்கள். எனக்கு வலி அதிகமாகிறது. கட்டிலோடு தள்ளிக்கொண்டு பிரசவ அறைக்குக் கொண்டு போனார்கள். பிரசவ அறை எனது கூச்சலால் அதிர்ந்து கொண்டு இருந்தது. பக்கத்தில் நின்ற தாதி என் தலையைக் கோதி விட்டபடி கொஞ்சம் பொறு இன்னும் கொஞ்ச நேரத்திலை எல்லாம் சரியாகீடும் என்றாள். இன்னொருத்தி வசந்த்திற்குத் தொலைபேசி எடுத்தாள். பின் என்னிடம் வந்துகேட்டாள். உன்ரை வீட்டிலை வசந்த் இல்லை. வேறை எங்கேயும் நிக்கிறார் போலையிருக்கு. அவையளின்ரை இலக்கம் இருந்தால் தா கூப்பிடுறம். வசந்த்தின் குடிக்கோட்டையான ஒருவனின் வீட்டு இலக்கத்தைச் சொன்னேன். அத் தொலைபேசி இலக்கத்தை அழுத்தினாள் தாதி. மறு முனையில் யாரோ கதைத்தார்கள்.

உடனடியா வசந்தை வரச்சொல்லுங்கோ ...! இன்னும் கொஞ்ச நேரத்திலை குழந்தை பிறக்கப்போகிது. சொல்லி விட்டுத் தொடர்பைத் துண்டித்துவிட்டு என்னிடம் வந்தவள். கேட்டாள் என்ன உன்ரை வசந்த் கிரிக்கெட் விளையாடப் போட்டாராம். இந்த நேரம்தான் இதுக்குக் கிரிக்கெட் விளையாட்டுத் தேவை, என்ன ஜென்மமோ என்னிடமிருந்து கண்ணீரைத்தவிர வேறு எதுவும் அப்போதைக்கு பதிலாய் இல்லை.

முதுகைக்குடங்கப் படுக்கச் சொன்னார் மருத்துவர். குடங்கிப் படுத்தேன். முதுகில் ஒரு ஊசியைப் போட்டார். சற்றே நேரத்தில் இடுப்பின் கீழ் விறைப்பாக இருந்தது. என் வேதனையின் பாதி குறைய அந்த ஊசி உதவியது. பிரசவ அறைக்கதவு தட்டப்பட்டது. உள்ளே வரச்சொன்னார் மருத்துவர். வசந்த் என் அருகில் வந்து நின்றான். நன்றாகக் குடித்து விட்டு வந்திருந்தான். நிற்கவே இயக்கமில்லை. ஒரே சிகரெட் நாற்றமாக இருந்தது.


உம்மடை ஆறுதல் தேவையான நேரத்தில பக்கத்திலை நிக்க வேண்டிய நீர் எங்கே போனனீர்...? கொதித்தார் மருத்துவர். ஏன் பக்கத்திலை கட்டாயம் நிக்க வேணுமெண்டு உங்கடை நாட்டிலை சட்டம் ஏதாவது இருக்கோ....? மருத்துவரோடு சட்டம் பேசினான். மருத்துவர் என்னை அனுதாபத்தோடு பார்த்து விட்டுச் சொன்னார். சட்டம் பேசுற நேரமில்லை இது. வேதனைப் படேக்கை பக்கத்திலை ஒரு ஆறுதல் இருந்தால்த்தான் நோயாளி நிம்மதியா இருக்கலாம். எங்கடை ஊரிலை தாய் தனியத்தான் போய்ப்பிள்ளை பெத்துக் கொண்டு வாறது. இஞ்சை மாதிரி ஆம்பிளையளைப் பக்கத்திலை விடுகிறதில்லை. மீண்டும் மருத்துவரோடு தர்க்கித்ததுக் கொண்டு நின்றான். அதுதான் உங்கடை ஆம்பிளையளுக்கு பிரசவ வலியிலை துடிக்கிற தாயின்ரை வேதனை விளங்கிறேல்லை. என்றார் மருத்துவர். வலியில் அங்குமிங்கும் தலையைத் திருப்பிக் கத்திக் கொண்டிருந்தேன்.

இன்னும் கொஞ்ச நேரம்... இன்னும் கொஞ்ச நேரம்... எனக்குச் சொல்லிக் கொண்டிருந்தார் மருத்துவர். என் கண்கள் செருகிக் கொண்டு வந்தது. எழுப்புங்கோ பிள்ளேன்ரை துடிப்புக் குறைஞ்சு கொண்டு வருகுது. மருத்துவர் தாதிமாருக்குச் சொல்வது என் காதுகளுக்குக் கேட்கிறது. என்னால் முடியவில்லை. ஒரு தாதி என் கன்னங்களைத் தட்டி எழுப்பிக்கொண்டிருந்தாள். அடுத்து புதிதாக இரண்டு மருத்துவர்கள் நிற்பது தெரிகிறது. என்னால் முடியவில்லை... எங்கோ அதளபாதாளத்திற்குச் செல்வது போல்... வியர்த்து... கண்கள் இருண்டு... உடல் சோர்வாய்... பின்.... எதுவும் எனக்கு நினைவில் இல்லை.


கண்விழித்த போது என்னை அனுமதித்த அறையில் படுத்திருந்தேன். பக்கத்தில் கண்ணாடிப் பெட்டியில் மூடிய கண்களும்.... இறுகப்பொத்திய பிஞ்சுக் கைகளோடு என் குழந்தை... வசந்த பக்கத்தில் நின்று பிள்ளையைப் பாத்துக் கொண்டு நின்றான்.

நான் துடியாய்த் துடிக்கேக்கை பக்கத்திலை நிக்கேலாமல்ப் போச்சு... இப்ப எல்லாம் முடிஞ்சாப்பிறகு என்னத்துக்கு நிக்கிறாராக்கும் நினைத்துக் கொண்டு எழும்ப முயற்சித்தேன். அடிவயிறு எழும்ப முடியாது நோவாக இருந்தது. அடுத்த கட்டிலில் படுத்திருந்த பெண்ணோடு பேசிக் கொண்டு நின்ற மருத்துவத்தாதி என்னிடம் வந்து கைகளைக்குலுக்கி வாழ்த்துச் சொன்னாள். என்ன குழந்தை....? தாதியிடம் தான் கேட்டேன். பெண் குழந்தை சொல்லிவிட்டுக் குழந்தையை என் நெஞ்சில் வளத்திவிட்டாள். என் வலியெல்லாம் பஞ்சாய்ப்பறந்து போனது. எனக்காக இனி அழவும் சிரிக்கவும் என் பிள்ளை இருக்கிறாள. இமை கொட்டாமல் என் பிஞ்சுப் பூவைப் பார்த்துக்கொண்டிருந்தேன். இனி நான் போகலாமா...? தாதியைக்கேட்டான் வசந்த். ம்... என்றுவிட்டு ஏதாவது தேவையானால் அழைக்குமாறு சொல்லி விட்டுப் போனாள் தாதி. நான் போய்ப் பெடியளுக்குப் போத்தல் எடுத்துக் குடுத்திட்டு வாறன். பிள்ளை பிறந்த சந்தோசத்தைப் போத்தல் எடுத்துக்கொண்டாட வேணும். சொன்னான் வசந்த்.

பிள்ளை பெத்தது நான்... வேதனைப்பட்டது நான்... இவருக்குக்கொண்டாட்டம். நினைத்தபடி ஓமோம் கட்டாயம் போத்தல் எடுக்கவேணும்... கொண்டாட வேணும்.... ஏனெண்டா நீங்களும் பெடியளும்தானே சத்தியெடுத்துப் பசி கிடந்து.... பத்தியம் காத்துப் பிள்ளையைச் சுமந்து பெத்தனீங்கள்...! கொண்டாடத்தான் வேணும் கெதியிலை போங்கோ உயிர் தாற சினேகிதங்கள் உருகப்போகினம். இது வெளிநாடு பட்டிக்காடு உனக்கெங்க இதுகள் விளங்கும்...? இஞ்சை இப்பிடித்தான் வாழவேணும். வெளியிலை நாலு பேரோடை பழகியிருந்தால்த்தான் இதுகள் விளங்கும். உனக்குக் குசினியை விட்டால் வேறையென்ன உலகம் தெரியும். சொல்லியபடி கதவை அடித்துச் சாத்திக்கொண்டு போனான் வசந்த்.



# இளைய நாதம்




# எங்கள் பன்றி

பன்றிதாக்கி ஒருவர் பலி

பன்றிதாக்கி படுகாயம் - என்றெல்லாம் நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள் - நகர்ப்புறங்களில் நீங்கள் பார்க்கும் செந்நிறமான சேற்றுக்குள் புறளும் அப்பிராணியான இந்தப்பன்றி தாக்கி எப்பிடி ஒருவர் சாகலாம். காயப்படலாம் என்ற கேள்வியெல்லாம் உங்களுக்குவரும்.

இது வளர்ப்புப்பன்றி - சீமைப்பன்றி என்கிற இவை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை. நல்ல கொழுப்பும் - இறைச்சியும் அதிகம் பன்றிக்கு இருப்பதால் - வெளிநாடுகள் பன்றிகளை பிறப்புரிமை மாற்றம் செய்யப்பட்டு அது சாதுவான பிராணியாக மாற்றப்பட்டு இறைச்சிக்கு என வளர்க்கப்படுகின்றது. அதைத தான் நீங்கள் நகர்ப்புறங்களில் பார்ப்பது.

நான் இப்பொழுது சொல்ல வருவது நமது பூர்வீக பன்றியான காட்டுப்பன்றி பற்றி.

எங்களது காடுகளில் ஆழமற்ற காடுகள் அதாவது வரண்ட பகுதி - கட்டைமரங்கள் - பற்றைகள நிறைந்த காடுகளில் தான் எமது காட்டுப்பன்றிகள் வாழ்கின்றன.

எமது நகர்களில் காட்டு இறைச்சிக்கடைகளில் கருக்கிய நிலையில் இப்பன்றிகளை நாம் பார்க்கலாம். வேட்டைக்காரர்கள் மிதி வண்டிகளில் கட்டிச்செல்வதைப் பார்க்கலாம். நல்ல கறுத்ததாக இது இருக்கும். கூட்டம் கூட்டமாக இந்தப் பன்றிகள் எமது காடுகளில் திரியும். காட்டோரம் செய்கிற வயல்களுள் நுழைந்து நெல்லை உண்பது. கச்சானை உண்பது - கிழங்கு வகைகளை உண்பது. என்று அழிவுகளை அவை செய்கின்றன. இதனால் விவசாயிகளுக்கு பன்றிகளும் எதிரி.



சரி இந்தப்பன்றி எப்படி ஆட்களைத் தாக்கும்? பன்றிகளில் - ஆண் பன்றிகளுக்கு இருக்கும் பற்கள் - நீளமாக கூராகவளரும்.

விலங்குகளில் - கூர்ப்பற்களை பொதுவாக நீங்கள் பார்க்கலாம். யானையின் தந்தம் வளர்ந்த அதன் இருபற்கள்தான். அதுமாதிரி பன்றியிலும் இருபற்கள் தந்தம் மாதிரி நீளமாக வளரும். இது கூராக இருக்கும். இதனால் மண்ணை கிழ்ந்தே கிழங்குகளை பன்றி உண்ணும். ஆண் பன்றிகளுக்கே இந்த பல்லுத்தந்தம் இருக்கும். இதனால்தான் பன்றிகள் ஆட்களை தாக்குகிறது. மற்ற மிருகங்களை தாக்குகிறது. இதுக்கு சிறுத்தைமாதிரியான விலங்குகள் கூட கடும்பயம். தன் பற்களால் தாக்கி கிழிப்பதே இதன் தந்திரம்.

காட்டுப் பன்றிகளின் சராசரிஉயரம் 3அடி.

பன்றிக்கு மிக துல்லியமான நுகரும் திறமை இருக்கிறது. அதால மற்ற விலங்குகள் - மனிதர்களை அவ்களின் வாசத்தை தொலை தூரத்தில் வைத்தே உணர்ந்து தப்பித்துக் கொள்ளும் - வேட்டைக்காரர்கள் - விளைநிலங்களில் பன்றிகள் வருவதை அவதானித்து அவற்றின் பக்கம் காற்று வீசும் திசையில் நிற்காமல் எதிர்த்திசையில் நின்று தமது வாசம் அதற்கு படாதபடி துவக்கால் சுட்டு வேட்டையாடுவார்கள்.

பன்றி அதிக எண்ணிக்கையில் குட்டிபோடுவதால் அது குறைக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் விவசாயிகளே பாதிக்கப்படுவார்கள் - நமது காடுகளில் பற்றைகளின் மறைவிடமே பன்றிகளின் வாழிடம்.

# அகதித் துன்பம்

அகதித் தாத்தாஅகதிப்பாட்டி  
அதோ வருகிறார்!  
மிகவும் பாவம் கூட்டி வந்து  
வீட்டில் இருத்துவோம்!

வீடிருந்தும் வீடு போகாப்  
பாவம் இவர்களே!  
காடும் மேடும் கதியிழந்து  
கருகி அலைகிறார்!

இன்பம் என்ற ஒன்றை வாழ்வில்  
என்றோ இழந்தவர்!  
துன்பம் என்ற ஒன்றே தங்கள்  
தோற்றம் ஆனவர்!

குடிக்குங் கூழில் பாதிக் கூழைக்  
கொடுத்துக் காக்கலாம்!  
கிடைத்த திறைவன் சேவைஎன்று  
கிளர்ந்து பேணலாம்!

(அகதித் தாத்தா)

# கைவண்ணம்



க.கார்த்திகா,  
பாரதி இல்லம்,  
வள்ளிபுனம்.

# சொற்சிலம்பம் - 49

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| லை | ச | கா | ச | த் | வ | பெ |
| யி | க் | ப | கு | றை | கே | பூ |
| ளி | ன் | து | ர | த | ரு | ங் |
| ரை | ள | யா | மா | உ | டி | ல் |
| மு | ம | ர் | ம | ந் | தா | ண |
| து | ல | ரி | தா | ம் | தி | கி |
| க | வா | மு | ளி | சி | பி | கோ |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் -47 இன் விடைகள்

01. பாரதி.
02. கம்பன்.

01. கத்தரி.
02. தக்காளி.

## சொற்சிலம்பம் - 47 இன் பரிசுக்குரியவர்

சௌ.ஜானுஜா,  
புனித சவேரியார்பெ.தே. கல்லூரி,  
மன்னார்.

## சொற்சிலம்பம் - 47 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. த.டர்சிகா, உக்குளாங்குளம், வவுனியா.
02. யூ.நேயன், இரணைமடு, கிளிநொச்சி.
03. ச.தினேஸ்குமார், செட்டிகுளம், வவுனியா.
04. எ.றாகவி, கொக்குவில் மேற்கு, யாழ்ப்பாணம்.
05. அ.கீர்த்திகா, உடுவில், யாழ்ப்பாணம்.
06. சு.தமிழினி, ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு.
07. ந.அனுகரன், அக்கராயன், கிளிநொச்சி.
08. தி.சரண்யா, கே.கே.எஸ்.றோட் சுண்ணாகம்.

01. சரஸ்வதி வீற்றிருக்கும் மலர் எது?

01) ..............................

02. தமிழீழத்தின் தலைநகர் எது?

01) ..............................

பெயர் :- ..............................


முகவரி :-..............................

..............................

சொற்சிலம்பம் -49  
ஈழநாதம்,  
யாழ் சாலை,  
கிளிநொச்சி.

# எலியாரின் தொப்பி

பகுதி-03




(தொடரும்)

கவிதைகள்

## வேப்பங் குச்சி

கற்பனைகளின்
வியாபிப்பின் அடிக்கல்லாய்
ஒடுங்கிப்போய் நிற்கிறது
வேப்பம் குச்சி.
இன்றும் நேற்றும்
அதற்கு முந்தயநாளும்
காக்கப்பட்ட நம்பிக்கை
தூர்ந்து போகக்கூடாது
என்பதற்காய்
காதுத்துளை நிரவும்
குச்சி, - அது
அச்சம் நெருங்கவிடாத குறி,
வெட்கக் குருத்துக்களும்
வெந்துபோய் ஆறும் மடி.
நாளைய நாளுக்கான
பிரம்மைகளை தாங்கியபடி
தூரத்து ஒளி துரத்தும்
சின்ன விழிகளை
இன்னும் கட்டிப் புரள்கிறது.
இருள்...

ப.அருள்நேசன்

## அமைதி நதி

அமைதி நதியில்
நீர் அருந்தும் போதுதான்
பாடமுடியுமாம்.
உங்கள் ஏக்கங்களுக்காய்
உயர்ந்த ஒரு மேடை
உச்சியினின்று ஒரு பிரகடனம்
அமைதி நதி ஓடி வருகிறதாம்
ஓ மானுடமே!
ஓடிவரும் பெரும் நதிக்கு'
கரை கட்ட எழு!
கரைகட்டி முடித்து
'மண்சுமந்த மேனி'யராவோம்
தாகம்தீர்த்தபின்
நதிகரையதனில்
நித்தியமாய்
விடுதலை கீதமிசைப்போம்.


## படித்ததில் பிடித்தது

### மரங்களும் காடுகளும்

காற்றுச் சீராக்கிய அறைகளில்
திண்டு வைத்த கதிரைகளில்
இருக்கும் அவர்கள்
தனி மரங்களைக்
காடுகளாய்க் கண்டார்கள்.
தனிமரங்களை
காடுகளாய் வரையவே
இன்னமும் எண்ணுகிறார்கள்.
களப்பின் நீரலைகள்
வருடுகின்ற கரைகளில்
மரங்களின் உருவில்
காடுகள் காட்ட
பச்சைப் பேய்களும்
வெட்டி முறிகின்றன.

எனினும்
அந்தக் கரைகளினுடைய
திரிவு கோல்களோ
துருவனின் திசையில்
மர்மமான காடுகளின்
அறியப்படாத உள்ளகத்தே
இருப்பதை உணர
அவர்களால் முடியப்போவதில்லை.

வின்சென்ற் புளோறன்ஸ்



# இலக்கியப்பகிர்வு

## "அம்புலி"யின் "மீண்டும் துளிர்க்கும் வசந்தம்"

"அம்புலி" என்னும் கவிஞரின் கவிதைத் தொகுப்புத் தான் "மீண்டும் துளிர்க்கும் வசந்தம்" பெண்களுக்கே உரிய கோபாவேசமான கருத்துக்களுடன் களம் இறங்கிய அம்புலி ஒரு விடுதலைப் போராளியாகவும் இருப்பதால் அவர் கவிதைகள் எதிராளியை துளைத்தெடுக்கும் தீவிரம் கொண்டவையாக அமைகின்றன.

"கவிதை எழுதுவதற்கு கற்பனைவளம் மட்டும் போதாது. இதற்கு நிறைந்த அறிவு இருக்கவேண்டும். அந்த அறிவைக்காலத்தோடு ஒட்டி எடுத்துச் செல்கின்ற ஆற்றல் இருக்கவேண்டும். அதை உணர்வின் வரிகளால் வடிக்கும் கவிச் சிறப்பு இருக்கவேண்டும். இவற்றைத் தனது தேசவிடுதலைக்கும் தான் சார்ந்த மக்களது விமோசனத்திற்கும் பயன்படுத்துகின்ற உயர்ந்த குறிக்கோள் இருக்கவேண்டும்."

"இப்படியான உயர்ந்த குறிக்கோளுடன் தனது ஆற்றல்களையும் அறிவையும் ஒன்று கலந்து "சுதந்திரப் பறவைகள்" பத்திரிகையில் தான் எழுதிய கவிதைகளையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து "மீண்டும் துளிர்க்கும் வசந்தம்" என்னும் நூலாகப் போராளிக்கவிஞர் திருமதி சுகந்தி நடராசா (அம்புலி) வெளியிடுவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது" என்று தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் தனது ஆசியுரையில் குறிப்பிடுவது மதிப்புக்குரியது.



"எட்டும் வரை எட்டும் சக்தி
கைவரப்பெற்றவளின் கவிதைகளைத்
தொட்டுக் கொள்ளும் போது சுகம்
தெரிகிறது.
உயிரூறிக்கிடக்கும் வரிகளுக்
குள்ளே
அவளின் முகம் தெரிகிறது.
களமாடும் ''புலிமகளின்''
கைகளிலே
துப்பாக்கியைப்போல் பேனாவும்
போராடுகிறது.
சொல்வழித்தெளிவே சிறந்தது.
மனமே அனல் மூட்டும்
இரண்டுமே உதயலட்சுமியிடம் (அம்புலி)
இருப்பிலிருக்கிறது.
பிறகென்ன?
போர் மகள் புகுந்து விளையாடுகிறாள்"

என முன்னுரையில் புதுவை இரத்தினதுரை அவர்கள் குறிப்பிடுகின்றார்.

அம்புலி தமிழீழப்பெண்களின் பிரதிநிதியாக அதுவும் விடுதலை வேட்கையும், மண்பற்றும் கொண்ட தாய் மண்ணின் பெண்ணாக தன்னை வரித்துக்கொண்டு கவி பாடப்புறப்பட்ட காரணத்தால் அவர் வெளிப்படுத்தும் ஒவ்வொரு கவிவரிகளும் அதனைப் புலப்படுத்துகின்றன. அதனால் தான்.

"மெலிந்த கரங்களுக்குள் வலிமை
இந்தப்பூவுலகின் போர்களையெல்லாம்
புறந்தள்ளிவிட்ட போர்க்கயில் வல்லவர்களாய்
எல்லைகளில் தமிழ்ப்பெண்கள்.
ஆழக்கடலில் மூழும் சமர்
ஓயாத அலைகளென மூசும் பலம்
போரிட்டுப்பகை யெடுக்கும்
சண்டைகளின் முதுகெலும்பை முன்சென்று முறிக்கும்
வலிமை ஒரு மென்மையான புன்னகைக்குள்
புயல்காவிச் சென்று
இலக்குத்தகர்க்கும் மனோபலம்
இன்னும் எம் விடுதலைச்சேனையுடன்
நிமிர்ந்து நகர்கின்றோம்!"

என அம்புலியால் சொல்ல முடிகின்றது.

வானதி, பாரதி, கஸ்தூரி என நீளும் பெண் போராளிக்கவிஞர்களில் அம்புலி, மலைமகள், அலையிசை, பிரமிளா எனத் தொடர்கிறது.

"எழுதுங்களேன்
நான் எழுதாது செல்லும்
என் கவிதையை
எழுதுங்களேன்."

என அன்று வானதி சொன்னதை அர்த்தத்துடன் இப்போது அம்புலி போன்றவர்கள் சொல்ல முயன்றுள்ளார்கள்.

"எரிகின்ற ஈழத்து மண்ணிலிருந்து கிளம்பியுள்ள குரல்கள்தான் எத்தனை? அலை எழுப்பும் புதுக் கேள்விகளும்தான் எத்தனை? குறிப்பாக தமிழில் கவிதைத்துறையின் புதிய வீச்சினைத்தருவது ஈழக் கவிதைகளே என்பதை மறுக்க இயலாது. அதிலும் சிறப் பாகப்பெண்கள் பலர் கவிதையினைத் தம் வெளிப் பாட்டுக்கு ஊடகமாகத் தேர்ந்தெடுத்தது இன்றைய வரலாற்றில் புதிய கண்ணி"

என தமிழகத்து பேராசிரியர் "மங்கை" அவர்கள் கூறுவது கவனிப்புக்குரியது. ஈழத்துப்பெண் கவிஞர்களில் அதுவும் எமது தாயக மண்ணின் விடுதலைப்போராளிகளாக மிளிரும் அம்புலி போன்ற பெண்கவிஞர்களின் வேகமும் நுட்பமும், ஆழமும் தனித்துவமானது.

"நிலவே மறைந்து விடு
உலவுவதற்கும் குலவுவதற்கும்
இதுவோ நேரம்?
நேற்றிலிருந்து
பற்றைக்குள்ளே நான்
பதுங்கியிருக்கின்றேன்.
கரிய பனைகளின் இடைவெளிக்குள
உருமறைந்தபடி
கொடியவர்களின் காவலரண்கள்
இருப்பிடத்தையும் அவர்களின்
நடமாட்டத்தையும்
அறிய நான் முன்னேறவேண்டும்.
நெடுவெளிக்குள் ஊர்ந்து சென்று
உற்று நோக்க வேண்டும்.
ஏன் வந்தாய்?"

எனக்கேட்கும் "அம்புலி" நிலா தொடர்பான பாரம்பரிய புனைவுகளை, அழகுகளையெல்லாம் தூக்கி எறிந்து விட்டு கேள்விக்கு உட்படுத்துகின்றார்.

இந்த மண்ணில் வீரப் பெண்களுக்கு இருக்கவேண்டிய குணங்களை, இயல்புகளை அவர் முரசறைந்து அறிவிக்கின்றார். இவை வெறும் வெற்றுக்கோஷங்கள் அல்ல.

"மானம் செத்தபின் வாழ்வதைவிட
நாம் மானுடராய்ச்சாவோம்.
ப்சியும் பட்டினியும் மேலிட
மலம் தின்று வாழ்வதைவிட
நாம் தீ தின்று சாவோம்
ஒரு உன்னதமான வாழ்வு
எங்களுக்கில்லையெனில்
சாம்பல் மேடுகளே
எங்களுக்காக சொந்தமாக இருக்கட்டும்."

என்கிறார் அம்புலி"

இந்த மண்ணை எவ்விதம் ஆழமாக நேசிக்கின்றார்கள் என்பதற்கான ஒரு குறியீடே.

"அள்ளி வந்த செம்மண்
முகத்தில் விழுந்ததை
அருவருத்துத் துடைப்பதைவிட
சந்தணமாக நினைத்து
உரசித் தேய்த்ததாக" எனவும் அவர் கூறுகின்றார்.

போராளிப்பெண்ணாக தீவிரமாக கவிதைகளை வெளிப்படுத்துவதால் கலைத்துவமான படைப்பாக்கத்தினை அவரிடம் முழுமையாக எதிர்பார்க்க முடியாதுள்ளது. அவ்வாறே சில கவிவரிகள் வெறும் வரிகளாகவே எந்தவிதமான ஈர்ப்பும் இல்லாமல் உள்ளமையும் காணக்கூடியதாக உள்ளது.

இருந்தாலும் "அம்புலியின்" கவித்துவம் ஆற்றல் உள்ளது என்பது மறைக்கமுடியாத உண்மையே.

இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

# கொஞ்சமாவது எங்களையும் நினையுங்கோவன்

பிரஞ்ஞன்

"என்ன சங்கரியார் காலமை ஆத்துப்பறந்து ஓடினியள். இப்ப மரத்துக்குக் கீழை இருக்கிறியள்?"

"நாய் கடிக்கிறதும் சரியடா சின்னட்டி வந்து ஆஸ்பத்திரி வழிய இடிவாங்கிறதும் சரி"

"ஏன் சங்கரியார் என்ன நடந்தது?"

"கொஞ்சத்துக்கு வாயைப் பொத்திக்கொண்டு இரடா சின்னட்டி எனக்கு வயிறு பச்சை இறைச்சியா நோகுது."

"தந்த மருந்துகளை எக்கச்சக்கமா சாப்பிட்டியள் போலை."

"அதுதான்ரா சின்னட்டி நடக்கப்போகுது. துண்டைக் குடுக்க மருந்து தாறபொடிச்சி, ஏதோ தடல் புடலாய் காலை மாலை எண்டும், அரை பாதியெண்டு அள்ளிக் கட்டி வலு பக்குவமா குளிசைகளை தந்திது."

"சும்மா தாற மருந்துகள் தானே அள்ளித்தானே தரோணும்."

"கொஞ்சம் தள்ளி நிண்டு பேசு- வாய்க்காலை குதப்பி பறக்குது"

சரி சரி சங்கரியார் நான் தள்ளி நிக்கிறன். உங்கட முழியைப்பார்த்தால் எந்தெந்தக் குளிசை.... எப்பெப்ப போடுறது எண்டு தெரியாமல் முழிக்கிறியள் போலை. உது வைத்தியசாலைகளில் பெரிய பிரச்சினைதான். அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கு கூடுதலா கஷ்ரப்பட்டதுகள் தானே போறதுகள். கஷ்ரங்களிலை எத்தினைகள் படிப்பை குழப்பியிருக்குங்கள் அதுகள் எல்லாம் குளிசைகளைப்பார்த்து தடுமாறுங்கள்தானே.... கையில ஒரு பேனை வைச்சிருக்கினம். அதுகளை எப்ப எப்ப என்று எழுதிக் கொடுத்தால் என்ன குறைஞ்சே போயிடுவினம் ஆஸ்பத்திரிக்கு முன்னாலை எத்தினை நிண்டு தவிக்குதுகள் எதெதுவெண்டு தெரியாமல்.

"அப்பிடிப் போடு சின்னட்டி கதையை, அவையள் தெளிவா எழுதிக்கொடுத்தாலென்ன?

"அது சரி சங்கரியார்- நீங்கள் காலமை வெள்ளாப் போடையல்லே எழும்பிப் போனனீங்கள். இவளவு நேரமும் என்ன செய்தனீங்கள்?"

"ஐயோ.... அதைக் கேளாதையடா சின்னட்டி- நான் போகவே கட்டில் நிரம்பீட்டுது சனங்கள்."

"இப்ப கிணறுகளுக்கை தண்ணி வற்றியீட்டுது. காய்ச்சல் தலையிடியெண்டு வரும்தானே- மண் தண்ணி குடிக்கிற சனங்களுக்கு."

"மெய்தான் சின்னட்டி- உந்த கிளிநொச்சி பட்டி, தொட்டி, வேலி பிராய், படலை, கிடலை மரங்கள் எல்லாம் பாத்தனியே... சுட்டாறின தண்ணியைப் பருகச் சொல்லி எத்தினை "போட்"கள் தொங்குதென்று- சுகாதார பிரிவின்ரை வேலை என்று தான் வாயை ஆவென்று பார்த்தன் - கடவாயாலை சாத்துவாயும் வந்திட்டுது, எல்லாம் வாசிக்க-அது ஆர் போட்'டோட்'டுக்கள் என்று தெரியுமே- சேரன் நிறுவனம்- அது ஒரு வர்த்தக நிறுவனம் சின்னட்டி- மக்களிலை எவ்வளவு அக்கறை அந்த நிறுவனம் போல எத்தினையோ நிறுவனங்கள் இருக்குதுகள் ஒவ்வொரு நிறுவனமும் மக்களை விழிப்படைய இன்னும் எவ்வளவையோ செய்யலாம்.

உந்த A-9 பாதையை விட மற்றைய பாதைகள் எல்லாம் புழுதிப்படலங்கள் தானே... உதை உப்படியே விட்டால் நாளைக்கு நாங்கள். எல்லாரும் சடலங்கள் கண்டியோ-

"என்ன சங்கரியார் சொல்லுறியள்? A-9 னை விட மற்றதுகளும் கொஞ்சம் கொஞ்சமா தார்றோட்டா நீளுதுகள் தானே...."

"மண்ணுக்கு மேலை தாரைப்போடினம். அடுத்தநாளே கிடங்குகள் வந்திட்டுது- நான் சொல்லவந்த விசயத்தை வடிவாக் கேளன்- சனங்களுக்கு வருத்த துன்பங்கள் வரக்கூடாது எண்டுதான் ஆஸ்ப்பத்திரிகள் கட்டுறது."

"உது எனக்குத் தெரியாதே -சங்கரியார்- ஹி.....ஹி... ஹி.." "எல்லாம் தெரிஞ்ச விசயம் தான் சின்னட்டி- தெரிஞ்சதுகளைத்தானே நாங்கள் கதைக்கோணும்- ஒருபக்கத்தாலை ஆஸ்பத்திரிகள் எழும்ப எழும்ப ஒரு கரையாலை வாகனங்கள் போக, எழும்புகிற புழுதிகளாலை சனங்களுக்குத்தானே வருத்தங்கள் கூடிக் கொண்டு போகுது- ஆஸ்பத்திரியை வந்துபாரன் முட்டு, பீனிசம் என்று எத்தினை சனங்கள் முட்டி மோதுதுகள்."

"சங்கரியார்.... அப்பிடி எண்டால் உந்த வட்டக்கச்சி, அக்கராயன், இரணைப்பாலை எண்டு மண் புழுதி றோட்டுகளாலை போகிற சனங்கள் ஒரு துண்டை எடுத்து மொட்டாக்குப் போட்டுக் கொண்டு போகட்டுக்கன்"

"சின்னட்டி உன்ரை ஐடியாவை நீ, சந்திக்குச் சந்தி எழுதி ஒட்டாதை. இப்போதையான் பொடிச்சிகளுக்கு உது வில்லங்கம்."

"அப்ப என்ன இதுகளுக்குச் செய்யிறது?"

"உந்தச் சேரன் வாணிபம் போல இன்னும் நிறைய நிறுவனங்கள் சேர்ந்து, எதாவது செய்யோணும்...?"


"என்ன சங்கரி செய்யிறது?"

"புழுதித் தெருவெண்டு பார்க்காமல் உந்த வாகனகாரர் ஓடுற ஓட்டங்கள். அவையளுக்கு என்ன- கண்ணாடிகளை இறுக்கி மூடிக் கொண்டு முறுக்குவினம்- எத்தனை குழந்தைகள் முக்கழிக்குது. அட அது தான் போகட்டுக்கும் உந்தத் தெருக்களாலை ஒரு கல்யாணவீடு, கோவில் திருவிழா எண்டு ஒரு நல்ல உடுப்பை உடுத்திக்கொண்டு போகேலாமல் இருக்கு -உந்த உத்தியோகக்காரர், வெள்ளைச் சட்டை போட்ட பள்ளிக்கூடத்துப் பொடியள் "கறுமங்கள் சங்கரியார் அதுகள் அயன் பண்ணின உடுப்புக்களோட வெளிக்கிடுங்கள், படலை தாண்டினால் பன்னாடை தான். இதுக்குச் சங்கரியார் என்ன செய்யிறது... மோட்டார் சைககிளில் இரண்டு பேருக்குமேலே போகக்கூடாது எண்டு சட்டம் வந்ததல்லே...?"

"அதுதான் சங்கதி சின்னட்டி. உந்தச் சேரன் நிறுவனம் மாதிரி, பிற நிறுவனங்கள், அல்லது சமூக அமைப்புக்கள், சனங்களில் அக்கறைகள் இல்லாமல், வாலைக் கிளப்பிக் கொண்டு ஓடுற மாடுகள் போலை- கண்ணை மூடிக்கொண்டு, கண்ணாடிகளை இறுக்கிச் சாத்திக்கொண்டும் போற வாகனங்களால், எழும்பும் புழுதிகளால், என்னென்ன விளைவுகள் என்பதை விளக்கவும்,கட்டுப் படுத்தவும் ஏதாவதொரு வழியைச் செய்யோணும்-"

"அ...அ.... அங்கை பாருமன் சங்கரி- மோட்டார் சைக்கிளிலை எத்தினை பேர் எண்டு...?"

!!!.....!!!




## சேரன் வாணிபம்

**மிகவும் கோலாகலமாக**
**கிளிநொச்சியில்**
*திறந்துவைக்கப்பட்டுள்ளது.*

**அன்பான வழமையாளர்களே!**
**உங்கள் நெஞ்சங்களில் நீங்காத**
**இடம்பிடித்த சேரன் வாணிபம் தற்போது**
**ஆர்ப்பிக்கோ (ARPICO) உற்பத்திப் பொருட்களான;**

* ஆர்ப்பிக்கோ நீர்த்தாங்கி.
* ஆர்ப்பிக்கோ மெத்தைகள்.
* ஆர்ப்பிக்கோ கதிரைகள்.
* ஆர்ப்பிக்கோ அலுமாரிகள்.
* ஆர்ப்பிக்கோ ஸ்ரீல் மேசைகள்.
* ஆர்ப்பிக்கோ கம்பியூட்டர் கதிரைகள்.

போன்ற வீட்டு, அலுவலக தளபாட வகைகளை விற்பனை செய்யும் விற்பனை நிலையம் ஒன்றையும் எதிர்வரும் 23.08.2004 ஆம் திகதி இல. 349 பிரதானசாலை கிளிநொச்சியில் திறந்து வைக்கவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றது.

–ஆர்ப்பிக்கோ (ARPICO) பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் றிச்சாட் பீரிஸ் டிஸ்ரியூட்டேஸ் லிமிற்றட் (RICHARD PIERIS DISTRIBUTORS LTD) நிறுவனத்தின் வன்னிப்பகுதிக்கான ஒரே வழங்குனர் (SOLE DISTRIBUTOR)

## சேரன் வாணிபம்
**கிளிநொச்சியில்**

4971

தீவுகளில் மக்களின் நிலைமை 1990ஓகஸ்ரில் சிங்களப் படைகளின் திரிவிடபலய ஆக்கிரமிப்பால் அவலமாகிப்போனது.

மண்டைதீவினை ஆக்கிரமித்த சிங்களப்படைகள் ஆங்கிருந்து கோட்டை இராணுவமுகாமை விடுதலைப்புலிகளின் முற்றுகையிலிருந்து கைப்பற்ற அவ்வப்போது பெரும் தாக்குதல்களை நடத்திக்கொண்டிருந்தன.

படைகளின் தாக்குதல்கள் விடுதலைப்புலிகளால் முறியடிக் கப்பட்டுக் கொண்டிருந்தன. இந்த முறியடிப்பில் சிறிலங்கா வான்படையின் குண்டுவீச்சு விமானமான 'சியாமாசெற்றி' விடுதலைப்புலிகளால் யாழ்ப்பாணக் கடலேரியில் சுட்டுவீழ்த்தப்பட்டது. அப்போது சிறிலங்கா வான்படையின் அதிஉயர்வலு தாக்குதல் விமானங்களான இத்தாலித் தயாரிப்பு சியாமாசெற்றி இருந்தது. அதனுடன் Y8,அவ்ரோ விமானங்கள் குண்டுகளை ஏற்றிவந்து மக்கள் குடியிருப்புகள் மீது உருட்டிவிட்டன. அவ்ரோவிமானம் யாழ்நகர் - அதனைச்சூழ்ந்த குடியிருப்புகள் மீது இரவுவேளையில் பீப்பாக் குண்டுகளை வீசின.

# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்... 10



இந்தப் பீப்பாக்குண்டு சிறிலங்காப்படைகளால் அப்போது தயாரிக்கப்பட்டவை. மண்ணெண்ணெய்பரல் அரைவாசியாக வெட்டப்பட்டு அதனுள் வெடிமருந்து நிரப்பப்பட்டு வெடிப்பிவைக்கப்பட்டு விமானத்தில் உருளத்தக்கதாக சில்லுகள் பூட்டப்பட்டு உருவாக்கப்பட்டவை. இரவுவேளையில் யாழ்நகரினை சூழ்ந்த மக்கள் குடியிருப்புகளில் வெளிச்சமினுக்கங்களை இலக்குவைத்து இந்தக் குண்டுகள் உருட்டி விடப்படும். இதனால் இரவில் மக்கள் விமான ஒலி கேட்கப்பட உடனடியாக விளக்குகளை அணைப்பர்.

பகலிலும் இவ்வாறு குண்டுகள் Y8 அவ்ரோ விமானத்திலிருந்து உருட்டிவிடப்பட்டன. இதில் பெருமளவில் மக்கள் கொல்லப்பட்டனர். குடியிருப்புகள் அழிக்கப்பட்டன. யாழ்ப்பாணநகரம் முழுமையாக வெறிச்சோடி இடிந்தழிந்து மயானமாகிப்போனது. யாழ்.போதனா மருத்துவமனை இடம்பெயர்ந்து மானிப்பாய் கிறீன் மருத்துவமனைக்கு மாறியது. மிகப்பெரும் அவலம் அப்போது யாழ் குடாநாடெங்கும் மக்களை வாட்டியது.

கோட்டைமுகாம் அழிப்பின் மூலமே இந்த அவலத்துக்கு முடிவு கட்டமுடியும் என்ற நிலையில் கோட்டை சிறிலங்காப்படைமுகாம் மீதான விடுதலைப்புலிகளின் முற்றுகை இறுக்கப்பட்டது. முகாமுள் இருந்த படைகள் நாளுக்கு நாள் கொல்லப்பட்டனர், காயமடைந்தனர், உணவுநெருக்கடிகளும் அதிகமாகின. இந்தச்சூழலில் இந்தப் படையினரை மீட்க நாளும் நாளும் நகர்வுகளை மண்டைதீவிலிருந்து - கோட்டை நோக்கி மேற்கொண்டனர். இதில் ஒரு தடவை கடும் பிரயத்தனத்துக்கு மத்தியில் கோட்டையுள் உலங்குவானூர்தியை தரையிறக்கி காயமடைந்த படையினரை எடுத்துச்சென்றனர். ஆனாலும் கோட்டையை தக்கவைக்க முடியாத நிலை படையினருக்கு இருக்க, கடைசியாக கோட்டை முகாமிலிருந்து படையினரை பின்வாங்கிக் கொண்டுசெல்லும் முயற்சியை மண்டைதீவுப்படையினர் மேற்கொண்டனர்.

மண்டைதீவிலிருந்து கோட்டையில் முடியும் பண்ணைப்பாலம் தாம்பேதிகளைக்கொண்டதான வீதி படையினரால் பயன்படுத்தப்படமுடியாது போயின. ஏனெனில் அவை யாவும் தகர்க்கப்பட்டுவிட்டன. இந்த நிலையில் படகுகள் மூலமும் வீதியின் ஓரமாக கடலில் நடந்தும் கோட்டை முகாம்படையினரை மீட்க இரவுநேர முயற்சிகளை படையினர் மேற்கொண்டனர். இவையாவும் விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டன. இதற்குள் தப்பியோடிவிட கோட்டைப்படையினரும் வழிதேடினர். கோட்டையின் தென்பகுதியில் கரையோர வீதிப்பகுதி சுவரில் ஒரு வாசல் இருந்தது.

தூர்ந்துபோயிருந்த இந்தவாசலை கண்டுபிடித்த படையினர் அதனூடாக வெளியேற திட்டமிட்டனர்.

கோட்டை முகாம்மீது நாளுக்கு நாள் விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் அதிகமாகின. உச்சத்தாக்குதல் செப்டெம்பர் 20இன் பின் ஆரம்பமானது.

செப்டெம்பர் 26 தியாகி லெப்டினன்கேணல் திலீபன் வீரச்சாவை தழுவியநாளின் அதிகாலை வேளை உச்சக்கட்டகோட்டைமீதான தாக்குதலின் போது அந்தப் பின் பக்க பாதைவழியாக சிறிலங்காப் படையினர் வெளியேறி பண்ணை - தீவக வீதியின் ஓரமாக கடலின் வழியாக மண்டைதீவுக்கு தப்பியோடினர்.

அன்றுடன் 03 நூற்றாண்[illegible]களின் பின் கோட்டை விடுதலைப்புலிகளால் - தமிழ்மக்களால் [illegible]ட்கப்பட்டது. போத்துக்கீசர் கைப்பற்றிய அந்தப்பகுதி 1990 செப்டெம்[illegible] 26இல் மீட்கப்பட்டு தமிழீழத் தேசியக்கொடியேற்றப்பட்டது.

அதனுடன் யாழ்ப்பாண நகரின் அச்சுறுத்தல் - விலக்கப்பட்டது.

**துருவன்**

## தொல்லியல்

# தொன்மைக்கால சுடுமண் வளையக்கிணறு

முல்லைத்தீவு தண்ணி முறிப்பில் பல ஆயிரம் ஆண்டுகள் தொன்மையான சுடுமண் வளையக் கிணறு ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

தமிழர் தாயகத்தின் தொன்மை வரலாறில் உள்ள சுடுமண் வளையக் கிணறு தொழில்நுட்பத்திலான ஒன்றே தண்ணிமுறிப்பில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.நிலக்கீழ் நீரூற்றை கண்ட றிந்து அதன்படி முல்லைத்தீவு, தண்ணீரூற்று புதிய கிணறு ஒன்று தோண்டப்படுகையில் அதன் கிழக்குப் பகுதியில் இரண்டரை அடி விட்டமுடைய சுடுமண் வளையக் கிணறு கண்டுபிடிக்கப்பட்டது. இக் கிணறு அமைக்கப்பட்டவேளையில் இருந்த மண்படையிலிருந்து 10 அடி ஆழமாக இந்தச் சுடுமண் வளையக் கிணறு இருக்கின்றது.

வெள்ளையான கடினமான மண்ணில் 10 அடி ஆழத்துக்கு இரண்டரை அடி விட்டத்துக்கு மிகநேர்த்தியாக உருளை வடிவில் தோண்டப் பட்ட கிணற்றில் சுமார் 2அடி விட்டமுடைய ஒவ்வொன்றும் ஒரு அடி உயரமான சுடுமண் உறைகள் இருக்கப்பட்டுள்ளன. சுடுமண் உறை யின் தடிப்பு ஒரு அங்குலமாகும். இந்த சுடுமண் வளையக் கிணறு அமைக் கப்பட்டகாலத்தில் இருந்த மேற்புற மண்படையின் மேலாக 3அடி உயரத் துக்கு வண்டல்மண் படிந்துள்ளது. இம்மண் படிவு கிணறினை மூடியிருக் கின்றது. கிணறின் அடிவரை வண்டல்மண் நிறைந்துள்ளது. கிண றின் வாயில் மண்படை மேற்புற மண்படையின் அழுத்தம் காரணமாக பிறைவடிவில் உட்குவிந்துள்ளது. கிணறு முழுவதுமாக நிறைந்துள்ள




வண்டல்மண்ணின் அடியில் - அதா வது சுடுமண்வளையத்தின் அடியில் மூன்று பெரிய கிரவல் கற்கள், கரித்துண்டுகள், இரும்பு உருக்குத் துண்டு 6அங்குல விட்டமுடைய சிறியமட்கலம் ஒன்று என்பனவும் எடுக்கப்பட்டுள்ளன.

கிணறின் வாயில் மண் படையில் ஒரு தொகுதி உடைந்த மண்கலங்களும் எடுக்கப்பட்டுள்ளது.

மண் வளையக்கிணறின் அடிப்பகு தியில் தற்போதும் நீரூற்று காணப்படு கின்றது.

புதிய கிணறு தோண்டப் பட்டபோது அதன்கிழக்குப்பகுதியில் வெள்ளைமண்படிவில் வித்தியாசமாக இரண்டரை அடி அகலப்பகுதியில் கறுப்பு மண்படிவைக் கண்ட மக்கள் அடிப்பகுதியில் மண்வளையத்தின் நடுப்பகுதியையும், அதனுள் இருந்து மட்கலத்தின் கழுத்துப்பகுதியையும் உடைத்துவிட்டனர்.


மேற்படி மண் அழுத்திய



தால் மண்வளையங்கள் நெருங் குண்டு சிதைந்து கிணறின் அடிப்பகுதியை நோக்கி இறங்கிய நிலையில் - கிணறு கண்டுபிடிக்கப் பட்டது. இதனை கண்ணுற்ற அப் பகுதிமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் அவர்கள் அப்பகுதிக்குச் சென்று உடைந்த பகுதிகளைச் சேகரித்தார். பின் அவரின் ஒருங்கிணைப்பில் தொல்லியல் தேடலாளர் ந.குணரட் ணம் குழுவினர் மிக நேர்த்தியாக கிணற்று மண்வளையங்களையும் மட்கலப்பகுதிகளையும் - அதனுள் இருந்த மண்ணையும் மீட்டுள்ளனர்.

பின்னர் ந. குணரட்ணம் குழுவினர் உடைந்த துண்டுகளை இணைத்து அவற்றை ஒழுங்காக் கியுள்ளனர்.

தமிழர்களிடம் இருந்த 2000 ஆண்டு முதல் 3000 ஆண்டு கள் வரையான பெருங்கற்காலத்தில் இந்த மண் வளைய கிணறுகளை பயன்படுத்தியுள்ளனர். மண் உறை கிணறு எனவும் இதனை அழைக் கின்றனர். இத்தகைய சுடுமண்வளை யக்கிணறு ஒன்று பூநகரி கிராஞ்சியில் இப்பொழுது மக்களால் பயன்படுத் தப்பட்டு வருகின்றது. அதிக வளை யங்களைக்கொண்ட இக் கிணறு கடற்கரை மணலில் தூய நீரை அள்ளுவதற்காக - அமைக்கப்பட்ட தாகும். திரு வெ. இளங்குமரன் அவர்களின் ஏற்பாட்டில் கிராஞ்சி சுடு மண் கிணறின் துண்டு ஒன்று காபன் -14 கதிரியக்க காலக்கணிப்பு செய்யப்பட்டு அது கி.மு.2800 ஆண்டுகளுக்கு முற்பட்டது என அறியப்பட்டது.



தமிழகத்தில் பெருங்கற் காலத்துக்குரிய சுடுமண் வளையக் கிணறு திருநெல்வேலி மாவட்டம் காயல் ஆதிச்சாறல் சார் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டது. இது காபன் -14 காலக் கணி ப்புப்படி கி.மு 785 ஆண்டு களுக்கு முற்பட்டது என வரையறை செய்யப்பட்டது. இதைவிட வடக்கிந்தி யாவில் அத்திரபுரத்திலும் மண்வளையக்கிணறு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. தமிழகம் வடஆழ்க்காடு செங்கமேட்டிலும் ஒரு உறைகிணறு கண்டுபிடிக்கப்பட்டது.

தமிழ்களின் ஒரு காலகட்ட முக்கிய அறிவியல் தொழில்நுட்பம் நீரூற்றை கண்டுபிடித்து உறை கிணறுகளை அமைத்ததாகும்.

தண்ணிமுறிப்பில் - புதிய கிணறுக்கு அருகான இடமொன்றில் பல ஆண்டுகளின்முன் கிணறு ஒன்று வெட்டப்பட்டபோது தற்போது எடுக் கப்பட்ட உறை கிணறுக்குரிய மட் கலத்துண்டுகளைக் கண்டதாக இக்கிராம ஆரம்பக்குடியேற்றவாசி ஒருவர் கூறுகின்றார்.

தண்ணிமுறிப்பின் இப்பகுதி யில் பெருமளவு பெருங்கற்கால மட்கலத்துண்டுகள் காணப்ப கின்றன.

ஒரு மண்வளையக்கிணறு தண்ணிமுறிப்பில் எடுக்கப்பட்டி ருப்பதன் முக்கியத்துவம் அதன் முழுமையான தோற்றம் குறுக்கு வெட்டு முகமாகக்கிடைத்ததாகும்.

முல்லைத்தீவின் மண் வளையக்கிணறு அங்கு 2000 ஆண்டுகளுக்கு முன் மக்கள் வாழ்ந் ததை உறுதிசெய்தது.

தமிழ் மக்களின் தொன்மை அறிவியல் தொழில்நுட்பத்தின் வெளிப்பாடே சுடுமண் வளையக் கிணறு ஆகும்.

**குரலோன்**





பல குடும்பங்களில் சிறு மழலைகள் பெரும்பாலும் ஆண் குழந்தைகள் சுட்டித்தனங்கள் (எமது பாஷையில் குழப்படிகள்) செய்வதையும், "டேய் ஏய் அதைத் தொடாதே, இதைத் தொடாதே, அங்கே போகாதே, இங்கே போகாதே" எனப் பெற்றோர் அவர்களை அடக்கியாள்வதையும், சிலவேளைகளில் அவர்களுக்கு அடிப்பது, குட்டுவது நுள்ளுவது போன்ற தண்டனைகளை வழங்குவதையும் காணக்கூடியதாக இருக்கும்.

இப்படிக் குழந்தைகளை அடக்குவதும், தண்டிப்பதும் சரியா....? இது முற்றிலும் தவறானது. குழந்தைகள் வளரும் இயல்புள்ளவர்கள். அவர்களுக்கு இந்த உலகம் புதிது. எனவே அவர்கள் எல்லாவற்றையும் அறிந்து கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார்கள். அந்த 'அறிதலின்' வெளிப்பாடுதான் அவர்களது 'சுட்டித்தனம்'.

இச் சுட்டித்தனம் குழந்தைகளின் ஆற்றலை வளர்க்கிறது. அவர்களை நாம் அடக்குவதால் அவர்களின் ஆற்றல் மழுங்கடிக்கப் படுகிறது. உதாரணத்திற்கு ஒன்றைப் பார்ப்போம்.

காலையில் வேலைக்குச் சென்ற தந்தை மாலையில் களைத்து வீடு திரும்புகிறார். தந்தையின் களைப்பைப் பிள்ளை அறிந்திருக்க நியாயமில்லை. எனவே அது பாசமிகுதியால் "அப்பா..." என்று ஓடி வருகிறது' இந்த நேரத்தில் தந்தை என்ன செய்ய வேண்டும்? தனது களைப்பை மறந்து விட்டு அக் குழந்தைய ஆரத்தழுவித் தூக்கிக் கொள்ள வேண்டும்.குழந்தையுடன் தானும் ஒரு குழந்தையாகி அதன் செயல்களை ரசிக்க வேண்டும், பாராட்ட வேண்டும். மாறாக "சீ...சீ.... உடை அழுக்காகியிருக்கிறது. அங்கால போ, கால் முகத்தைக் கழுவு" என்று கட்டளையிட்டால்... அல்லது "உன்னுடன் விளையாட என்னால ஏலாது, எனக்கு நேரமில்லை" எனப் பாய்ந்து விழுந்தால்.... அம்



# குட்டிப் பயல்கள் சுட்டிப் பயல்கள் தானே...!

மழலையின் மனநிலை என்னவாகும்?....

குழந்தைகள் வண்ணத்துப் பூச்சிகளையும், மலர்களையும், செல்லப் பிராணிகளையும், இன்னும் விதவிதமான பொருட்களையும் கண்டு மகிழும் இயல்புடையவர்கள். இவர்கள் மணல் தரையில் விளையாடவே விரும்புவார்கள். எந்தப் பொருட்களையென்றாலும் உடைத்தொழித்தோ ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்ற துடிப்புடையவர்கள். இவ்வகையான சந்தர்ப்பங்களில் இவர்கள் தமது சந்தோசத்தையே எம்முடன் பகிர்ந்து கொள்ள நினைக்கிறார்கள். ஆனால் நாமோ கண்டிப்பும் கறாருமாக அவர்களது செயல்களைத் தடுக்கிறோம். அம்மழலைகளின் மனதை எம்மையறியாமலே உடைக்கிறோம். மாறாக நாமும் குழந்தைகளைப் போலவே மாறி அவர்களுடன் சேர்ந்தே ரசித்து, சிரித்து, விளையாடி மகிழ்ந்தால் நம் குழந்தைகள் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள். அவர்களது மனம் எந்தவித ஏக்கங்களுமின்றி ஆரோக்கியமானதாக. இருக்கும். ஆரோக்கியமான மனமுள்ள சிறுவர்களே நாளை ஆற்றல் மிக்க மனிதர்களாக மாறுவார்கள்.

குழந்தைகளின்சிந்தனைகள் திசை மாறிச் செல்லும் போது, அதனைத் தடுக்க வேண்டியது கட்டாயம் தான் ஆனால் அவர்கள் அவ்வாறு திசைதிரும்பாவண்ணம் அன்பைக் காட்டி அவர்களை வளம் படுத்துவதே பெற்றோர்களின் திறமை. பிள்ளைகளுக்கு நாம் விட்டுக்கொடுத்துநடந்தால் பிள்ளைகள் நிச்சயமாக நம் வழிக்கு வருவார்கள்.

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்று ஒரு பழமொழியுண்டு. ஐந்தில் வளைக்க வேண்டியதுதான்.

ஆனால் நாம் வளைப்பதாக நினைத்து உடைத்துவிட்டால்... எனவே வளைக்கும் போது, அதாவது நல்வழிப்படுத்தும் போது மிகவும் தந்திரமாக நிதானமாக, அவதானமாகத்தான் செயற்பட வேண்டும்.

அன்பும், அரவணைப்புமே அவர்களை நல்ல மனிதர்களாக வளரவைக்கும், கண்டிப்பும் கறாரும் அவர்கள் ஆற்றலை மழுங்கடிக்கவே வழிவகுக்கும்.

நம் கண்மணிகள் கண்ணாடி போன்றவர்கள். எனவே கவனமாகக் கையாளுங்கள் விட்டுககொடுங்கள், தட்டிக்கொடுங்கள், நாளைய தலைவர்கள் நம் பிள்ளைகளே.

**க.கவிதா**

# முட்டை-வெந்தயக்கீரை வறுவல்




தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| முட்டை | - ஒன்று |
| வெந்தயக் கீரை | - ஆறு சிறு கட்டுகள் |
| பச்சைமிளகாய் | - இரண்டு (பொடியாக நறுக்கியவை) |
| இஞ்சி | - சிறு துண்டு |
| வெங்காயம் | - இரண்டு (பொடியாக நறுக்கியவை) |

வெண்ணெய், உப்பு- தேவையான அளவு

செய்முறை:-

வெந்தயக் கீரையைச் சுத்தம் செய்து பொடியாக நறுக்கி வைத்துக் கொள்ளவும். தாச்சியில் வெண்ணெய் சூடானதும் பொடியாக நறுக்கிய வெங்காயத் துண்டுகளைச் சேர்த்துப் பொன்னிறமாக வறுத்து எடுக்கவும் முட்டையைத் தவிர மற்றப் பொருட்களை வெங்காயத்துடன் சேர்த்து நன்கு வதக்கிக் கொள்ளவும்.

முட்டையை உடைத்து முட்டை அடிக்கும் இயந்திரத்தால் நன்கு கலக்கிக் கொள்ளவும். முட்டையைப் பின்னர் தாச்சியில் கலவையுடன் ஊற்றி கலந்து சில நிமிடங்களுக்கு வதக்கி எடுக்க வேண்டியதுதான்.

* * *

# உணவு தயாரிப்பது எப்படி?

"உங்களுக்கு சமைக்கத் தெரியுமா?" என்று கேட்டால் "ஓ! தெரியுமே!" என்பீர்கள். ஆனால், 'கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா' என்று 'கவிஞர் கேட்ட மாதிரி, சமைப்பது எல்லாம் உணவாகி விடுமா?' உணவு எப்படி இருக்கவேண்டுமென்று உங்களுக்குத் தெரியுமா?

ஆமாம் அதற்கும் சில விதிகள் இருக்கின்றன:

உணவு கவர்ச்சியாகவும் சீரணிப்பதற்கு எளிதாகவும் இருக்க வேண்டும். உணவு உயிர்ச் சத்துக்களும் ஊட்டச்சத்துகளும் உடையதாகவும் இருக்க வேண்டும். அருமையான உணவிலிருந்து வரும் இனிய மணம், வயிற்றில் சீரண நீர் சுரக்கச் செய்ய வேண்டும்.

நீங்கள் உணவு தயாரிக்கிற போது, ஏற்படுகிற நுட்பமான இரசாயன மாறுதல் இவைகளுக்கெல்லாம் காரணமாக இருக்க வேண்டும். இதுவே சமையற் கலையின் இரகசியம்..! இதற்கு விஞ்ஞானியின் மதிநுட்பமும் எழுத்தாளரின் கற்பனையும் உங்களுக்கு வேண்டும்!

உடல்-மனம்-மூளை ஆகியவற்றின் வளர்ச்சிக்கு ஏற்ற உணவு இதுவே!

சமையலுக்குத் தேவையான எல்லாவற்றையும், சமையல் தொடங்குவதற்கு முன்பே, சுத்தமாகக் கழுவித் தயாராக வைத்துக் கொள்ளுங்கள். இடையில் ஒவ்வொன்றையும் தேடி ஓடாதீர்கள்.

சமையலில் முக்கிய பங்கு வகிப்பது பெரிய மாற்றங்களை ஏற்படுத்துவது நெருப்புத்தான், நெருப்பால் ஏற்படும் மாற்றமே மணத்தை உருவாக்குகிறது. சமையலையும் சாத்தியமாக்கிறது. ஆகவே சமையலுக்கு ருசியும் குணமும் அதிகமாக, நெருப்பால் உணவுப் பொருட்கள் அடைகின்ற மாற்றங்களையும் தெரிந்து கொள்ளுங்கள்.

கொழுப்பும் எண்ணெய்களும், நெருப்பில் வேகாமலும் எளிதில் சீரணிக்கக் கூடியவை, அதிகமாக சூடாக்கினால் இவை கொழுப்புச் சத்துக்களை இழக்கின்றன. உணவில் இவை அளவுக்கும் அதிகமாக இருந்தால் நமது சீரணம் பாதிக்கப்படும், அத்துடன் சீரண உறுப்புகளுக்கும் அதிகப்படியானவேலை- அதையும் மீறிச்சில சமையங்களில் அஜீரணத் தொல்லைகள். அத்துடன் இவை அதிகம் வெந்தால் புரதச்சத்துக்களும் இழப்பு? ஆகவே இவற்றை கொதி நிலைக்கு மேல் அதிகமாகச் சூடாக்காதீர்கள்...?

நெய்யும் வெண்ணெயும் கொழுப்புச்சத்துக்களே. இவைகளுக்கும் மேலே சொன்னவை பொருந்தும். இவற்றிலிருந்து உயிர் சத்து "ஏ" இழக்கவும் நேருகிறது. இவை இரண்டையும் திறந்த பாத்திரங்களிலும் சூடாக்கக் கூடாது.

வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு இப்பகுதிக்கு நீங்கள் ஆக்கங்களை எழுதி அனுப்பலாம்.

அனுப்பவேண்டிய முகவரி:

**வீடு,**
**வெள்ளிநாதம்,**
**ஈழநாதம்,**
**யாழ்சாலை,**
**கிளிநொச்சி.**

# இப்படிச் செய்யலாம்...

சமைக்கும் போது பெண்கள் அடுப்பை உயரமான இடத்தில் இருக்கும் படி வைத்து நின்று கொண்டே சமைக்க வேண்டும். உட்கார்ந்துகொண்டு சமைத்தால் களைப்பு வரும்! இளைப்பு வரும்.

* * *

எலுமிச்சம் பழங்களைக் கெடாமல் வைத்திருக்க ஒரு சுலபமான வழி. ஒரு பானையில் மணலைப் போட்டு, அதில் எலுமிச்சம் பழங்களைப் புதைத்து வைத்துவிட்டால் எலுமிச்சம் பழங்கள் பழுதடையாமல் இருக்கும்!

* * *

கத்தரிக்காய், வாழைக்காய் போன்றகாய்களை நறுக்கியவுடன் அவைகளைத் தண்ணீரில் போடவேண்டும். இல்லாவிட்டால் இவைகளின் நிறம் மாறிவிடும். நிறம் மாறினால் சுவை கெட்டுவிடும்.

* * *

சோறு மல்லிகைப் பூப்போல இருக்கவேண்டுமா? சுண்ணாம்புத் தண்ணீரைக் கரைத்து அது சிறிது தெளிந்த பின், அதைக் கொதித்துக்கொண்டிருக்கும் சோற்றில் சிறிது கலந்துவிடுங்கள். சோறு மல்லிகைப் பூவைப் போல இருக்கும்! கல்சியம் சேர்ந்த இந்தச் சோறு உடலுக்கும் நல்லது.

* * *

குமரகுரு பரிசுத் திட்டத்தின் 05 தொடக்கம் 08 வரை பரிசு பெற்றவர்களின் பெயர் விபரம்.

**பரிசுத்திட்டம் -05**
ஜெ.நளாயினி,
கிளி/இராமநாதபுரம் மேற்கு,
அ.த.க. பாடசாலை,
வட்டக்கச்சி.

**பரிசுத்திட்டம் -06**
சி.சிவமலர்,
குடும்ப நலன் காப்பகம்,
நடுவப்பணியகம்,
கிளிநொச்சி.

**பரிசுத்திட்டம் -07**
ஆ.யோகராணி,
ப.தெ.வ.கூ. சங்கம்,
பிரதானவீதி,
முல்லைத்தீவு.

**பரிசுத்திட்டம் -08**
திருமதி.அரவிந்தன்,
இல-30 வவுனியா ஒப்டிகல்,
பஸ் நிலையம்,
வவுனியா.

பரிசில்களை நாங்கள் அனுப்பிவைக்கும் கடிதத்துடன் பரிசு பெற்றவரை உறுதிப்படுத்தி எமது அலுவலகத்தில் வந்து பரிசினைப் பெற்றுக்கொள்ளலாம்.




# குமரகுரு பல்பொருள் புடைவை வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்-10**

பெயர்:..............................................

முகவரி:............................................

..............................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.



# பொருண்மிய வாசல்

மாபெரும் விவசாயக் கண்காட்சி ஒன்றினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் எதிர்வரும் செப்டெம்பர் முதலாம் திகதி முதல் நான்காம் திகதி வரை நடாத்த ஒழுங்குகளைச் செய்துள்ளது.

கால் நடை உற்பத்தித்திணைக்களம், விவசாயத் திணைக்களம், கைத்தொழில் திணைக்களம் என்பன இணைந்து பங்கு கொள்ளும் இக்கண்காட்சி பலருக்கும் பலவிதமான அனுபவங்களையும், அறிவுரைகளையும், நம்பிக்கைகளையும் ஏற்படுத்தும் என

## எங்கள் பொருண்மிய வளம்

### சிதம்பரதிரு

நம்பிக்கை தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணையில் நடைபெறவுள்ள இக்கண்காட்சி தங்கள் சந்தேகங்களைத் தீர்ப்பதற்கும் மேலதிக விவசாய அறிவினைப் பெறுவதற்கும், சிறந்த தொழில்நுட்ப முறைகளை கண்டறிவதற்கும், செய்கை முறையிலும் ஒளிப்பட, புகைப்படக் காட்சியுடனும் திட்டவிளக்கவுரைகளுடனும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



ஆர்வமுள்ள சிறந்த உற்பத்தியாளர்கள், தங்களிடம் உள்ள விவசாய, கால்நடை உற்பத்திகளை காட்சிக்கு வைப்பதற்கும், விற்பதற்கும் இக கண்காட்சியை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கடந்த பல ஆண்டுகளாக தமிழீழத்தின் பொருண்மிய மேம்பாட்டினை அடிப்படை நோக்காகக் கொண்டு எமது விளக்கங்களை உச்ச முறையில் பயன்படுத்தி உயரிய பயனை பொருண்மிய நலன்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இவ்வாறான கண்காட்சிகளை காலத்திற்குக் காலம் செய்து வருகின்றது.

எமது மண்ணில் எமது அடிப்படை மூலவளங்களைப் புதிய தொழில்நுட்ப அறிவியலை பயன்படுத்துவதனூடாக உயரிய விளைச்சலை உற்பத்திகளை பெற்றுக்கொள்ள முடியும் என்ற தன் நம்பிக்கையை எங்கள் மக்களுக்கு இவ்வாறான கண்காட்சிகள் ஏற்படுத்த வேண்டும்.

## தொண்டை அடைப்பான் H.S

பாச்சுரெல்லா மல்டோசிடா (PASTURALLA- MULTOCIDA) என்னும் நுண்ணுயிர்களே இதற்கு காரணம். இத் தொற்றுநோய் பெரும்பாலும் மழைக்காலத்தில் பரவுகிறது. இந்நோயில் இருவகையுண்டு. ஒன்று சுவாச மண்டலத்தையும், மற்றொன்று உணவு மண்டலத்தையும் தாக்கக் கூடியது.

**நோய் பரவும் விதம்:-**



மாடுகளின் உடல் தீவனப் பற்றாக் குறையால் நலிந்திருக்கும் போதும் எண்ணிக்கை அதிகமாகி நெரிசல் உள்ள பண்ணைகளிலும், மாடுகளை வெகு தூரத்துக்குக் கொண்டு செல்லும் போதும், சக்தி நிறைந்த சுகாதாரமற்ற இடத்தில் கட்டி வைப்பதாலும் இந்நோய் ஏற்படுகின்றது. இந்நோய்க் கிருமிகள் தீவனம் மூலமாகவும் தண்ணீர் மூலமாகவும் பரவ வாய்ப்புள்ளது.

(சி-10044)

**அறிகுறிகள்:-**

சுவாச மண்டலத்தைத் தாக்கக் கூடிய இதை மூன்று வகைப் படுத்தலாம். அதிதீவிரம் (PARA CUTE) தீவிரம் (ACUTA) நீடித்த வகை (CHRONIC)

**அதிதீவிரம்:-**

இவ்வகையில் 10இல் இருந்து 24 மணி நேரத்தில் நோயுற்ற மாடுகள் இறந்து விடும். பாதிக்கப்பட்ட மாடுகளுக்கு மிகுதியான காய்ச்சலும், களைப்பும் காணப்படும். மூச்சுவிடத் திணறும், தொண்டைப்பகுதியிலும் மார்புப் பகுதியிலும் வீக்கம் தோன்றும். வாயிலிருந்தும், மூக்கிலிருந்தும் சீள் வடியும், நாக்கு வீங்கியிருக்கும்.

**தீவிரம்:-**

நோயின் அறிகுறிகள் சற்றுக் குறைந்து காணப்படும். ஆனால் இவ் வகையிலும் இறப்பு நிச்சயம், சினை மாடுகளில் கருச்சிதைவு ஏற்படும். எருமை மாடுகளின் தொண்டைப்பகுதியில் பருத்த வீக்கம் ஏற்படுவதே இந்நோயின் முக்கிய அறிகுறியாகும்.

**நீடித்த வகை:-**

கல்லீரல் வெகுவாகப் பாதிக்கப்படும். உடனே இறப்பு ஏற்படாமை இருப்பினும் உற்பத்தித்திறன், உழைக்கும் திறன் என்பன பாதிக்கப்படும்.

**உணவு மண்டலத்தைத் தாக்கக் கூடியவை.**

இவ்வகையில் முதலில் மலச்சிக்கலும் பின்பு வயிற்றுப் போக்கும் இருக்கும். பாதிக்கப்பட்ட மாடுகள் 12 மணியில் இருந்து 48 மணி நேரத்தில் இறந்துவிடும்.

**தடுப்பு முறை:-**

நோய்க் கிருமிகளைத் தேக்கி வைத்துள்ள புதிய மாடுகளை பண்ணையில் சேர்க்கும் போது பரவ வாய்ப்புண்டு எனவே புதிய மாடுகளை உடனே பண்ணையில் சேர்க்காமல் சிறிது காலம் தனித்து வைத்திருந்து பின்பு அனுமதிக்க வேண்டும்

மழைக் காலங்களில் இந்நோய் பெரிதும் மாடுகளைத் தாக்குவதால் அதற்கு முதற் தடுப்பூசி போட்டுவிடுவது நல்லது. இத் தடுப்பூசி போட்ட ஒரு வாரத்தில் நோய் எதிர்ப்பாற்றல் உற்பத்தியாகிறது. இந்நோய் எதிர்ப்புத்தன்மை ஓர் ஆண்டு காலம் இருக்கும். எனவே வருடம் ஒருமுறை தடுப்பூசி போட வேண்டும்.

**நோய்த்தீர்வு:-**

நோய் கண்ட மாடுகளுக்கு மருத்துவரை அணுகி தடுப்பூசி ஏற்றிக்கொள்ளுதலே சரியான வழியாகும்

"வருமுன் காத்தல் வந்த பின் விலக்குவதில் சிறந்தது"

**க.சூரியகுமாரன்**

---

(13 பக்கத் தொடர்ச்சி)

07.06.1997 அன்று காலையும் சிங்கள எதிரியின் இயந்திரக் கழுகுகள் தமிழர் உயிர்குடிக்க வந்து விட்டன. பேரிரைச்சல் வானைப்பிளக்கிறது. எதிரி ஏதோ இலக்கைத்தேடுகிறான். அவனை இன்றும் தாக்க விடக் கூடாது. என்பதில் புளியங்குளம் முகாமிலுள்ள நாம் தெளிவாக இருக்கின்றோம். புதல்வன் தனது உந்து கணைச் செலுத்தியுடன் தயாராகிவிட்டான்.

அந்தோ எதிரியின் விமானம் பேரிரைசலுடன் தாழப்பறக்கிறது என சக தோழன் சொல்லி முடிக்க பதல்வனின் உந்துகணையொன்று சீறிப்பாய்கிறது. ஏதோ புரிந்தவனாய் எதிரி விமானி பாதையை மாற்றி, புளியங்குளத்துக்கு வடக்கு மூலையாக கொண்டு வந்த எல்லாக்குண்டுகளையும் போட்டுவிட்டுச் செல்கிறான். எல்லோருக்கும் ஒரே சந்தோசம்.

மச்சான்... புதல்வனின் அடி பிடிக்காவிட்டாலும் பயந்திட்டான்.... என்று ஒருவன் சொல்ல,

இல்ல... இல்ல... அவன் புதல்வன் ஏவுகணை அடித்துவிட்டான் என்று மயக்கத்தில திரும்பிட்டான்...என்று பகிடியாகச் சொன்னான்.

நீங்கள் இரண்டுபேரும் சொன்னது பிழை புதல்வண்ணைக்கு அடிக்க குண்டு எடுத்துவரப் போயிட்டான் என்றான் ஒருவன். அவன் சொன்னது அன்று பிழைத்துவிட்டது. காலையில் போனவன் மாலை வரை வரவில்லை. ஆனால், வவுனியா எதிரிமுகாம் களிலிருந்து வந்து கொண்டிருந்த எறிகணைகள் விழுந்து கொண்டே இருந்தது. எத்தினை எறிகணைகள் விழுந்துகொண்டிருந்த போதும் எங்கள் புதல்வன் சிறிதும் சளைக்காமல் தனது வேலைகளை செய்துகொண்டே இருந்தான். எதிரியின் தாக்குதல் நாளை கடுமையாகவே இருக்கும் என்று பொறுப்பாளர் சொல்லிவிடவே, ஏனைய எல்லாப் போராளிகளையும் போல் புதல்வனும் இரவெனப் பாராது அதிகாலை 03 மணி வரை நகர்வரண் (moving bunker) வெட்டிக்கொண்டிருந்தான். போரினில் "கடுமையே இலகுவின் வழிகாட்டி" என்பதற்கு அமைய தனது காவலரணை கடும் உழைப்பினால் பலமாக்கிக் கொண்டிருந்தவன் அதிகாலை 03மணிக்கு தனது கடமையை முடித்துவிட்டு படுத்தவன் 5.30 க்கே எழும்பி தனது கடமைகளை செய்துவிட்டு, ஆயுதத்தை துப்பரவு செய்துகொண்டிருந்தான்.

நேரம் சரியாக 6.30 ஆகிவிட்டது. இப்போதெல்லாம் நாம் 6.30 செய்திகளுக்கு பதிலாக புளியங்குளத்தில் எதிரியின் விமானச்சத்தங்களையே கேட்டுப் பழகிவிட்டோம்.

வந்திட்டான் மச்சான்... என்று ஒருவன் சந்தமிட..!

புதல்வன் தனது உந்துகணை செலுத்தியால் தாழப் பறந்த விமானம் ஒன்றை நோக்கி ஏமாற்றத்திற்கான சூட்டை சுட்டுத்தீர்த்தான். அது இலக்கை தவிர்த்து. வேண்டா வெறுப்பாக எங்கோ குண்டை தள்ளி விட்டுச் செல்ல, புதல்வன் அடுத்த ஏவுகணையை, கருவியில் பூட்டிவிட எத்தனித்த நொடிப்பொழுதில், எதிரியின் இரண்டாவது விமானம் போட்ட குண்டு ஒன்றின் சிதறல் துண்டில் காயமடைந்து அவனது காப்பரணிலிருந்து வெளியில் தூக்கி வீசப்பட்டான். பக்கத்தில் இருந்தவன் விடவில்லை. விமானத்தை எதிர்பார்த்து விசைவில்லில் கை வைத்தபடி காத்திருக்க எதுவும் வராததினால் ஏமாந்துவிட்டான். எறிகணைகள் விழ விழ ஓடிச்சென்று புதல்வனை தூக்கி வந்தோம். பலத்த காயங்கள், இரத்தம் கொட்டிக் கொண்டிருக்கிறது. மருந்து கட்டச்சென்றால் வேண்டாம் என தடுத்துவிட்டு நா தழதழக்க ஏதோ சொல்கிறான்.

உயிர் விடுகின்ற போதிலும் விடவேண்டாம்... விட வேண்டாம்... கவனம்... கவனம்... என்று விளங்கக்கூடியவாறு சொல்லிவிட்டு விளங்காத மொழியில் ஏதேதோ சொல்லிவிட்டு கண்ணைமூடி மண்ணை முத்தமிடுகிறான். எங்கள் கில்லரிச்சந்திரன் சந்திரராசா 2ஆம் லெப் புதல்வன். அவனது அமைதியான முகம் புளியங்குளத்திலே புத்துயிராய்க்கிடக்கிறது. எதிரி சுட முன்ன நாங்கள் சுடவேணும், அப்பதான் சண்டையில் வெல்லலாம் என்ற அவனது சொல்லும் மறைந்திடா சொல்லுயிராய் வாழ்கிறது.

---

(09 பக்கத் தொடர்ச்சி)

என்பனவற்றை கவனித்தாலும் தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையை இந்தியா அடக்கியே தீருமென சூளுரைத்தார். பாகிஸ்தானுடன் சுமூக உறவு பேணப்படும் என்றும் பிரதமர் தனதுரையில் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் பிரதமர் உரை முன்னுக்குப் பின் முரணாக அமைந்தது டன் புதிய அரசின் 'பொடா' சட்டத்துக்கு எதிரான நடவடிக்கை சுதந்திர தினத்தில் அவதானிக்க முடிந்ததாக பாரதீயஜனதாவினர் குற்றம் சாட்டினர். இந்திய- பாகிஸ்தான் உரையால் ஒருபுறம் மறுபுறம் பாகிஸ்தான் ஊடுருவல் அதிகரித்து வருவதாக புலனாய்வுத் தகவல்கள் தெரியப் படுத்துகின்றன. அடிப்படையில் இணக கப்பாடோ சரியான கொள்கைவகுப்போ இன்றிய மன்மோகன்சிங் அரசு இந்தியாவை அதிகம் குழப்பத்திற் குள்ளாக்கும் போல் தெரிகிறது. பாகிஸ்தானுடன் பேசிக்கொண்டு தீவிரவாதத்தை அழிப்பது கடினமானதென்பது இந்திய ஆட்சியாளரின் கடந்தகால அனுபவமாகும். இதனை சற்றுமே புரிந்து கொள்ளாத நிலையிலிருப்பது போல் இந்திய மத்திய அரசு செயல்படுகின்றது. தீவிரவாதம் பாகிஸ்தானுடையதென்பது கடந்த ஐம்பது ஆண்டுகால அரசியலாகும்.

எனவே சுமூகத் தன்மையை பேணக் கூடியதாக அரசுகளின் மேல் தலைகள் காணப்பட்டாலும் புலனாய்வு மட்டப் போக்குகள் பனிப் போருக்கான யுத்திகளுடனேயே செயற்படுகின்றன. அதிலிருந்து இரண்டு நாட்டு மேல்நிலை வர்க்கமும் மாறவில்லை என்பதில் இந்தியத் தரப்பைக் காட்டிலும் பாகிஸ்தான் தரப்பு பலமாகவே உள்ளது.

எனவே இந்திய சுதந்திரம் பல ஆயிரக்கணக்கானவரை இழந்து பெறப்பட்டாலும் அடிமை நிலையிலிருந்து விடுபடாத சூழல் தொடர்வதுடன் ஆட்சியும் அதிகார அமைப்பு இந்தியர்களுக்குரியதல்ல என்பதே அடிமை நிலைக்கான காரணமாகும்.

மேற்கு விட்டுச்சென்ற அதிகாரமாதிரியையே இன்று கைக் கொள்ளும் இந்தியா தமக்கென சுதேச மாதிரியை புதிதாக உருவாக்கவும் இல்லை. மேற்கு ஆக்கிரமிப்பதற்கு முன்பிருந்த மாதிரியின் சிறப்புக்களை சேர்த்துக் கொள்ளவும் இல்லை. இதுவே இந்திய சனநாயகம் சிதைவடைந்துபோகற் காரணமாகும். மட்டுப் படுத்தப்பட்ட சனநாயகம் மட்டுப்படுத் தப்பட்ட மாற்றத்தையே பிரஜைகள் மீது ஏற்படுத்தும்.

எனவே சனநாயக மாதிரிகளின் பலவீனங்களை சனநாயக கோட்பாடாகவோ, நடைமுறையாகவோ கொள்ளாது. அதனை சுதேசத்திற்கு ஏற்பவும், வாழ்விற்கும் பொருளாதாரத்திற்கும் ஏற்பவும் உருவாக்குவதே சிறந்தது. பாதுகாப்பான ஆட்சியை உருவாக்க வேண்டுமாயின் பின்தங்கிய நாடுகள் பின்பற்றும் சனநாயகக் கோட்பாடுகளை மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும்.


வன்னி நெட் கபே
Vanni Net Cafe
உங்கள் அலுவலகத்திற்கு / வீட்டிற்கு வருகின்றது
- நினைத்த நேரத்தில் இன்டநெட் ஈ-மெயில் பாவிக்கும் வசதி.
- 24மணி நேர இணைப்பு.
- சிறந்த பாராமரிப்பு, திருத்த சேவை.
- வேகம் 64 Kbps, 128Kbps, 256 Kbps, 1MB, 2 MB.
- வாகனங்களில் பயன்படுத்தக்கூடிய விஷேட அன்ரனாக்கள் மூலம் பயணங்களின் போது இன்ரநெட் பாவனை.
- நகரைச் சுற்றி 5K.M சுற்றளவிற்கு நடமாடும் இன்ரநெட் வசதி.

அரச அலுவலகங்கள், அரச சார்பற்ற, சர்வதேச(NGO,INGO), தனியார் நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்




கணினி மையம்
TCC
யாழ் சாலை, கிளிநொச்சி (கந்தசாமி கோயிலுக்கு அருகில்)

# எதென்ஸ் கனவுகளின் களம்




ஒலிம்பிக் உலக விளையாட்டு வீரர்களின் கனவு இது. பதக்கம் பெறுவதைவிட பங்கேற்பதே மிகப் பெரிய கௌரவமாக கருதப்படும் களம். நவீனகால விளையாட்டுக்களில் பணம், பணம் மேலும் பணம் என்று கொட்டுகிறது.

ஆனாலும் அதிலெல்லாம் இல்லாத சிறப்பு ஒலிம்பிக்கில் இருக்கின்றது. ஒலிம்பிக்வீரர் என்று தனது பெயரும் உச்சரிக்கப்பட வேண்டும். என்பது ஒவ்வொரு விளையாட்டு வீரனதும் இன்பக் கனவாக கண்டிப்பாக இருக்கும்.

இந்த நிலையில் கிரேக்க நாட்டில் பிறந்து உலகமெல்லாம் சுற்றிவளர்ந்து தனது 28ஆவது அகவையை தனது பிறந்த மண்ணில் கொண்டாடுகின்றது.

16நாட்கள் நடைபெறவுள்ள மிகப்பெரும் விளையாட்டு திருவிழாவில் 202நாடுகளை சேர்ந்த 11500 வீர வீராங்கனைகள் தமது பலப்பரீச்சையை நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

கடந்த 13ஆம் திகதி ஒலிம்பிக் வரலாற்றில் என்று மில்லாதவாறு கிரேக்கத்தின் பாரம்பரிய கலைநிகழ்வுகளுடன் பிரமாண்டமான ஆரம்ப வைபவத்துடன். நவீன ஒலிம்பிக் போட்டிகளின் பூர்வாங்க போட்டிகள் ஆரம்பமாகின.

நவீன ஒலிம்பிக்கில் பதக்க பட்டியலில் முன்னணி வகிக்கப் போகும் நாடு எது? முதல் தங்கத்தை கைப்பற்றப்போகும் வீர,வீராங்கனைகள் யார்? என்ற சுவாரஸ்யமான வரலாற்று தகவலுக்காக விளையாட்டு ரசிகர்கள் நாடுகளின் தலைவர்கள், என்று எதிர்பார்ப்புகள் வலுப்பெறத் தொடங்கிவிட்டது.

நாட்டுக்காக ஒரு பதக்கத்தை பெற்றாலே கௌரவமாக கருதப்படும் நவீன ஒலிம்பிக்கின் முதல் பதக்கத்தை கைப்பற்றப்போவது ஆசியாவா,ஐரோப்பாவா, ஆபிரிக்காவா, அமெரிக்காவா என்று மேலும், கேள்விகள்.

இதற்கிடையில் ஒலிம்பிக்கின் ஜாம்பவான்களாக கருதப்படும் அமெரிக்கா, ரஷ்யா, அவுஸ்திரேலியர்களை பின்னுக்கு தள்ளி சீனா நவீன ஒலிம்பிக்கில் தனது பதக்க வேட்டையை தங்கப்பதக்கத்துடன் ஆரம்பித்தது. இது ஜாம்பவான் நாடுகளுக்கு அதிர்ச்சியை அளிக்க வலுக்குறைந்த நாடுகள் ஒரு பதக்கத்தை என்றாலும் பெறுவோமோ என்ற ஏக்க போராட்டம் என்பன ஒலிம்பிக்போட்டியின் மகத்துவத்தன்மையை அனைவரும் உணரப்போதுமானது.

வீரர் ஒருவர் பதக்கம் ஒன்றை கைப்பற்றி விட்டால் அந் நாட்டின் தேசிய வீரராகி விடுகின்றார்.


இத்தனை மகத்துவம் மிக்க ஒலிம்பிக் திருவிழா மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

சாதனைகள் புதிய வீரர்களின் பிரவேசம் மயிர்க்கூச்செறியும் நிகழ்வுகள் போட்டித் தன்மையில் விறுவிறுப்பை ஒரு புறம் ஏற்படுத்த பதக்கப் பட்டியலில் ஆசிய நாடான சீனா அசைக்கமுடியாத பலத்துடன் முன்னிலை வகிக்கின்றது.

சுவட்டு நிகழ்வுகள், குழுநிகழ்வுகள் முற்று முழுதாக ஆரம்பமாகாத நிலையில் சீனா, அவுஸ்ரேலியா, ஜப்பான் அணிகள் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை பெற்றுள்ளன.

மேற்படி போட்டிகளில் முன்னர் பலமான அணிகளாக திகழும் அமெரிக்க ரஷ்ய அணிகள் தமது ஆதிக்கத்தை அவ்வளவாக செலுத்தாத நிலையில் ஆசிய நாடான சீனா, அவுஸ்திரேலிய அணிகள். தமது ஆதிக்கத்தை வலுவாக பிரயோகித்து வருகின்றன.







நமது அண்டைய நாடான இந்தியா பதக்கம் பெறுவதற்கு பெரும் போராட்டமே நடத்தி வருகின்றது. அது ஐந்தாம் நாளில் ஒரு வெள்ளிப் பதக்கத்தை பெற்று ஆறுதலடைந்துள்ளது.

சிறிலங்காவை பொறுத்தவரை சிட்னி ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப் பதக்கத்தை பெற்றுக் கொடுத்த சுசந்திகா ஜெயசிங்க போட்டியிடாத நிலையில் பதக்கத்துக்காக ஏங்கித் தவிக்கின்றது.

எனவே நவீன ஒலிம் பிக் போட்டியில் முன்னிலை வகிக்கும் சீனா தொடந்தும் முன்னிலைபெற்று முதல் இடத்தை பெறுவது ஆசிய நாட்டவரான நமக்கும் பெருமைதானோ?




### ஒலிம்பிக் இலச்சினை



2004ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளுக்காக வடிவமைக்கப்பட்ட ஒலிம்பிக் கொடியில் **Emblem** எனப்படும் இலச்சினையாக இடம் பெற்றிருப்பது ஒலிவ் இலைகளிலான கிரீடம் போன்ற வட்ட வடிவமாகும்.

இந்த இலச்சினையானது புராதன ஒலிம்பிக்கின் பாரம்பரியத்தை உணர்த்தும் ஒரு அம்சமாகும்.

ஒலிம்பிக்கின் அடிப்படைத் தத்துவங்களான பாரம்பரியம், கொண்டாட்டம், சகோதரத்துவம், கருணை என்பனவற்றையும் இந்த இலச்சினை குறிக்கின்றது.

பண்டைக்கால ஒலிம்பிக்கில் வெற்றிபெற்ற வீரர்களுக்கு தலையில் கிரீடமாக சூடப்பட்டதும் பரிசுகளாகவழங்கப்பட்டதும் இந்த ஒலிவ் இலைகளேயாகும். மேலும் இந்த இலச்சினைக்கு கீழே ஒலிம்பிக் இடம்பெறும் இடமான எதென்ஸ் ஆண்டும் குறிப்பிடப்பட்டுள்ளன. அதற்கு



கீழே ஐந்து கண்டங்களையும் குறிக்கும். வர்ண வளையங்கள் ஐந்தும்(ஒலிம்பிக்சின்னம்) இடம்பெற்றுள்ளது.

**கண்ணன்**



வணக்கம் பிள்ளையள்! என்ன மாதிரிப்பாடுகள் போகுது? நானும் வாறகிழமை வன்னிக்குத் திரும்புவோமெண்டு பார்க்கிறன். இஞ்சை எங்கையாவது தெரிஞ்சஇனசனத்திட்டை போறதெண்டால் உந்தத் தொடர்நாடகங்கள் ஒண்டும் இல்லாத நேரம் பார்த்துத்தான் போகோணும். தொடர்ந்து கறண்ட் இருக்கிறதாலை இந்தியாவை நாசமாக்கிய சணலுகள் எல்லாம், இஞ்சை எங்கட சனத்தையும்கெடுத்துக்கொண்டிருக்கிது. எங்கையாவது தெரிஞ்சதுகள் வீட்டுப்பக்கம் போனால் குடிக்க ஏற்கனவே கரைச்சு வைச்சிருக்கிற யூஸைத்தந்து விட்டு, ரி.வியை ஆவெண்டு பார்த்துக்கொண்டிருக்கிதுகள். ஏதோ தங்கட சொந்த வீட்டுப்பிரச்சினை மாதிரி அதைப்பற்றித்தான் ஆக்களெல்லாரும் சீரியஸாக் கதைச்சுக் கொண்டிருப்பினம். உப்பிடித்தான் அண்டைக்கொரு வீட்டை போன நேரத்தில, உடனே வெளிக்கிடவும் ஏலாது எண்டிட்டு, ஏதோ பக்தி நாடகம் எண்டு சொன்னாங்கள். அப்ப நல்ல விசயமா இருக்குமெண்டிட்டுப்பார்த்தன். அதிலை பாருங்கோ! பதினெண் சித்தர்களிலை தலைமையான ஒருத்தர், ஒரு தகப்பனிட்டைப் போய் தங்களின்ரை வாரிசைச்சுமக்கிறதுக்காக அவற்றை கன்னி கழியாத மகளைத்தானம் கேக்கிறார். அதுக்கு அந்தச்செம்மரி பெரும் பேறெண்டு சொல்லி ஆனந்தக் கண்ணீர் மல்கிக்கொண்டு மகளைக்கொடுக்குது. நவரச நாயகி எண்டு பேரெடுத்த தமிழக நடிகை ஒருத்தியின்ரை கொம்பனி தான் இதை எடுக்கிது. எட! சித்தர்மார் சொன்ன சிறப்பான கருத்துக்களைப் பற்றி ஒரு மண்ணாங்கட்டியும் தெரியாட்டி, ஏன் உந்த உதவாத புத்தி உப்பிடிப் போகோணும்! எனக்குப்பிடிச்ச சிவவாக்கியர் தொட்டு எல்லாச் சித்தர்களும் எவ்வளவு அருமையாக கருத்துக்களைச் சொல்லியிருக்கினம் அவையின்ரை பேரைப்பாவிச்சு உப்பிடிச்சீரழிவுக் குப்பையளைப் பரப்பிறதுக்கு திராவிட விடிவெள்ளி, அறிவொளிச்சிகரம் எண்டெல்லாம் தங்களைச் சொல்லிக் கொள்ளிற ஆக்களின்ரை ரி.வி. சணல் தான் கைகொடுக்குது. உதுகளையும் நாடகமெண்டு மதிச்சுப்பார்க்கத் துடிக்கிற எங்கடை பெண்டுகள் உப்புத்தூள் பாவிச்சுத்தான் சமைக்கிறவையோ எண்டு எனக்கு சந்தேகம் பாருங்கோ! உந்த மகளிர் சங்கங்களை எல்லாம் பார்க்க, மண்டை வெடிக்கிது எனக்கு!




உருப்படியா ஏதாவது செய்யலா மெல்லே!

இந்தியாவைப்பற்றிக்கதைக்கேக்க தான் இன்னுமொரு முக்கியமான விசயம் எனக்கு ஞாபகம் வருகுது. 2,3 மாதத்துக்கு முன்னால எங்கட அயல்நாட்டுக்கார தூதுவர் எங்கட தமிழ் ஊடகங்கள் மேலை எரிஞ்சு விழுந்தவர், உங்களுக்கு ஞாபகம் இருக்கும்.

தாங்கள் தமிழ் மக்களில சரியான விருப்பம். நல்லெண்ண நடவடிக்கையளாக அரசாங்கத்துக்குத் தாங்கள் செய்யிற அத்தியாவசிய உதவியளை தமிழ் ஊடகங்கள் தேவையில்லாம கண்டபடி விமர்சிக்சினம். உதையெல்லாம் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க மாட்டோம். பொறுப்பில்லாத தமிழ் ஊடகங்கள்! எண்டெல்லாம் கனக்க கத்தினவர்! ஆனாப்பாருங்கோ எங்கட பத்திரிகைக்காரரும் சும்மா இல்லை! உந்த வெருட்டுகளுக்குப் பயந்து காலடியிலை விழுற ஆட்களில்லை அவையள்! சமாதான காலத்திலை அதற்கு முரணான வகையில சிறிலங்கா ராணுவத்துக்கு பாரிய உதவியளைச் செய்து, புலியளின்ரை பலத்தைக் குறைக்கிறதுக்காக தாங்கள் செய்யிறதுகள், எங்களுக்குத் தெரியாதெண்டு நினைச்சினமே! நவாலிப்படுகொலை, நாகர் கோவில்ப்படுகொலை எண்டு எத்தினை இஞ்சை நடந்திச்சு! பக்கத்திலை உதுகள் இருந்தததானே ஒரு நாடெண்டு! அப்பை எங்களைச் சாக விட்டது. இப்பை வந்து எங்களைக் கொல்லிற யுத்த விமானங்கள் சொகுசா நோகாமல் இறங்கி ஏறிறதுக்கு, பலாலியில 'கார்ப்பெற்' போட்டுக் குடுக்கப்போகினமாம்! அப்பதானே நாளைக்கு அவன் சுகமா எங்களைக் குண்டு போட்டுக் கொல்லலாம். அது மட்டுமே '95 ஆம் ஆண்டு லட்சம் லட்சமாய் இடம் பெயர்ந்து வந்து நாங்கள் பட்ட கஷ்ரத்தை ஆராலதான் மறக்க முடியும்! எங்களுக்கு ஆதரவா கதைச்ச ஒரு சில உணர்வாளரையும் பிடிச்சு உள்ளுக்குள போட்ட நாடெல்லே உது! சிறிலங்காவிலை வெள்ளப் பெருக்கு வந்த நேரம் பல்லாயிரம் ஆண்டுகளா இருக்கிற நட்பு, அது இதெண்டு துடிச்சுப்பதைச்சுக்கொண்டு [illegible]ய் உதவி செய்திச்சு, கஷ்ரப்படுற நேரத்தில உதவி [illegible]செய்யிறது நல்லது தான்! ஆனா நாங்களும் மனுசரெ[illegible]லே!எங்கட ஊருகளை ஆக்கிரமிச்சு பள்ளிக்கூடங்களிலை முகாம் போட்டுக் கொண்டு உயர் பாதுகாப்பு வலயம் எண்ட பெயரிலை அநியாயம் செய்யிற சிறிலங்காவின்ர நிலைப்பாட்டை ஆதரிச்சது தானே உதுகள்! அவையின்ர வல்லுனர் அட்வைஸ் சொல்லிறார் 'உயர் பாதுகாப்பு வலயத்தை ஒருக்காலும் விட்டுக்கொடுக்கக் கூடாதெண்டு! எட! நாங்கள் உவ்வளவு கஷ்ரப்பட்ட காலத்திலை சிங்களவனோடு சேர்த்து எத்தினை அநியாயங்களைச் செய்திச்சினம், கடற்பரப்பிலை எங்கட பிள்ளையளை அழிச்சிச்சினம்! ஓயாத அலைகள்-03 யாழ்ப்பாணத்தைப் பிடிக்கிற நேரம் ஆமிக்கு உயிர்பிச்சை கேட்டு வந்து அவையள் நிண்ட நிலுவை! எட நாங்கள் உதுகளுக்கு என்ன செய்தனாங்கள்! அழுங்குகள் மாதிரி உந்தப் புத்தி? எங்களை அழிக்கிறதுக்கு சிங்கள அரசாங்கத்துக்குக் கொடுக்கிற உதவியளை இந்தியாவில உள்ள பொதுசனத்துக்கும் கொடுத்தால் நாங்கள் இண்டைக்கும் எங்கட சகோதரங்களா நினைக்கிற அவையள் பிரயோசனப்படுவினமெல்லோ! இலவசச் சேலைக்காக நெரி பட்டுச்சாகிறதும், உயிரிழந்த விவசாயியளுக்கு நஷ்ட ஈடு கிடைக்கும் எண்டு நினைச்சு தற்கொலை செய்யிறதும் எவ்வளவு வேதனையான விசயங்கள்!


அதுகளையெல்லாம் விட்டிட்டு இஞ்ச வந்து எங்களை அழிக்கிறதுக்கு செலவிடுற உவையின்ரை போக்கு, நியாயமான சமாதானத்திற்கு எதிரானது பாருங்கோ! புலியள் தமிழ் மக்களின்ரை ஏகபிரதிநிதிகள் இல்லையாம்! அதைச் சொல்ல உவையள் ஆர்! எட! றோட்டால போற ஒருத்தரை மறிச்சு "உங்கட மனிசியை எனக்குப் பிடிக்கேல்லை. விவாகரத்து பண்ணுங்கோ!" எண்டு நான் சொன்னால் எவ்வளவு அபத்தமான முட்டாள் தனமானதாக அது இருக்குமோ, அப்பிடித்தானே இதுவும்! இப்பிடியான நிலைப்பாடுகளைத்தான் எங்கட பத்திரிகைகள் விபரிச்சு எழுதியிருந்தவை. அது அவையளுக்குச் சுட்டுப்போட்டுது! யாழ்ப்பாணப் பெரியாஸ் பத்திரியில செய்த மிருகத்தனமான அகோரக்கூத்தை நாங்கள் ஆர் தான் மறந்தனாங்கள்! உப்பிடி செய்யிற எல்லாத்தையும் செய்து போட்டு, ஒத்துக் கொள்ளுறதும் இல்லை, திருத்திக் கொள்ளிறதும் இல்லை எண்டால் என்னெண்டு சகிக்கலாம்! யாழ்ப்பாணத்தில வெளிவாற பத்திரிகை ஒண்டு நல்ல சூடாய் ஆசிரியர் பக்கத்திலை கொடுத்திருந்தது.

ஆனால் எங்கட இனத்துக்கே வெட்கமான விசயம் என்னண்டா பாருங்கோ! ஒரு பக்கத்தால எங்களை அழிக்கிறதுக்குக் கோடி கோடியா ஆமிக்கு உதவி செய்து கொண்டு மற்றப்பக்கத்திலை எலும்புத் துண்டுப்பிச்சையளை எங்கள் மத்தியிலை போட்டு COOL பண்ணிறதை,எங்கட ஒரு சிலர் உணராம இருக்கிறது தான். நாங்கள் தமிழரிட்டை ஒரு சில குணங்கள் இருக்குப் பாருங்கோ! முறைச்சுப பார்த்தால் மூண்டு மாசத்துக் கோவம், வாக்குவாதப்பட்டு அடிபட்டால் வம்சம் வம்சமா கதை கிதையே இல்லை. உரிய இடம் குடுக்காட்டி நல்லது கெட்டதுகளிலை கலந்து கொள்ள மாட்டினம். அதாவது ரோசம் கூடின ஆக்கள் நாங்கள்! எங்களுக்கு அநியாயத்து மேல அநியாயம் செய்து போட்டு அதைக்கோடிட்டுக் காட்டின எங்கட பத்திரிகையளைப் பேசிக்கொண்டு, மற்றப்பக்கத்தால 100 புத்தகங்கள், ஒரு பஸ், கச்சேரி செற்எண்டு எலும்புத்துண்டுகளைப்போட்டு, நியாயமா வரக்கூடிய சூடு, சொரணையள COOL பண்ணப்பார்க்கினம். அதுகும் கொழும்பில இருந்தபடி அவையள் விசிலடிக்க, எங்கட "முற்றும் துறந்தவர்கள்" உட்பட கொஞ்சப்பேர் அங்கை ஓடிப் போய், பேப்பருகளுக்கு 'ஈ...ஈ' எண்டு போஸ் குடுத்துப் போட்டு வந்திருக்கினம். தாங்கள் நாசமாக்கின எங்கட உயிருகளுக்கும், உடமைகளுக்கும் எண்டைக்காவது மன்னிப்புக்கேட்டவையே? கண்டறியாத இசைக்கருவியள்! நாளைக்கு தங்கட ஆதரவோட எங்கட சனத்துக்கு வரக்கூடிய இழவுகளுக்கு நீலாம்பரி வாசிக்கவே! எங்கட பள்ளிக்கூடப்பிள்ளையளைக் கொல்லுற குண்டுவீச்சு விமானங்களுக்கு பஞ்சணை அமைக்க விரும் பிற உவையின்ரை புத்தகப் பிச்சையள் எங்களுக்கு வேண்டாம்!

செய்த பாவங்களுக்காக மன்னிப்புக்கேட்டாக்கூட ஓரளவு பரவாயில்லை. அப்பிடியுமில்லை! எதையுமே எங்களால மறக்கேலாது, இருந்தும் மனம் திருந்தின ஆக்களை மன்னிக்கிற பக்குவம் எங்களுக்கிருக்கு.

சும்மா விலாசத்துக்குதான் முக்கியமில்லாத விசயங்களில ஏதோ பெரிய சூடு, சொரணை உள்ள ரோசக்காரர் போல எங்களை நாங்கள் காட்டிக்கொள்ளிறோம். அது அவசியமா இருக்கவேண்டிய, முக்கியமான கட்டங்களிலை ஆகலும் மலிஞ்சு சரியான CHEAP ஆகப் போறோம். இல்லாட்டி. நாங்கள் நாங்களா வாழிறதுக் காக சுந்திரத்தைச் சுவாசிக்கோணும் எண்டிற எங்கட விருப்பை, இருப்பை அழிக்க துணை போற வனிட்டை, கையேந்தி நிற்போமோ! இனியும் ஒண்டும் கெட்டுப்போ கேல்லை. சொல்லி எண்டாலும் சூடு வரட்டும், பரவாயில்லை. ஏனெண்டால் அப்பிடியும் வராட்டி அது என்னண்டு சொல்லிறதுக்கு என்னட்டை வார்த்தையளில்லை.

நான் மனசில பட்டதைச் சொன்னன். நீங்கள் என்ன நினைக்கிறியள்? நினைச்சுப்போட்டு இருந்தா, எனக்கெப்பிடி தெரியும்! விளங்குதோ நான் சொல்லிறது? சரி அப்ப நான் வாறன்!!




கல்வி என்பது தனி மனிதர்களின் வளர்ச்சிக்கு உதவுவதுடன், மக்களிடையே உள்ள சமூகத் தொடர்புகளை செப்பனிடுவதிலும் சமூக நலன் பேணுவதிலும் துணை செய்வது. இக்கல்வி பள்ளிகளில் ஒழுங்கு முறைப்படி அல்லது அரச பாடத் திட்டப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

ஆரம்பக்கல்வி தொடக்கம் உயர்தரம் வரை கல்வியை பள்ளிகளில் கற்றுக் கொள்ளக் கூடிய வசதிகள் வாய்ப்புக்களை ஏற்படுத்தி எல்லோருக்கும் கல்வி எனும் குறிக்கோளில் கற்றல் செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இலங்கையில் ஆரம்பக்கல்வி தொடர்பான பல பிரச்சினைகள் உள்ளன. குறிப்பாக எமது பிரதேசத்தில் கல்விக்கான வசதிகள் விரிவுபடுத்தலின் சமமின்மை, பௌதீகவசதியின்மை, போரினால் பாதிக்கப்பட்டு இடப் பெயர்வுகளோடு சிறுவர்களை ஆரம்ப வகுப்புகளில் ஏற்றவயதில் சேர்த்துக் கொள்ளாமை, இடைவிலகல் என்பன அதிகளவில் காணப்படும் ஒன்றாகும்.

ஆரம்பக் கல்வியைக் கற்பிப்பதற்கான பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் பற்றாக்குறை எனப்பல பிரச்சினைகளுக்கு மத்தியிலும் போர் அனர்த்தங்களின் வடுக்களைச்சுமந்த படியும் எமது மாணவர்கள் கல்வியைக் கண்போன்று காத்து வருகிறார்கள். இந்த நிலையில் ஆரம்பக்கல்வி கற்கும் மாணவர்கள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்காக தம்மை தயார்ப்படுத்துகின்றார்கள். மாணவர்களும் ஆசிரியர்களும் தம்விடா முயற்சிகளினால் சவால்களுக்கு முகம் கொடுத்து பரீட்சையைச் சந்திக்கிறார்கள்.

ஒரு போட்டிப் பரீட்சையான புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் ஒரு போட்டியாகவே காணப்படுகிறது. இப்பரீட்சையில் மாணவன் மட்டுமல்லாமல் ஆசிரியர் அவனுடைய பெற்றோர்களும் பல தேடல்களுடனான கல்வியைக் கற்று மாணவனுக்கு புகட்டுகின்றார்கள்.

இப்படி போட்டிக்கு தயார்ப்படுத்தப்பட்ட மாணவர்கள் பரீட்சையில் தோற்றி சிலர் சித்தியடைந்தும் பலர் அரசினால் தரப்படுத்தப்பட்ட புள்ளிகளைப் பொறாமையினால் பரிசில் திட்டத்துக்குள் அடங்காமல் போகின்றனர். இது வழமையானது.

இன்னொருபுறம் பரீட்சை மதிப்பீட்டு திணைக்களத்தினரின் பொறுப்பற்ற செயற்பாட்டினால் மாணவர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் மனமுடைந்திருந்த வேளையில் கல்லூரியின் அதிபரின் முயற்சியினால் கற்பித்த ஆசிரியரின் ஆலோசனைகளுடனும் சில மாணவர்களின் விடைத்தாள்களை மீள் பரிசீலனை செய்யுமாறு வற்புறுத்தி வேண்டுகோள் கடிதம் ஒன்று பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது. 2003இல் நடைபெற்ற பரீட்சைக்கு 05.08.04இல் திணைக்களத்தினரினால் பெறுபேறுகள் அனுப்பி வைக்கப்பட்டது. முன்பு மதிப்பீட்டுப் புள்ளி 81 புள்ளி பெற்ற மாணவி மீள்பரிசீலனையின் பின்னர் 119 புள்ளிகள் பெற்று பரீட்சையில் சித்தியடைந்த சம்பவம் மல்லாவி மத்திய கல்லூரியில் இடம்பெற்றுள்ளது.

திணைக்களத்தினரின் அசமந்தப் போக்கினால் பாடசாலைச் சமூகத்துக்குள் குறிப்பாக அதிபர், ஆசிரியர்களை, பெற்றார்கள், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள் போன்றோர் கடிந்திருப்பார்கள், அதிபர் ஆசிரியர்கள் மனமுடைந்திருப்பார்கள். இதனால் பாடசாலை சமூகத்தினருக்கிடையே விரிசல்கள் தோன்றி கல்வி பின்தள்ளப்படும் அபாயம் கூட நிகழ்ந்திருக்கலாம்.

எமது பிரதேசங்களைப் பொறுத்தவரை அதிபர்கள் ஆசிரியர்களின் கடின உழைப்பாலேயே கல்வி வளர்ச்சியடைந்து வருகின்றது. எந்த வித வசதிகள் இல்லாத போதும் அதிபர், ஆசிரியர்களின் அர்ப்பணிப்புச் செயற்பாட்டினால் அரசினால் மேற்கொள்ளப்படும் போட்டிப் பரீட்சைகளில் எமது மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வருகின்றனர். சிங்கள அரசின் திட்டமிடப்பட்ட தரப்படுத்தலுக்கு முகங் கொடுக்கும் எம் மாணவர்கள் இன்று திணைக்கள அதிகாரிகளின் பொறுப்பற்ற செயற்பாடுகளினால் இன்று பெறுபேறுகளிலும் பின்னடைவை எதிர் நோக்குகின்றனர். இச்செயற்பாடானது எமது பாடசாலைச் சமூகத்தை குழப்புவதாகவும் மாணவர்களை உளரீதியாக பாதிப்படையச் செய்வது மாகும். தவறுகள் திருத்தப்பட வேண்டியவை திருந்துவார்களா?

பா.றுஜினா.

# இழப்புகள் குறையவில்லை இன்னும்தான் தொடர்கிறது..

சமாதான சூழல் தொடங்கிய பின்பு குறிப்பாக A-9 சாலை திறக்கப்பட்டதன் பின்பு சாலை விபத்துக்களுக்கும் அதனூடாக உயிரிழந்த மக்களுக்கும் குறைவே இல்லை.

மீண்டும் மீண்டும் விபத்து பற்றி எழுதி ஒரு விழிப்பைக் கொண்டு வரவேண்டும் என்ற அளவுக்கு இது தொடர்கிறது.

போராட்ட காலத்தினுள் வாழ்ந்த மக்கள் எவ்வாறு அவ்வப்போது குண்டு வீச்சினாலும் எறிகணை வீச்சினாலும் கொல்லப்பட்டார்களோ அது போலவே இந்த சமாதான சூழலிலும் விபத்துக்களால் மக்கள் கொல்லப்படுகின்றார்கள்.

எனவே போராட்ட காலத்திலும் சரி சமாதான சூழல் என்று சொல்லப்படுகிற இந்த சூழலிலும் சரி மக்களின் உயிரிழப்புகளில் மாற்றம் ஏற்படவில்லை.

போராட்டக் காலத்தில் பாடசாலைக்குச் சென்ற பிள்ளை வீடு வரும் வரையில் ஒரு தாயின் மனதில் எவ்வாறானதொரு அங்கலாய்ப்பு இருந்ததோ அவ்வாறானதொரு அங்கலாய்ப்பு இப்பொழுதும் இருக்கிறது.

இதற்கெல்லாம் பாதை திறந்த பின்பு அதிகரித்த வாகன போக்குவரவு பிரதான காரணமாகின்றது. A-9 நெடுஞ்சாலை அதன் தரத்திற்கேற்றவாறு இன்னும் சீராக புனரமைப்புச் செய்யப்படவில்லை. பல இடங்களில் இன்னும் பள்ளங்கள் காணப்படுகின்றன. வேகமான வாகன ஓட்டங்கள் பள்ளங்களில் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகின்றன உதாரணமாக கரடிப்போக்குச்சந்திக்கும் பரந்தனுக்குமிடையில் இடம்பெற்ற பாரிய விபத்துக்கள் சில இந்த பள்ளத்தின் காரணமாகவே இடம்பெற்றிருந்தன. A-9 சாலையில் அதிகரித்த வாகன ஓட்டங்களுக்கு முன்னர் போன்று தொடருந்து சேவை இல்லாதலும் ஒரு காரணமாகிறது.

தொடருந்து சேவை இருப்பின் அதிகளவான மக்களும் பொதிகளும் தொடருந்து சேவையூடாக நகர்த்தப்பட்டு விடும்.



ளுக்கான அடிப்படை காரணங்கள் கண்டறியப்படவேண்டும். இதனூடாக விபத்துக்கள் குறைக்கப்பட வேண்டும் இது தான் தற்போது மக்களின் வேண்டுகையும் என்பதை சுட்டிக்காட்டப்பட வேண்டிய தேவை எழுகிறது.

விபத்துக்கள் அதிகரிக்கும் போதுதான் சாரதிகளின் தரங்களையும் திரும்பிப் பார்க்க வேண்டிய சிந்தனை எழுகின்றது.

சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமலேயே பலர் வாகனங்களை செலுத்துவதாகவும் கூறப்படுகிறது. எனவே A9 சாரதிகளின் தரங்களை நிர்ணயம் செய்யும் வழிவகைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும் சுட்டிக் காட்டப்படுகிறது.

விபத்துக்களுக்கு வீதிகளின் சீரின்மையும்

இவ்வாறு சீரற்ற முறையில் தற்காலிகமாக வீதிகள் செப்பனிடும் போது அதனால் கூட விபத்துகள் அதிகரிக்கின்றன.

எனவே வீதி விபத்துகளுக்கு வீதியை புனரமைக்கும் ஒப்பந்தகாரர்களும் ஒரு காரணமாக அமைகின்றார்கள்.

அடுத்ததாக வீதி ஒழுங்குகளுக்கு அமைவான சில நடைமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. உதாரணமாக பிரதான சந்திகளில் சுற்றுவட்டம் (Round Board) அமைக்க வேண்டிய தேவையும் இருக்கிறது. வாகனங்களின் மக்களின் காலை மற்றும் மாலை நேர போக்குவரவின் போது இவ்வாறான சுற்றுவட்டங்கள் இன்றி மிதிவண்டி பயணிகள்,

ஆனால் தொடருந்து சேவையின் அவசியம் தற்போது தேவையான ஒன்றல்ல. இருப்பினும் அதிகரித்த வாகன ஓட்டங்களுக்கு ஏற்ப A-9 சாலையின் போக்குவரவு ஒழுங்கு நடைமுறைகளும் அந்த நடைமுறைகளுக்கு ஏற்ப வீதி அமைப்பும் தற்போது மிக அவசியமாகிறது.

வாகன விபத்துக்களை கட்டுப்படுத்த தமிழீழ காவல் துறையினர் அதிக உழைப்புடன் கடமையில் ஈடுபடுகின்றனர். ஆனால் அதனையும் மீறி தொடர்ந்தும் விபத்துக்கள் தொடர்கின்றன.

எனவே விபத்துக்க

கூட.

A-9 சாலையில் ஓடுகின்ற வாகனங்களில் அதிபயங்கர யமனாக கருதப்படுவது மண் ஏற்றி பறிக்கும் டிப்பர் ரக வாகனங்கள். ஏனென்றால் மிகப் பயங்கரமான கோரக் கொலைகளெல்லாம் இந்த டிப்பர் ரக வாகனங்களினாலேயே நிகழ்கின்றன நிகழ்ந்திருக்கின்றன.

இந்த வாகனங்களின் வேகத்திற்கு ஏற்ப A-9 சாலையின் தற்போதைய நிலை இல்லை. எனவே தான் A-9 சாலை அதன் தேவைக்கேற்ப தரத்திற்கேற்ப இன்னும் புனரமைப்புச் செய்யப்படவில்லை.

ஒரு காரணம் தான். உதாரணமாக கிளிநொச்சி டிப்போ சந்தியிலிருந்து கனகபுரம் நோக்கிச் செல்லும் வீதி, அண்மையில் தான் தார் ஊற்றி செப்பனிடப்பட்டது. அதன் தற்போதைய நிலையை பார்த்தால் கிளறுப்பட்டு மீண்டும் குன்றும் குழியுமாகக் காட்சியளிக்க தொடங்கியிருக்கின்றது.

வீதிகளை செப்பனிடுவதற்கென முன்வரும் ஒப்பந்தகாரர்களின் அதிக இலாபத்திற்காக வீதிகளை தற்காலிகமாக செப்பனிட்டால் போதும் என்ற நிலையில் இருந்து மாற வேண்டும்.

உந்துருளி பயணிகள் போன்றோர், சிரமங்களை எதிர்நோக்குவதை காணக்கூடியதாக உள்ளது. இங்குதான் காவல்துறையினரின் அதிகரித்த சேவை எதிர்பார்க்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் A9 வீதி விபத்துக்களை இனியும் கூட முழுமையாகத் தடுத்து விடுவார்கள என்று மக்கள் நிதானங்களூடாக வேனும் இதனை ஓரளவு தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்பதை மட்டுமே இந்த வீதி விபத்துக்கள் தொடர்பாக ஒரு ஆலோசனையாக கூறமுடியும்.

— தேவி —

## வெள்ளிநாத வாசகர்களிடமிருந்து படைப்புக்களை எதிர்பாக்கின்றோம்

*சிறுகதை*
*கவிதை*
*பிரதேச கட்டுரைகள்*
*விழிப்புணர் வை ஏற்படுத்தக் கூடிய நகைச்சுவை துணுக்குகள்*

என உங்களால் எமது வெள்ளிநாதத்தை அலங்கரிக்கும் வகையில் பல்வேறு ஆக்கங்களையும் எதிர்பார்க்கின்றோம்.

மேலும்புலம்பெயர்வு உறவுகளே நீங்களும் உங்கள் படைப்புக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்.

படைப்புக்களை எழுதுபவர்கள் தவறாது தெளிவாக உங்களோடு தொடர்வு கொள்ளக்கூடியதாக முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி என்பனவற்றையும் எமக்கு எழுதுங்கள்.

உங்களுக்கான எமது முகவரி:

ஆசிரியர்,
வெள்ளிநாதம்,
ஈழநாதம்,
யாழ். சாலை, கிளிநொச்சி,
மின்னஞ்சல் : Weekly @eezhanatham. Com


நவீன மாதிரியான சொனி எறிக்சன் கைத்தொலைபேசியை இப்பொழுது

SONY ERICSSON

SIEDLES SONY இடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள்.

SONY




வவுனியாவில் "கிங்பறட்ஸ்" இடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்
தொலைபசி 024-2223123

சீடில்ஸ் உத்தரவாத பத்திரத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

ஏக விநியோகஸ்தர் சீடில்ஸ்

01. சொனி காட்சியறை 12/A டெனிஸ்விலா அவன்யு கொழும்பு–4 தொலைபேசி எண் 2591201
02. சீடில்ஸ் 54 (லிபர்ட்டி பிளாஸா) கொழும்பு – 3 தொலைபேசி 2573345
03. சீடில்ஸ் 427 காலி வீதி களுத்துறை வடக்கு தொலைபேசி 034 2225540
04. சீடில்ஸ் 1503 டேவிட் பிளேஸ் கொழும்பு –7 தொலைபேசி 2697962

சி-10067



# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 02**

**பகுதி -10**

என்ன முணுமுணுக்கிறான் என்பது எனக்குப் புரியவில்லை. அவன் சொன்னதை திரும்பச் சொல்லும்படி நானும் கேட்கவில்லை. விளையாடும் அறை மண்டபத்தின் முடிவில் இருப்பதாக மட்டும் நான் சொன்னேன். அவனது இந்த ஆரம்ப பதில் வினையால் எனக்குள் ஆர்வம் ஒன்று துளிர் விட்டது. வகுப்பறையை விட்டு முன்பின் தெரியாத என்னுடன் கிளம்பி வந்து விட்டான். திரும்பிக் கூட அவன் பார்க்க வில்லை. அவன் என் கையை பிடித்திருந்த போது அவனது கை எனது கையை மிக இறுகப் பற்றியிருந்தது



## முடிபனிக்குள் ஒரு தேடல்


**மொழியாக்கம் :- வி.பி.யோசப்**

எனக்கு உணர்வாகியது. அவனுக்குள் ஒரு பதட்டம் தெரிந்தது. எனினும் அவன் என்னுடன் போக உடன்பட்டதே ஒரு வியப்பூட்டும் விடயமாகத்தான் இருந்தது.

மண்டபத்தின் முடிவில் பின்புற படிக்கட்டுகளின் கீழே இருந்த ஒரு சிறிய அறையே விளையாட்டு வழி சிகிச்சை அறையென ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அந்த அறை மனதைக் கவர்வதாக இருக்கவில்லை. இதமான முறையில் வர்ணம் தீட்டப்படாலும் அலங்கரிக்கப்படாமலும் இருந்த அந்த அறை ஒரு வகையில் கிளர்ச்சியற்ற தோற்றத்தையே தந்து கொண்டிருந்தது. அந்த அறை கொண்டிருந்த ஒடுக்கமான ஒரு பலகணி ஊடாக சூரிய ஒளி உள்ளே கசிந்து கொண்டிருந்தது. எனினும் மின் விளக்குகள் போடப்பட்ட பின்னரும் ஒட்டு மொத்தமாக ஒரு சோகமயமான விளைவே அங்கு நிலவிக் கொண்டிருந்தது. அதனுடைய சுவர்களுக்கு அழுக்கான மஞ்சள் வர்ணம் பூசப்பட்டிருந்தது. அங்கும் இங்குமாக கழுவிவிடப்பட்ட கறைகள் தெரிந்தன. இந்தக் கறைகளைச் சூழ 15 எஞ்சிய வர்ணம் மேற்பூச்சின் கரகரப்பான மேற்பரப்பின் மீது படிந்திருந்தது. தரையின் மீது மங்கலான மண்ணிற லினோலிய விரிப்பு விரிக்கப்பட்டிருந்தது. அதை வேண்டா வெறுப்பாக தேய்த்துச் சுத்தம் செய்திருப்பதன் அடையாளமாக அவசர அவசரமாகத் தேய்த்து தேய்த்து இழுத்த ஓரிரு கோடுகள் படிந்திருந்தன. ஈரமான களிமண், ஈரமான மணல், பூஞ்சணம் பிடித்த நீர் வர்ணங்களின் மணங்கள் சேர்ந்து ஒருவகை மூக்கை அரிக்கும் மணம் அங்கே எழுந்துகொண்டு இருந்தது.

மேசையில் சிலவும், தரையில் சிலவும், அறையில் சுற்றிவர இருந்த றாக்கைகளில் சிலவும் எனக் விளையாட்டுப் பொருட்கள் பரவிக்கிடந்தன. தரையில் ஒரு பொம்மை வீடு இருந்தது. அந்த வீட்டினுள்ளே தளபாடங்கள் வைக்கப்பட்டிருந்தன. பொம்மை வீட்டி முன்னால் சிறிய பொம்மைகளால் ஆன குடும்பம் ஒன்று தரையில் கிடந்தது. தாய், தந்தை, மகன், மகள் பொம்மைகள் குவித்து வைக்கப்பட்டிருந்தன. வேறு சிறிய பொம்மைகள் அண்மை லிருந்த திறந்த பெட்டியொன்றில் காணப்பட்டன. ரப்பராலான மிருகங்கள் சிலவும் காணப்பட்டன. ஒரு குதிரை, ஒரு சிங்கம், ஒரு நாய், ஒரு பூனை, ஒரு யானை, ஒரு முயல் என்பன அங்கே காணப்பட்டன. சில விளையாட்டுக் கார்களும், விமானங்களும் கூட அங்கே இருந்தன. ஒன்றுடன் ஒன்றைப் பொருத்தி பொருட்களை உருவாக்குவதற்கான கட்டுமானத் துண்டங்கள் கொண்ட ஒரு பெட்டியும் தரையில் இருந்தது. மணல் நிறைந்த பெட்டியிலே தகரத்திலான சட்டிகள், கரண்டிகள், கோப்பைகள் இருந்தன. மேசை மீது ஒரு சாடியிலே களிமண் இருந்தது. வரையும் பலகையிலே கடதாசி பொருத்தப்பட்டு வர்ணங்களும் வைக்கப்பட்டிருந்தன. றாக்கை ஒன்றில் நீர் நிரப்பப்பட்ட சூப்பிப்போத்தல் இருந்தது. பழந்துணிகளால் உருவாக்கப்பட்ட பெரிய பொம்மை கதிரையொன்றில் அமர்ந்திருந்தது. ஒரு மூலையிலே காற்று நிரப்பப்பட்ட ரப்பர் உருவம் ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது. அதனைக் கீழே தள்ளிவிட்டால், அது மீண்டும் நேரான நிலைக்கு மீளக்கூடிய விதத்தில் அதன் அடிவாரத்தில் எடையூட்டப்பட்டிருந்தது. பொம்மைகள் கட்டுறுதியான முறையில் உருவாக்கப்பட்டிருந்தாலும் அவை முரட்டுத்தனமாகப் பயன்படுத்தப்பட்டவையாக, தேய்ந்து போய்க் காணப்பட்டன.

பிள்ளைகளின் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தக்கூடிய எதுவும் அந்த அறையில் காணப்படவில்லை. தொட்டால் நொருங்கிப் போய்விடக் கூடியவையாகவோ, தொடக்கூசும் அளவுக்கு சிறப்பானவையாகவோ எதுவும் அந்த அறையில் இருக்கவில்லை. அங்கே தமது நேரத்தைச் செலவிடக்கூடிய பிள்ளைகளில் இருக்கும் ஆளுமைகளை வெளிப்படுத்த உதவக்கூடிய இடவசதிகளும் பொருட்களுமே அந்த அறையில் காணப்பட்டன. அங்கு பெறப்படும் அனுபவங்களின் ஆக்கக்கூறுகள் அந்த அறையை ஒவ்வொரு பிள்ளைக்கும் வெவ்வேறான முறையில் தனித்துவமான ஒரு இடமாக ஆக்கி விடும். இங்கே ஒரு பிள்ளை, பழைய ஒவ்களுக்குப்



பதிலாக அமைதியைத் தேடலாம். ஏதோ ஒரு கணத்திற்கு கவரப்பட்ட சுயத்தில் கண்டு கொள்ளப்பட்டவற்றை கத்திச் சொல்வதன் மூலம் தங்களது நிச்சயமற்றதன்மைகள், கவலைகள், பயங்கள் என்ற சிறைகளிலிருந்து விடுபடலாம். இந்த அறைக்குள் எல்லாவகை உருவங்கள், ஒலிகள், வர்ணங்கள், நகர்வுகளின் தாக்கங்களைக் கொண்டுவந்து தான் கையாளக் கூடிய அளவுக்குச் சிறிதாக்கப்பட்ட தனது உலகத்தை அவன் மீளஉருவாக்கிக் கொள்ளலாம்.

நாங்கள் இருவரும் அந்த அறைக்குள் நுழைந்த போது "இந்த விளையாட்டு அறையில் நாங்கள் ஒரு மணித்தியாலத்தைச் செலவிடுவோம். நாங்கள் இங்கே வைத்திருக்கும் பொம்மைகளையும் பொருட்களையும் நீங்கள் பாருங்கோ. என்ன செய்யப் போகிறீங்கள் என்பதையும் நீங்களே முடிவுசெய்யுங்கோ" என்று கூறிவிட்டேன்.

(தொடரும்....)

# மறக்கப்பட்ட ஒரு வீரனும், மறைக்கப்பட்ட அதன் பின்னணியும்



இந்திய சுதந்திரப் போராட்டத்தில் நேதாஜி-சுபாஸ் சந்திரபோஸ்

1944இல் பர்மாவுக்குச் சென்றார் சுபாஷ், அங்கு நிலை கொண்டிருந்த இந்தியத் தேசிய ராணுவத்தின் தென்கிழக்காசிய அணியினர் அதே ஆண்டு பெப்ரவரி மாதம் ஆங்கிலப்படைகளை எதிர்த்து மூர்க்கத் தனமாகப் போரிட்டார்கள். பிரிட்டிஷ் படைகளிலிருந்த இந்தியர்கள் தங்கள் சோதரர்கள் பக்கம் சாய்ந்தனர். இக்கட்டான நிலையில் பிரிட்டன் வான்தாக்குதல்களை, அதிகரித்து, இந்தியப் படைகளின் தற்காலிக வெற்றிகளை முறியடித்தது: கட்சி மாறிய இந்தியர்களின் வெற்றிடத்தை நிரப்ப ஆபிரிக்கர்களைக் கொண்டு வந்து குவித்தது.

இப்படியாகத் தாக்குதல்கள் தொடர்ந்திருந்த வேளையில் உலக அரசியலில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. யேர்மனியும் அதன் தொடர்ச்சியாக யப்பானும் 1945ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் அமெரிக்க நேசநாட்டுப்படைகளிடம் மேலும் போரிட முடியாமல் தோல்வியுற்றன. இது இந்திய தேசிய ராணுவத்திற்கு இக்கட்டான நிலையைத் தோற்றுவித்தது. இதே மாதம் யப்பானிற்கு ரகசியப் பயண மொன்றை மேற்கொண்ட சுபாஷ் சென்ற விமானம் தாய்வானிற்கு மேலாக சுட்டுவீழ்த்தப்படுகிறது. ஒரு பெரும் விடுதலை வீரனின், கிடைக்காத உடலும் சமுத்திர அலைகளோடு சங்கமிக்கின்றது. தலைமையையும், உதவி நாடுகளயும் இழந்த INA முடிந்தவரை போரிட்டாலும், இறுதியில் பிரிட்டிஷ் படைகளினால் கைது செய்யப்படுகிறது. யேர்மனியிலிருந்த பல இந்தியவீரர்கள் பிரிட்டனின் பழிவாங்கல் காரணமாகச் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். தங்களுக்காகப் போராடியவர்களை- 'இந்தியன்' என்று பிற்காலத்தில் உணரத்தலைப்பட்டவர்களை- பிரிட்டன் வஞ்சம் தீர்த்துக் கொள்கிறது. அவர்களுக்குப் பிடிக்காத 'வன்முறையைத் தேர்ந்தெடுத்த வர்கள், அந்த வன்முறைக்கே பலியாகி விட்டார்கள்' என்ற விறைத்த மனப்பாங்கே அதற்கு முக்கிய காரணம்.

இருந்தும் வீரசுதந்திரம் வேண்டி நின்றோரின் விடுதலை உணர்வு மங்கி விடுமா? அதிலும் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தலைமையிலான INA -India National Army இன் வீரர்கள் வித்தான விடுதலையை வேண்டி நின்றவர்கள் மண்ணிலே: அச்சம்பவம் 1946ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18ஆம் நாள் மும்பாய்த் துறைமுகத்தில் நிகழ்ந்தது. 'நிகழ்த்தது' என்று சொல்வதை விட மீண்டும் 'பிரிட்டனின் அகலப்பதித்த ஆக்கிரமிப்புக் கால்களிடை'யே பற்றி வைக்கப்பட்டது என்று குறிப்பிடலாம். பிரிட்டிஷ்-இந்திய றோயல் கடற்படையில் வேலை செய்து வந்த இந்திய வீரர்களின் கப்பல் ஒன்றில் மும்பாயில் தொடங்கி கொழும்பு, சென்னை, கராச்சி என்று பல துறைமுகங்களிலும் நின்று கொண்டிருந்த 58 கடற்படைக் கப்பல்களை இப்புரட்சித்தீ பற்றிக்கொண்டது. அங்கிருந்த வெள்ளை அதிகாரிகளைக் கைதுசெய்த இந்தியர்கள், சிறையில் அடைக்கப்பட்டு வாடும் சுபாஷின் இந்தியத்தேசிய ராணுவ வீரர்கள் உட்பட அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும் என்பது உட்பட தமது நியாயமான கோரிக்கைகளை முன்வைத்தனர். மதம், மொழி பேதமற்ற இவர்களின் போராட்டத்திற்கு மக்கள் ஆதரவு பெருகியது. வீதியில் இறங்கி போராட்டங்கள் மூலம் தமது ஆதரவைத் தெரிவித்தனர். கோரிக்கைகளுக்கு இணங்காமல் மசியவைக்க நினைத்த பிரிட்டன், தாக்குதல் நடவடிக்கைகளில் இறங்கியது. இருந்தும் இன்னுமொரு தலையிடியை அவர்கள் இனம் கண்டனர். ஏனைய றெஜிமென்றகளில் இருந்த இந்தியர்கள் ஒத்துழைக்க மறுத்து விட்டார்கள். இந்த வேளையில் காந்தி வெளியிட்ட அறிக்கையைப்பாருங்கள் 'அவர்கள் மேலிருந்து கீழ்வரை ஒன்றுபட்டிருப் பின் அதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. இருந்தும் அது இந்தியாவைக் கிளர்ச்சியாளர்களிடம் ஒப்படைப்பதற்குச் சமன். அதை விட நெருப்பில் விழுந்து அழியவே விரும்புகிறேன், "அகிம்சைக் கொள்கையை மீறிய பாவகரமான சேர்க்கை' எனக் கண்டித்தார். (ஆதாரம்: 07.04.46 ரஜ்னி பாமிதத்- இன்றைய இந்தியா). இது குறித்து காங்கிரஸ் தலைவர்கள் தெரிவித்தவற்றைப் பாருங்கள் கப்பற்படை மாலுமிகள் கலகம் செய்திருக்கக் கூடாது எனும் தளபதியின் (பிரிட்டிஸ்) கூற்றை ஆதரிக்கிறேன் "மற்றும்" வேலை நிறுத்தங்களும், மக்களின் ஹர்த்தால்களும் அவசியமற்றது. பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுடன் பிணக்குக் கொள்வதற்கு, உடனடியாக காரணம் எதுவும் எழவில்லை ''இவ்வாறு தெரிவித்த இவர்கள் கடற்படைப்புரட்சியாளர்களை தமது நடவடிக்கைகளை நிறுத்தி, பிரிட்டனிற்குப் பணிந்து நடக்குமாறு தெரிவித்தார்கள். தங்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டிய தமது அரசியல் தலைவர்களின் இவ்வாறான கூற்றுக்களால் மனமுடைந்த கடற்படை வீரர்கள், 1946 பெப்ரவரி 23ஆம் நாள் தமது ஐந்து நாள் புரட்சியை ஒருசில உடன்பாடுகளின் அடிப்படையிலும், வாக்குறுதிகளினாலும் முடிவுக்குக் கொண்டு வந்தனர்.இருந்தும் பின்னர் வாக்குறுதிகள் காற்றிலே பறக்க விடப்பட்டன.

இவ்வாறாக விடுதலை வேண்டி நின்றவர்கள் ஓயாமல் ஒவ்வொரு பொழுதும் எழுந்த வண்ணமே இருந்தார்கள். இந்த அடிப்படையில் தான் எதிர்ப்பதை விட அதாவது 'சண்டைக் காரனிடம் தோற்பதை விட சமரசவாதிகளுடன் அமைதியாகிப் போய்விடலாமே' என்று நினைக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு பிரிட்டன் உட்பட்டது. 'ஒரேயடியாக விழுந்து விடாமல், மீசையில மண்ணும் படாமல்' சூரியன் அஸ்தமிக்காத தேசம், இந்திய விடயத்தில் தன்னைச் சுதாகரித்துக் கொண்டது.

ஒரு பெரிய தேசத்தின் எதிர்ப்பைச் சம்பாதித்தது, போதாதென்று யதார்த்தப் போக்கியல் காரணமாக அவர்களைச் சோசலிசத்திடம் காவு கொடுத்து விட்டு, காலம்காலமாய் கண்ணீர் சிந்துவதற்குப் பதிலாக, காந்தியின் அகிம்சைப் போராட்டத்திற்கு மதிப்பளித்து 'விடுதலை கொடுத்த கன்னியவான்களாக பிரிட்டன் வெளியேறியது: போகும்போது ஜின்னா கேட்டுக் கொண்டதற்கொப்ப பாக்கிஸ்தானைப் பிரித்தெடுத்து, அவருக்கு பரிசளித்து விட்டுப் போனது. இலங்கையில் தமிழ்த்தரப்பு கேட்ட அரைகுறை உரிமைகளைக் கூடக் கொடுக்கத் தவறிய பிரிட்டன், ஏன் ஜின்னா கேட்ட வுடன் நாட்டையே பிரித்துக் கொடுத்து விட்டது என்று கேட்கிறீர்களா? 'தங்களின் பிற்காலத்திற்கு `உதவுமே' என்ற பிரிட்டனின் பெருந்தன்மை தான்:

எனினும் பிற்காலத்தில் சுபாஷ் சத்திரபோஸ் உட்பட இந்திய தேசிய ராணுவத்தினருக்கு அளிக்கப்பட வேண்டிய மரியாதையை உரிய முறையில் இந்திய அரசு அளிக்கப் பின்னடித்தது. விடுதலைப் போராட்டத்தில் அவர்கள்பங்கு பின்தள்ளப்பட்டது. மூத்த தென்னிந்திய அறிஞர் குறிப்பிடுவது போல, தென்கிழக்காசியச் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்த அப்போதைய பிரதமர் ஜவகர்லால் நேரு, அங்கு வாழ்ந்த இந்தியர்களின் விருப்பிற்கிணங்கிசுபாஷின் இந்தியத் தேசிய ராணுவ வீரர்களின் கல்லறைகள் இருந்த இடத்திற்குச் சென்று அஞ்சலி செலுத்த, மறுத்து விட்டார். ஆயிரம் ஆயிரமாக பாரதமாதாவின் விடுதலைக்காய் வீழ்ந்தவர்கள் வெறுமனே வன்முறையாளர்களாகக் கணிக்கப்பட்டு மிதவாதிகளால் வரலாற்றில் பின்தள்ளப்பட்டனர். ஆனால், மேன்மை தங்கிய மகாராணியின் படையைச் சேர்ந்த ரயர் என்பவன் நடாத்திய ஜீலியன் வாலாபாக் -படுகொலைக்காக, பிரிட்டிஸ் மகாராணியார் இந்தியாவிற்கு வந்திருந்த வேளை 'மன்னிப்புக் கோரவேண்டும்' என்ற சிலரது நியாயமான கோரிக்கை, இந்திய அரசியல்வாதிகளின் கண்டனத்திற்கு உள்ளானது. மேன்மை தங்கிய மகாராணியை அவமதிக்கும் செயல் அது என்று அவர்கள் வாதாடினார்கள்.


(தொடரும்)

**சு.ஞாலவன்**

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*

# பாவலன் பதில்கள்



*பாவலரே!*

*இந்த A9 வீதியில் விபத்துக்கள் நாளாந்தம் நடைபெறுகிறது ஆனால் சிலர் ஒரு மோட்டார் சைக்கிளில் பலரை ஏற்றிப் போகிறார்களே இவர்கள் எப்போது திருந்தப் போகிறார்கள்?*

யசோ.
புதுக்குடியிருப்பு.

கூண்டோடு கைலாசம் போக நினைப்பவர்கள் திருந்தவே இடமில்லை.

*பாவலரே!*

*தாங்கள் சமாதான பிரியரா? யுத்தப் பிரியரா?*

ராணி.
யாழ்ப்பாணம்.

நிச்சியமாக சமாதானத்திற்கான யுத்தப் பிரியரல்ல.....

*மகளிருக்கான உதைப் பந்தாட்டம் பார்த்தீர்களா? அது பற்றி தாங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?*

சுபாஸ்.
யாழ்ப்பாணம்.

மகளிர் உதைபந்தாட்டமென்றாலும் சரி, ஆண்கள் உதைப்பந்தாட்டமென்றாலும் சரி உதை வாங்கி வதைபடுவது பந்து மட்டும் தானே...?

*இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த அமெரிக்கா கடும் முயற்சி செய்கிறதா?*

வினோயா.
கொக்குவில்.

ஆமாம்.... போர்ப்பயிற்சிகளையும் ஆயுதங்களையும், யுத்தக் கப்பல்களையும் அரசுக்கு வழங்கி கடுமையாக முயற்சி செய்கிறது.

*பாவலரே!*

*சந்திரிகா அம்மையார் கட்சித் தலைவர் பொறுப்பில் இருந்து விலகியது ஏன்?*

ராயு.
வவுனியா.

கட்சித் தலைவராக பொறுப்பிலிருந்து என்ன பயன். அதிகாரத்தை ஜே.வி.பியினரல்லவா கைப்பற்றிக் கொண்டுள்ளனர்.

*அன்பின் பாவலரே!*

*சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் தொகை அதிகரித்த அளவில் அபிவிருத்தி அதிகரிக்கவில்லையென்கிறார்களே! உண்மையா?*

குமார்.
முல்லைத்தீவு.

சர்வதேச தொண்டர் நிறுவனங்களைச் சேர்ந்தவர்களின் வாழ்க்கை நல்ல அபிவிருத்தியை அடைந்து வருகிறது என்பதும் உண்மையே.

*பாவலரே வணக்கம்!*

*மூத்த இலக்கியவாதிகளிற்கும் இன்றைய இளம் இலக்கியவாதிகளிற்கும் இடையில் தாங்கள் காணும் வித்தியாசம் என்ன?*

பாலசிங்கம் - வவி
ஆனைவிழுந்தான்.

முன்னவர்களுக்கு இருப்பது ஆளுமையுடன் கூடிய அகங்காரம்.

பின்னவர்களுக்கு இருப்பது அறியாமையுடன் கூடிய அகங்காரம்.

*ஐயா பாவலரே!*

*தமிழீழம் பெறுவது விடுதலைப்புலிகளின் கொள்கை அது பற்றி உதாசீனமாகக் கதைக்கும் கும்பல்களுக்கு நீங்கள் கூறும் கருத்து என்ன?*

தர்சிகா.
திருவையாறு.

வேலையற்ற வீணர்களின் மூளையற்ற வார்த்தைகள் பற்றிக்கருத்துக் கூற நானொன்றும் முட்டாளில்லை தம்பி...

*Dear பாவலரே!*

*தேசத் துரோகி கருணா டக்ளஸ் தேவானந்தாவுடன் சேர்ந்து ஒரு கட்சி ஆரம்பிக்கப் போகிறார்களாமே அக்கட்சி நிலைக்குமா? பதில் தரவும்.*

ஐ.சாந்தன்
இலுப்பைக்கடவை.

கடந்த பொதுத் தேர்தலில் தேசத்துரோகிகளின் கட்சிகளுக்கு தமிழீழ மக்கள் கொடுத்த வரவேற்பைப் பற்றி தெரிந்து கொண்டும் இப்படிக் கேட்கலாமா?

*அன்பின் பாவலர் அவர்களே!*

*"வணக்கங்கள் பல" ரி.பி.சி என்ற கழுதை (அவலக்) குரல் ஓசை (சேவை)யில் ஊரோடு உறவாடுகிறார்களா? அல்லது உயிருக்காக ஊசலாடுகிறார்களா? பாவம் இவர்களின் சேடமிழுப்பிற்கு என்ன பால் கொடுத்தால் மக்கள் நிம்மதியடைவார்கள் என்பதை அறிய ஆவலுடையோம் சொல்வீர்களா?*

எஸ்.எஸ்.சின்னத்தம்பி.
வட்டக்கச்சி.

சேடமிழுக்கிற 'கேஸ்' களுக்கு பால் கொடுத்தென்ன? பன்னீர் கொடுத்தென்ன? அவலக்குரல் கொடுக்கும் கழுதை அடிவாங்கியே சாகும்!

*ஈழத்தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிப் போக்குப் பற்றிக் கேட்கப்படும்போதெல்லாம் அதன் 'இன்னும் வாழும் முதுபெரும் முன்னோடி' ஒருவர் 1983 இல் வெளிவந்த ஒரு சிறுகதையைப் பற்றியும் அதன் படைப்பாளியைப் பற்றியும் மட்டுமே கூறி ஈழத்தமிழ்ச் சிறுகதை உலகத்தைத் திறனாய்வு செய்கிறார். அதற்குப்பிறகு அவர் எதுவுமே வாசிக்கவில்லையா? அல்லது எழுதிய சிறுகதைகளெல்லாம் வீண் வேலையா? குற்றுயிராய்க் கிடந்து நாங்கள் குமுறியழுத வேதனை வாடைகளைத் தாங்கி எழுந்த போர்க்காலப் படைப்புக்கள் அவருக்குப் போதவில்லையோ? தயவு செய்து சொல்லும்! இந்த முன்னோடி எதற்குப் பின்னோடுகிறார்?*

சு.ஞாலவன்.
கிளிநொச்சி

1983 க்குப் பின்னர் வெளியான போர்க்காலப் படைப்புக்களை விமர்சிக்கும் தகுதி பெற்ற விமர்சகர்கள் போராடும் மக்களோடு மக்களாக வாழ்ந்து போர்க்கால அனுபவங்களை உணர்வு பூர்வமாக உள்வாங்கியவர்களுக்கு மட்டுமே இருக்கும். ஏனையோரால் அதனைச் செய்ய முடியாது. அந்த விமர்சன முன்னோடியான அறிஞர் போர்க்கால இலக்கியங்களை விமர்சிக்கும் தனது தகுதி குறித்த எல்லையை புரிந்து கொண்டு மட்டுப்படுத்தியுள்ளார். அவ்வளவுதான்.




"என்னடாப்பா சாணுக்கொண்டு முழத்துக்கொண்டெண்டு காவல் துறையாக்கள் நிக்கினம்."

"ஹெலி வரப்போகுது போல"

"அதுதான் ரூட்பஸ் ஓடுற மாதிரி நாளாந்தம் வருதே"

"அது சரி முன்னை ஏனைன் ரோட்டப் பிடிச்சு ஓடுறவங்கள் இப்ப ஏன் உதால வாறாங்கள்.

"அது ஒண்டுமில்லை, புலிகளின்ட எயாப் போட்டில இறங்கப் பாக்கினம் போல"

தொடர்ந்து உப்புடிப் போனா இறக்கியும் காட்டுவாங்கள் பொடியள்."

* * *

"ஐயா விவசாய முயற்சியளுக்குக் கடன் குடுக்கிறியளாம். எனக்கு நெற்செய்கைக் கடன் தருவியளோ...?"

"தூரம கொஞ்சம் உதில இருங்கோ." கந்தோர் திறக்கட்டும். (சிறிது நேரத்தின் பின்)

"ஐயா! விவசாய முயற்சியளுக்குக் கடன் குடுக்கிறியளாம்...?"

"ஓமய்யா.... பொறுமையா இருங்கோ கதிர் வரட்டும் தருவார், பதிஞ்சு குடுங்கோ."

"கதிர் வந்தாப் பிறகு எனக்கேன் கடன்"

"ஐயா- இது நெற்கதிரில்ல இணைப்பாளர் கதிர்."

* * *

"அப்பா நான் பள்ளிக்கூடத்தில ஒரு நாடகத்தில நடிக்கப் போறன்."

"சந்தோசம், என்ன பாத்திரம்."

"அப்பா வேசம்தான்."

"வேண்டாம், ஏதாவது வசனம் பேசுற பாத்திரமா கேட்டு நடி."

* * *

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -82



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள் -82

.................................................................
.................................................................
.................................................................
.................................................................

பெயர் : .................................................... 
முகவரி : ....................................................
....................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -81



க.ஜெயக்குமார் ஆயம்,
புளியங்குளம்.
கிளிநொச்சி.

### பரிசுக்குரிய வரிகள்

*கொடியசிங்கள அரசே!நீ செய்த கொடூர படுகொலைகளால்*
*இங்கே அநாதையாகவிருக்கும் சிறுமி போன்று*
*ஆயிரமாயிரம் பிஞ்சுமழலைகள்*
*அநாதைகளாக்கப்பட்டுள்ளது என்பதை உணர்ந்து கொள்.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*வழிமேல் விழிவைத்து யாரைநீயும்*
*தேடுகின்றாய்? தமிழர் என்று பிறந்ததினால்*
*தலைவிதியும் இது தானோ தயங்காதே*
*நாளைய உலகம் நம்கையிலே*

ந.ஜெகதீஸ்வரி,
உருத்திரபுரம்.

*யுத்தத்தின் சுவடுகளோ இன்னும் மாறவில்லை*
*சிறுமியின் நெஞ்சிலோ பெரும் ஏக்கம்*
*மீண்டும் ஒரு யுத்தம் வருமா?*
*அதிலிருந்து எப்படி மீள்வது என்று.*

கே.லிங்கேஸ்வரன்,
உதயநகர்.

*பிஞ்சு மழலையின் புன்னகை எங்கே*
*இனவெறி பிடித்தவரின் பாதுகாப்பு வலயத்துள்ளா*
*இல்லை கடலுக்கு சென்ற தந்தையார்*
*சிறைக்குள் போன நிலனவிற்குள்ளா?*

எஸ்.பொழில்வண்ணன்,
முள்ளியவளை.

*உருமாறிய ஓலைக்குடிசையின் வாயிலில்*
*உறவுக்காய் காத்திருக்கும் - சின்னவள்*
*முழுமனதிலும் தைரியமோ?- ஆம் இவள்*
*தானைத் தலைவனின் தரணி நங்கையல்லவோ!*

மீ.இதயசிவதாஸ்,
உருத்திரபுரம்.

*எத்தனை நாள் இப்படி நீ ஏங்குவதோ கண்ணே அழிந்த*
*சொத்துக்கள் அளப்பரியது என் செய்வோம்*
*பொறுமை காத்து நிற்கின்றார் எம் தலைவன் -நாம்*
*பொறுத்திருந்து பார்ப்போம் சிறுது காலம்.*

கு.இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.

# எதென்ஸ்–2004





யாழ்ப்பாணம் வணிகர் கழகம்
JAFFNA CHAMBER OF COMMERCE

## யாழ்.வணிகர் கழகம் நடத்தும்
## மாபெரும் யாழ். வர்த்தகக்கண்காட்சி–2004

### ஒகஸ்ட் 27 தொடக்கம் 29 வரை யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி

தென்னிலங்கை உற்பத்தியாளர்களும் உள்ளூர் உற்பத்தியாளர்களும் இறக்குமதியாளர்களும் பங்குபற்றும் மாபெரும் வர்த்தகக்கண்காட்சி ஒகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை யாழ். மத்தியகல்லூரியில் நடைபெறும். இக்கண்காட்சியில் உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், வர்த்தகர்கள், தொழில்நுட்பநிறுவனங்கள், சிறுகைத்தொழில் சார்ந்தவர்கள் மற்றும் ஆர்வமுள்ளோர் அனைவரையும் இதில் பங்குபற்றிப்பயன்பெறும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

(சி-10128)



## குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபத்தினரின்
## மாபெரும் பரிசுத்திட்டம் அறிமுகம்

வாடிக்கையாளர் அட்டை மூலம்
பல பரிசுகளை வெல்லும் அரியவாய்ப்பு!

வணிக நிறுவனங்கள் எதிலும் இல்லாத
இவ் அரிய வாய்ப்பை தவற விடாதீர்கள்!

இவ் அட்டை பெறப்பட்ட நாளிலிருந்து
ஒரு வருடகாலத்திற்கு செல்லுபடியாகும்.

- ★இவ் அட்டை மூலம் 10000/= பெறுமதியான பொருள் கொள்வனவு செய்தவுடன் அப்பெறுமதியின் 5% கழிவை உடன் பெற்றுக்கொள்ளலாம்.
- ★குலுக்கல் பரிசாக 10000/= ரூபாய் கொள்வனவு (பகுதிபகுதியாகவோ, ஒரே தடவையிலோ)நிறைவு செய்யப்பட்ட அட்டையின் இலக்கங்கள் நான்கு மாதத்திற்கு ஒரு தடவை குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு முதலாவது பரிசாக ஒரு பவுண் தங்க நாணயம் வழங்கப்படும்.
- ★இவ்வட்டை ஒரு வருடம் பூர்த்தியாகும் வரைக்கும் குலுக்கல் எண்ணுடன் சேர்க்கப்படும்.
- ★பரிசில் வழங்கப்பட்ட எண் அட்டை மீண்டும் குலுக்கல் எண்களுள் சேர்க்கப்படமாட்டாது.
- ★இவ் வாடிக்கையாளர் அட்டை 30.09.2004 வரைக்கும் வழங்கப்படும்.
- ★இவ் அட்டை மொத்தவியாபாரத்திற்கு வழங்கப்படமாட்டாது.
- ★ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.

**குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்**
யாழ்சாலை,
கிளிநொச்சி.
T.P. 021-2285971

SM Graphics
(சி-10120)



## EXPOAIR
your friend in the skies

## எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்

யாழ்–கொழும்பு பயணத்தின் போது
ரோல்ஸ் ரோய்ஸ் இயந்திரத்தின்
சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்.

ஒதுக்கீடுகளுக்கு
அழையுங்கள்

021-2223891/6297, 0772348888/2349999,
0112372952/953, 0112360290/291.
e-mail- jaffna@expoavi.com
e-mail- reservations@expoavi.com

**இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை**

SM Graphics
C-10120


இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 20 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.